




# ஐரோப்பியப் பயணம்

முனைவர் மு.தமிழ்க்குடிமகன்





# ஐரோப்பியப் பயணம்

முனைவர்
மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பி.எச்டி
(தமிழக சட்டப் பேரவை முன்னாள் தலைவர்)

வெளியீடு :
அறிவொளி பதிப்பகம்
142, கேஎம்எசெல் குடியிருப்பு,
தல்லாகுளம், மதுரை: 625002

முதற்பதிப்பு : 1.7.1994

உரிமை : த. வெற்றிச்செல்வி


நூல் உருவாக்கம் : வா.மு.சே. திருவள்ளுவர்

விலை : உருபா 25-00

அச்சும் அமைப்பும் :
சேதுமதி அச்சகம்,
சென்னை - 600 111.
✆ 4871375

# தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர்

# கலைஞர் அவர்களின்

# அணிந்துரை

வெளிநாட்டுப் பயணத்தில் எனக்கு எப்போதுமே அவ்வளவாக ஆர்வம் இருந்ததில்லை. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஒருமுறை ஐரோப்பிய நாடுகளில் இருபது நாட்கள் அந்த நாடுகளின் அழைப்பின் பேரில் சென்று வந்தேன். அந்தப் பயணம் குறித்து "இனியவை இருபது" எனும் தலைப்பில் ஒரு புத்தகமும் எழுதினேன். அடுத்து, அமெரிக்க நாட்டு அரசின் அழைப்பின் பேரில் சென் றிருந்தேன். அந்த வாய்ப்பில் கண் சிகிச்சையும் செய்து கொண்டேன். அப்போது இந்தியாவில் 'பங்களாதேஷ்' போர் தொடங்கி விட்டதால், சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை ரத்துச் செய்து விட்டு உடனடியாக இந்தியாவுக்குத் திரும்பி விட்டேன், இந்திய அரசு விருப்பத்தின் பேரில்.

உலகத் தமிழ் மாநாட்டுக்கென ஒருநாள் மட்டும் மலேசியா சென்று திரும்பினேன். ஐரோப்பிய நாடுகள் சென்றிருந்த போது பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினேன்.

இந்தச் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் சுவையானவை, தேவையானவை, நிரம்பக் கற்றுத் தருபவை என்றாலும்; எனக்கென்னமோ ஒரு "கிணற்றுத் தவளை" புத்தி; காரணம் என்னைக் கொக்கி மாட்டி இழுத்துக் கொண்டிருக்கும் அவ்வளவு பணிகள்! பிரச்சினைகள்!

ஆனால் நமது முனைவர் தமிழ்க்குடிமகனார் அவர்களுக்கோ இந்த வெளிநாட்டுப் பயணங்கள் பாலில் சர்க்கரை கலந்தாற்போல; பலாவில் தேன் கலந்தாற் போல! பயணங்களை மேற்கொள்வது மட்டுமல்ல; தான் பார்த்ததை, படித்ததை, எல்லோரும் தெரிந்து பயன் பெறட்டும் என்று அழகான நூலாக ஆக்கி விடுவார். என்னிடம் ஓர் அணிந்துரையும் வாங்கி விடுவார். அவர் சென்று வந்த நாடுகளைப் பற்றி அவர் தீட்டும் எழுத்தோவியங்களுக்கு

அணிந்துரை தீட்டும் அந்த வாய்ப்பில் அந்த நாடுகளில் உள்ளவைகளையெல்லாம் நானும் கண்டு களித்து விடுவேன்.

இந்த நூல்; நான் சென்று வந்த நாடுகளைப் பற்றி என்றாலும் 25 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நாடுகள் எப்படி மாறியுள்ளன என்பதை இவர் மூலம், இந்த நூல் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இந்த நூலைப் படிக்கத் தொடங்கினால் எடுத்த எடுப்பிலேயிருந்து இறுதி வரையில்; அந்த நாடுகளுக்கும் நமது நாடுகளுக்குமிடையே உள்ள நிலைமைகளைப் பற்றிய ஒப்பீடுதான்!

பெருமூச்சு விட்டுக் கொண்டு சில ஒப்பீடுகள்! பெருமிதமுடன் சில ஒப்பீடுகள்!

"ஏர் இந்தியா"வைப் பற்றி எழுதுகிறார்; இந்த வயதில் இவருக்கு எவ்வளவு ஆத்திரம் பாருங்கள்! இதோ அவர் எழுதியது :-

> "சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் பிற நாடுகள் போட்டி போட்டு முன்னேறுகின்றன நம் நாட்டில் அதிலும் கவனம் செலுத்தப் படவில்லை. ஒரு பயணி என்ற முறையில் ஒரு கருத்து. ஏர் இந்தியாவில் உள்ள இரண்டு விமானப் பணிப் பெண்கள். ஒருவர் பிந்துகோசு மாதிரி; மற்றொருவர் முருங்கைக்காய் மாதிரி; அதிலும் ஒரு அம்மாவைப் பார்த்தால் நம் வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்க்கும் பட்டம்மா எவ்வளவோ தேவலாம் போங்கள்"

தன் துணைவியார் இந்த நூலைப் படிக்க மாட்டார் என்ற எண்ணமா? துணிவா? படித்தாலும் தன்னைப் பற்றி ஐயங் கொள்ள மாட்டார் என்ற நம்பிக்கையா?

உண்மையிலேயே தமிழ்க் குடிமகனார் இந்த நூலை ஒரு தனி உற்சாகத்துடன் தான் எழுதியிருக்கிறார். அதனால்தான் அவருடன் பயணம் செய்த முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில்; "சில வெளிநாடுகளில் கி.ஆ.பெ.வி. "சம்" மென்று பயணம் செய்தார்" என எழுதி; தனித்தமிழைக் கூடச் சற்று மறந்து போயிருக்கிறார்.

விமானம் பழுதாகி உரோமுக்குப் போகாமல், மீண்டும் துபாய்க்கே திரும்பிக் கொண்டிருந்த நிகழ்ச்சியை ஒரு விறுவிறுப்பான நாடகக் காட்சியாகவே சித்தரித்திருக்கிறார். அந்த நிகழ்ச்சியில் கி.ஆ.பெ.வி. பற்றிய குறிப்பு எள் முனையளவு தான் எனினும் முள் முனையாகக் குத்துகிறது நெஞ்சில்!

இதற்கு நேர் மாறாக ஓர் நகைச்சுவைச் சம்பவம். உரோமில் நண்பர் வீட்டில் கி.ஆ.பெ.வி. அவர்களை, தூங்கும் போது தொல்லை கொடுக்க வேண்டாமென்று தனியாக விட்டுவிட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு இவர்கள் எல்லோரும் கடைத் தெருவுக்குப் போனதும்- திரும்புவதற்குள் விழித்துக் கொண்ட முத்தமிழ்க் காவலர், வீட்டுச் சிறை கண்டு வெகுண்டு, முனிவரைப் போல் சாபம் கொடுக்கும் பாணியில் நின்றதும், பின்னர் சாந்தமடைந்ததும் நல்ல நகைச்சுவை தானே!

தமிழ்க்குடிமகனின் கண்ணை விட்டகலாத வெளி நாட்டுச் சுவரொட்டிகள்; பரவாயில்லை, நன்றாக ரசித்திருக்கிறார்!

தமிழ்த் தொண்டு ஆற்றிடும் திருப்பணிக்காகப் பெர்லின் சென்றவர்கள் பெருங்கவிக்கோ, தமிழ்க் குடிமகன், கி.ஆ.பெ.வி. மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அப்பணியையும் நல்லதோர் திருப்பணியாகவே நிறைவேற்றியுள்ளனர்.

திரும்பும்போது பெட்டிகளைத் தவறவிட்டதும், அவை திரும்பி வரப் பல நாட்கள் ஆனதும், வந்தவை பெருச்சாளிகள் வாய்பட்டு, "இவைதானா எஞ்சியவை" என இந்நூலாசிரியரைப் பெருமூச்சு விடச் செய்ததும் - சுவை நிறைந்த செய்திகளாகும்.

எல்லாச் செய்திகளையும் சங்கிலித் தொடர்போல - வசீகரமான வாக்கியங்களைக் கொண்டு அமைத்திருக்கும் தமிழ்க்குடிமகனாரை வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன். இனியொரு பயணம் மேற்கொள்ளும்போது "ஏர் இந்தியா" எச்சரிக்கையாக இருக்குமாக!

அன்புள்ள
மு. கருணாநிதி

# நூலாசிரியர் முன்னுரை

இன்று பயண இலக்கியம் (Travelogue) ஒரு புது வகையாக வளர்ந்து வருகிறது. தமிழில் அவ்வகை இலக்கியங்கள் பெருகி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. திரு.வி.க. எழுதிய 'என் இலங்கைச் செலவு' எனும் கட்டுரையை அந்நாளில் படித்திருக்கிறோம். 'உலகம் சுற்றும் தமிழர்' எனும் பெயர் பெற்ற ஏ.கே. செட்டியார் எழுதிய நூல்கள் இளமைக் காலத்தில் நமக்குப் பல வெளிநாடுகளை அறிமுகப்படுத்தின. திட்டமிட்டு வெளிநாடு சென்று அதையே இதழ்களில் கட்டுரையாகவும், பின்னர் நூலாகவும் கொண்டு வரும் பழக்கமுடைய மணியம் பல நூல்களைத் தந்துள்ளார். நான் முதன் முறை அந்தமான்-நிக்கோபார் தீவுக்குச் சென்றபோது ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு இங்கு வந்ததும் ஒரு நூலாக அதனை ஆக்கிப் படைத்தேன். தலைவர் கலைஞரின் அருமையான அணிந்துரை. பின்னர் அதனையே மதுரையில் வெளியிட்டு, அவர் ஆற்றிய அருமையான உரை. அந்தமானைப் பாருங்கள்' எனும் அந்த நூல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் படித்துப் பயன் பெறும் வாய்ப்பு அமைந்தது. இன்றும் அந்தமான் செல்பவர்கள் அந்த நூலின் ஒரு பதிப்பை வாங்கிப் படித்தபடியே புறப்படுவதைப் பலர் வாயிலாக அறிகிறேன். இந்த உந்துதல் தொடர்ந்து பயண நூல் எழுதும் வேகத்தைத் தந்தது. அதனால் இம்முறை பெர்லின், பாரிசு, உரோம் பயணம் சென்றபோது எப்படியும் ஒரு பயண நூல் எழுத வேண்டும் எனும் முடிவோடிருந்தேன். அதன்படி இன்று ஒரு பயண நூல் உங்கள் கையில் தவழ்கின்றது. இந்த நூலை எப்படியோ கொண்டு வந்து விட்டேன். ஆனால் பேரவைத் தலைவராக இருந்தபோது இலண்டன், அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், துபாய் ஆகிய நாடுகட்கும், நகரங்கட்கும் சென்றிருந்தேன். பல இடங்களைப் பார்த்தேன். பல நண்பர்கள் அங்கே. பல குறிப்புகளையும் திரட்டிக் கொண்டு வந்தேன். ஆனால் நான் எவ்வளவோ விரும்பியும் ஒரு பயண நூலை உருவாக்க முடியாமலேயே போய் விட்டது. இங்கே வந்ததும் சட்டமன்ற நிகழ்ச்சிகள் வெளித் தொகுதிகளில் விழாக்கள், என் தொகுதியின் பணிகள் என்று என் நேரம் விழுங்கப்பட்டுவிட்டது. நூலை எழுதுவதற்கு உட்காரக் கூட முடியவில்லை. அதில் பல பயனுள்ள செய்திகளைச் சொல்ல முடியாமலேயே போய் விட்டது.

இன்று அரசியல் கடமைகள் இருந்தாலும் வெளியூர் நிகழ்ச்சிகள் பல சுற்றி வளைத்துக் கொண்டாலும் அவற்றை யும் மீறி நூலை முடித்து விட்டேன்.

1977, 81, 85, 87 ஆம் ஆண்டுகளில் நான்கு முறை மலேசியா சென்ற நான் அந்த நாட்டைப் பற்றி எழுத நினைத்தேன். ஆனால் மிகப் பலர் மலேசியா நாட்டைக் குறித்து எழுதி விட்டதால் வேண்டாமென்று நினைத்தேன். ஆனால் என் குறிப்புகள் வேறு ஒரு கோணத்தில் சிறப்பாக உள்ளன. எனவே 'மனங்கவர் மலேசியா' எனும் தலைப்பில் நூலை வெளியிட்டு விடுவது எனும் உறுதியோடிருக்கிறேன். அடுத்தது அந்த நூல்தான்.

இந்த நூலில் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பல செய்தி களைக் கூறியுள்ளேன். இட்லரின் பேயாட்டம், பாரிசு நகரின் பல சிறப்புகள் உரோம் நகரில் ஏற்பட்ட அனுபவங்கள் என்று பலவகையான செய்திகளை அடக்கியுள்ளேன். நமது இந்தியாவையும் ஒப்பிட்டுள்ளேன். என் பயணம் இனிப்பா கசப்பா என்று கேட்டால் சொல்லமுடியாத அளவுக்கு இரண் டும் இருந்ததைக் கூறியுள்ளேன். அந்த நாடுகளைப் போல் என் நாடு முன்னேறாதா எனும் ஏக்கத்தைப் புலப்படுத்தி யுள்ளேன்.

இனி, மேலும் உள்ள செய்திகட்கு அன்பர்கள் உள்ளே புரட்ட வேண்டும் எனும் குறிப்போடு நிறைவு செய்கிறேன்.

நூல் முழுவதையும் படித்துப் பார்த்து எங்கள் பேராசான் தலைவர் கலைஞர் அவர்கள் மிகச் சிறந்த அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இடையில் உடல் நலக் குறைவு; எண்ணற்ற வேலைகள் என்றாலும் எனக்காக நேரம் எடுத்து என்பால் கொண்ட அன்பால் விளைந்த அந்த உரைக்கு என் தலைதாழ்ந்த வணக்கங்கள்!

வழக்கம் போல் இந்த நூலையும் உருவாக்கி அளித்த பெருமை தம்பி திருவள்ளுவனுக்கே சாரும்! எதையும் எதிர் பாராது என்மீது கொண்ட மதிப்பு ஒன்றே பெரிதாகக் கருதி உதவும் அவர் அன்புக்கு நான் என்ன கைமாறு செய்வேன்?

அட்டையின் முகப்பினை அழகுற அமைத்துத் தந்த ஓவியர் மூர்த்திக்கும், சிறப்புற அச்சிட்டு அளித்த சேதுமதி அச்ச கத்தார்க்கும் நன்றி உரியது.

நூலைப் படிப்பவர்கள் தாராளமாகப் பெர்லினிலும், பாரி சிலும், உரோமிலும் உலவி வரலாம். நன்கு சுற்றிப் பார்த்து மகிழலாம். அத்தகைய போக்கில் நூல் அமைந்திருப்ப தாகவே நிறைவு கொள்கிறேன்.

அன்பன்

**தமிழ்க்குடிமகன்**

# நூலாசிரியர் முன்னுரை

இன்று பயண இலக்கியம் (Travelogue) ஒரு புது வகை யாக வளர்ந்து வருகிறது. தமிழில் அவ்வகை இலக்கியங்கள் பெருகி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. திரு.வி.க. எழுதிய 'என் இலங்கைச் செலவு' எனும் கட்டுரையை அந்நாளில் படித்திருக்கிறோம். 'உலகம் சுற்றும் தமிழர்' எனும் பெயர் பெற்ற ஏ.கே. செட்டியார் எழுதிய நூல்கள் இளமைக் காலத் தில் நமக்குப் பல வெளிநாடுகளை அறிமுகப்படுத்தின. திட் டமிட்டு வெளிநாடு சென்று அதையே இதழ்களில் கட்டுரை யாகவும், பின்னர் நூலாகவும் கொண்டு வரும் பழக்கமுடைய மணியம் பல நூல்களைத் தந்துள்ளார். நான் முதன் முறை அந்தமான்-நிக்கோபார் தீவுக்குச் சென்றபோது ஒரு புத்து ணர்ச்சி ஏற்பட்டு இங்கு வந்ததும் ஒரு நூலாக அதனை ஆக்கிப் படைத்தேன். தலைவர் கலைஞரின் அருமையான அணிந்துரை. பின்னர் அதனையே மதுரையில் வெளியிட்டு, அவர் ஆற்றிய அருமையான உரை. அந்தமானைப் பாருங்கள்' எனும் அந்த நூல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மாணவர் கள் படித்துப் பயன் பெறும் வாய்ப்பு அமைந்தது. இன்றும் அந்தமான் செல்பவர்கள் அந்த நூலின் ஒரு பதிப்பை வாங் கிப் படித்தபடியே புறப்படுவதைப் பலர் வாயிலாக அறி கிறேன். இந்த உந்துதல் தொடர்ந்து பயண நூல் எழுதும் வேகத்தைத் தந்தது. அதனால் இம்முறை பெர்லின், பாரிசு, உரோம் பயணம் சென்றபோது எப்படியும் ஒரு பயண நூல் எழுத வேண்டும் எனும் முடிவோடிருந்தேன். அதன்படி இன்று ஒரு பயண நூல் உங்கள் கையில் தவழ்கின்றது. இந்த நூலை எப்படியோ கொண்டு வந்து விட்டேன். ஆனால் பேரவைத் தலைவராக இருந்தபோது இலண்டன், அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், துபாய் ஆகிய நாடுகட்கும், நகரங்கட்கும் சென்றிருந்தேன். பல இடங்களைப் பார்த்தேன். பல நண்பர்கள் அங்கே. பல குறிப்புகளையும் திரட்டிக் கொண்டு வந்தேன். ஆனால் நான் எவ்வளவோ விரும்பியும் ஒரு பயண நூலை உருவாக்க முடியாமலேயே போய் விட்டது. இங்கே வந்ததும் சட்டமன்ற நிகழ்ச்சிகள் வெளித் தொகுதி களில் விழாக்கள், என் தொகுதியின் பணிகள் என்று என் நேரம் விழுங்கப்பட்டுவிட்டது. நூலை எழுதுவதற்கு உட்காரக் கூட முடியவில்லை. அதில் பல பயனுள்ள செய்திகளைச் சொல்ல முடியாமலேயே போய் விட்டது.

இன்று அரசியல் கடமைகள் இருந்தாலும் வெளியூர் நிகழ்ச்சிகள் பல சுற்றி வளைத்துக் கொண்டாலும் அவற்றை யும் மீறி நூலை முடித்து விட்டேன்.

1977, 81, 85, 87 ஆம் ஆண்டுகளில் நான்கு முறை மலேசியா சென்ற நான் அந்த நாட்டைப் பற்றி எழுத நினைத்தேன். ஆனால் மிகப் பலர் மலேசியா நாட்டைக் குறித்து எழுதி விட்டதால் வேண்டாமென்று நினைத்தேன். ஆனால் என் குறிப்புகள் வேறு ஒரு கோணத்தில் சிறப்பாக உள்ளன. எனவே 'மனங்கவர் மலேசியா' எனும் தலைப்பில் நூலை வெளியிட்டு விடுவது எனும் உறுதியோடிருக்கிறேன். அடுத்தது அந்த நூல்தான்.

இந்த நூலில் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பல செய்தி களைக் கூறியுள்ளேன். இட்லரின் பேயாட்டம், பாரிசு நகரின் பல சிறப்புகள் உரோம் நகரில் ஏற்பட்ட அனுபவங்கள் என்று பலவகையான செய்திகளை அடக்கியுள்ளேன். நமது இந்தியாவையும் ஒப்பிட்டுள்ளேன். என் பயணம் இனிப்பா கசப்பா என்று கேட்டால் சொல்லமுடியாத அளவுக்கு இரண் டும் இருந்ததைக் கூறியுள்ளேன். அந்த நாடுகளைப் போல் என் நாடு முன்னேறாதா எனும் ஏக்கத்தைப் புலப்படுத்தி யுள்ளேன்.

இனி, மேலும் உள்ள செய்திகட்கு அன்பர்கள் உள்ளே புரட்ட வேண்டும் எனும் குறிப்போடு நிறைவு செய்கிறேன்.

நூல் முழுவதையும் படித்துப் பார்த்து எங்கள் பேராசான் தலைவர் கலைஞர் அவர்கள் மிகச் சிறந்த அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இடையில் உடல் நலக் குறைவு; எண்ணற்ற வேலைகள் என்றாலும் எனக்காக நேரம் எடுத்து என்பால் கொண்ட அன்பால் விளைந்த அந்த உரைக்கு என் தலைதாழ்ந்த வணக்கங்கள்!

வழக்கம் போல் இந்த நூலையும் உருவாக்கி அளித்த பெருமை தம்பி திருவள்ளுவனுக்கே சாரும்! எதையும் எதிர் பாராது என்மீது கொண்ட மதிப்பு ஒன்றே பெரிதாகக் கருதி உதவும் அவர் அன்புக்கு நான் என்ன கைமாறு செய்வேன்?

அட்டையின் முகப்பினை அழகுற அமைத்துத் தந்த ஓவியர் மூர்த்திக்கும், சிறப்புற அச்சிட்டு அளித்த சேதுமதி அச்ச கத்தார்க்கும் நன்றி உரியது.

நூலைப் படிப்பவர்கள் தாராளமாகப் பெர்லினிலும், பாரி சிலும், உரோமிலும் உலவி வரலாம். நன்கு சுற்றிப் பார்த்து மகிழலாம். அத்தகைய போக்கில் நூல் அமைந்திருப்ப தாகவே நிறைவு கொள்கிறேன்.

அன்பன்
**தமிழ்க்குடிமகன்**

## முனைவர் தமிழ்க்குடிமகன் எழுதியவை

**கையிருப்பில் இல்லாதவை:**

1) பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (முனைவர் பட்ட ஆய்வேடு)
2) புதுக் கவிதை
3) மனமாற்றம் (வரலாற்று நாடகம்)
4) செந்நீர்க் கடலில் ஈழத் தமிழன்

***திருமகள் நிலையத்தில் கிடைப்பவை***
*(55. வே.நாராயண சாலை, தி.நகர், சென்னை-17)*

| | | |
|---|---|---|
| 1) | கவிதைக் கனிகள் | ரூ. 20-00 |
| 2) | பாவேந்தர் கனவு | ரூ. 20-00 |
| 3) | கண்ணீர் | ரூ. 10-00 |

***பாரதி பதிப்பகத்தில் கிடைப்பது***
*(108, உசுமான் சாலை, சென்னை-17)*

அந்தமானைப் பாருங்கள் ரூ. 10-00

**போரொலிப் பதிப்பகம்,**
***புதுத்தெரு, திருவெண்காடு - 609 114, சீர்காழி வட்டம்***

வாழ்ந்து காட்டுங்கள்
(பொதுக் கட்டுரைகள்) ரூ. 25-00

***நேரடியாகக் கிடைப்பவை***

கலைஞர் மேல் காதல் கொண்டேன்
(இரு பகுதிகள்) ரூ. 24-00
ஐரோப்பியப் பயணம் ரூ. 25-00

---

*தொடர்புக்கு :*

***தமிழ்க்குடிமகன்*** **மயிலை, சென்னை-4 /**
**தல்லாகுளம், மதுரை-2**
**தொ.பே. 844444 (சென்னை) - 44148 (மதுரை)**

# ஐரோப்பியப் பயணம்

ஒருநாள் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தொலை பேசியில் அழைத்தார். வழக்கமாகப் பல செய்திகளுக்காக அவர் பேசுவது உண்டு. இதுவும் அப்படியே இருக்கும் என்று நினைத்த எனக்குப் புதிய செய்தி வந்தது. பன்னாட் டுத் தமிழுறவு மன்ற மாநாட்டைப் பெர்லினில் நடத்தப் போவதாகவும் அதற்கான பொறுப்பை அங்குள்ள மன்றத் தலைவர் வா.செ.குணரத்தினம் ஏற்றிருப்பதாகவும், மாநாட் டுக்குத் தலைவர் கலைஞர் அவர்களை அழைக்க வேண்டும் என்றும் அவருடன் ந்ானும் வர வேண்டும் என்றும் தெரி வித்தார். தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் செர் மனியிலிருந்தே செல்வராசா என்பவரும் வந்திருப்பதாகக் கூறினார்.

அன்று மாலையே அண்ணா அறிவாலயத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அனைவரும் சந்தித்தோம். நண்பர் கள் வேண்டுகோளை வைத்தனர். பல்வேறு அரசியல் பொறுப்புகள் காரணமாக இப்போது அவ்வளவு தொலைவு வந்து திரும்ப முடியாது என்றும் வேண்டுமானால் பேரா சிரியரை அழைத்துச் செல்லுங்கள் என்றும் கலைஞர் கூறி னார். பக்கத்தில் பேராசிரியரும் இருந்ததால் தோழர்கள் உடனே தங்கள் வேண்டுகோளைப் பேராசிரியரிடம் வைத்தனர். பேராசிரியரும் சில சூழல்களைச் சுட்டிக்காட்டிச் சனவரி மாதம் வாக்கில் வேண்டுமானால் வரலாம். இப்போது இயலாது என்று தெரிவித்தார். உடனே தலைவர் கலைஞர் தோழர்கட்குப் புதுவழி காட்டினார்.

"புலவர்தான் இதில் ஆர்வமும் அக்கறையும் காட்டுபவர்; அவரை அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறினார். தலை வருடைய வழிகாட்டுதலை ஏற்று நான் செருமனிக்குச் செல் வதென்று முடிவாகியது. தலைவர் கலைஞர், பொதுச் செய

லாளர் பேராசிரியர் ஆகியோர் வரவில்லையே எனும் வருத்தம் இருந்தாலும் என்னை அழைத்துச் செல்வதில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். பிற ஏற்பாடுகளைச் செய்து கொண்டு மாநாட்டு நாட்களையும் முடிவு செய்து தெரிவிப்பதாகக் கூறி விடைபெற்றனர்.

என்னைப் போலவே தமிழகத்தில் வேறு சிலரையும் அழைத்திருப்பதை அறிந்தேன்.

வா.மு.சேதுராமனின் மகன் திருவள்ளுவர். 'தெரிந்து செயல் வகை'யில் வள்ளுவர் என்னென்ன எழுதினாரோ அத்தனையும் தெரிந்து வினை புரியும் அருமையான ஆற்றல் படைத்த திருவள்ளுவர். அவரை மகனாகப் பெற வா.மு.சே. தவம்தான் செய்திருக்க வேண்டும். திருவள்ளுவர் நேரில் வந்து கடவுச் சீட்டு (Passport) முதலியவற்றைப் பெற்றுச் சென்றார். அயல்நாட்டுச் செலாவணிக்கான பணத்தையும் பெற்றுச் சென்றார். எல்லாமே அவரது ஏற்பாடுதான். காக்ஸ் (Cox) நிறுவனம் பயண ஏற்பாட்டுக்கான பொறுப் பெடுத்துக் கொண்டது. அலிடாலியா வானூர்தியகம் பயணச் சீட்டுகளை வரிசைப்படுத்தி உறுதியும் செய்தது. நுழைவு அனுமதி (Visa) வாங்க வேண்டியிருந்ததாலும் அதிலும் செருமனி, பிரான்சு இத்தாலி ஆகிய நாடுகட்குச் செல்ல வேண்டியிருந்ததாலும் வள்ளுவன் பம்பாய்க்கும் புதுச் சேரிக்கும் அலைய நேரிட்டது. எல்லாவற்றையும் முடித்து, 16 பேர் பயணம் செய்கிறோம் என்னும் பட்டியலையும் கொடுத்துப் பயணம் புறப்படும் நாளை உறுதி செய்துவிட்டார். இதற் கிடையில் எனக்கொரு சிக்கல் நேர்ந்தது.

நான் பெர்லினுக்குப் புறப்பட வேண்டிய கால கட்டத்தில் பழனி நாடாளுமன்றத்திற்கும் இராணிப்பேட்டைச் சட்ட மன்றத்திற்கும் இடைத் தேர்தல் நடைபெறுவதாக இருந்தது. பழனி நாடாளுமன்றத்துக்கு உட்பட்ட வேடசந்தூர்த் தொகுதி யின் தேர்தல் பொறுப்பாளராக நான் அறிவிக்கப்பட்டிருந் தேன். எனவே, தேர்தல் பணிகளை முழுமையாக இருந்து கவனிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு. அதை விட்டு

விட்டுப் பெர்லின் செல்வது என்பது ஓர் இக்கட்டான நிலைதான்.

என்றாலும் வள்ளுவனிடம் கூறிப் பயணத் திட்டத்தைச் செயற்படுத்தி அனைத்தையும் ஒழுங்கு செய்து கொள்ளச் செய்துவிட்டேன். வாய்ப்பிருந்தால் செல்வது; இல்லாவிட்டால் கடைசி நேரத்தில் தவிர்த்து விடுவது என்ற முடிவோடு செயல்கள் மேற்கொள்ளப்பட்டன.

புறப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தேர்தல் ஆணையரான டி.என்.சேசன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். ஆம்! ஒரே அறிவிப்பில் பழனித் தேர்தலை ஒத்தி வைத்துவிட்டார்.

இப்போது என் பயணத்துக்குத் தடையேதும் இல்லை. முரசொலி, தினகரன், தினத்தந்தி போன்ற இதழ்கள் என்னையும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. அவர்களையும் முன்னிறுத்திப் பெர்லின் பயணம் பற்றிய செய்திகளை வெளியிட்டன.

உரிய காலத்தில் தலைவரிடமும் பிறரிடமும் விடை பெற்றுக் கொண்டு 10.8.93 அன்று புறப்பட்டேன். வானூர்தி நிலையம் சென்ற பிறகுதான் சிலரிடம் புதிதாகப் பழக நேர்ந்தது. புதுவை நீதியரசர் கோவிந்தராசன் போன்றவர்கள் போதுதான் பழக்கமானார்கள். 15 பேர் ஒன்றாகச் சேர்ந்து புறப்பட்டோம். கி.ஆ.பெ.வி, திருச்சித் தமிழ்ச் சங்கத் தலைவர் அண்ணாமலை, ஒய்வு பெற்ற நீதியரசர்கள் வேணு கோபால், கோவிந்தராசன், தொழில் வல்லார்கள் ஆ.திருவாசகம், முத்துவேல், அரங்கசாமி எனும் கவிஞர், தமிழ்மணி எனும் கைரேகை வல்லுநர், கோவிந்தராசு எனும் மதுரைத் தொழில் அதிபர், இசையரசி சேலம் செயலட்சுமி, பெரியார் பேருரையாளர் அ.இறையன், புதுவை அறிஞர் திருமுருகன், புதுவை அன்பர் வீர.மதுரகவி ஆகிய இவர்களுடன் அமெரிக்கத் தூதுவரக அரசியல் அறிவுரைஞர் திரு.இரா.நடராசன் ஆகிய 15 பேரும் புறப்பட்டோம். எங்களை அனுப்பி வைப்பதற்காகத் தம்பி திருவள்ளுவரும் புறப்பட்டார்.

இயக்கத் தோழர்களில் பலர் குடிநீர்கேட்டு நடைபெற்ற மறியலில் கைதாகிச் சென்னைச் சிறையில் இருந்ததால் வழி யனுப்ப வரமுடியவில்லை. என்றாலும் அவரவர்தம் உறவி னர்கள், குடும்பத்தார், நண்பர்கள் மற்றும் இயக்கத்தவர் என்றவாறு பலர் வழியனுப்பினர். விழாவுக்கான மலர்களை யும் உடன் எடுத்து வந்ததால் சுமை அதிகமாயிற்று. அதற் கான கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை மீனம் பாக்கம் வானூர்தி நிலையத்திலேயே ஏற்பட்டது. மகன் பாரி வண்டி ஓட்டி வந்தான். மகன் மெய்ம்மொழியே தனக்கிருக் கும் அதிகாரவரம்பால் பாதுகாப்பு வளாகம் (லவுஞ்ச்) வரை வந்தான். பாதுகாப்புச் சோதனைக்காக நான் உள்ளே நுழையும் வாயில் வரை வந்து வழியனுப்பினான்.

IC172 இந்தியன் ஏர்லைன்சு வானூர்தி சரியாகக் காலை 10.50க்குச் சென்னையை விட்டுப் புறப்பட்டது நீண்ட இடை வெளிக்குப் பின் வானூர்திப் பயணம். பேரவைத் தலைவ ராக இருந்தபோது மதுரைக்கும் சென்னைக்கும் இடையில் தேவைப்பட்ட போதெல்லாம் பறந்த காலம்! சென்னைக்கும் தில்லிக்கும் இடையிலே பயணங்கள். கா.பா.பே. (C.P.A.) மாநாட்டில் கலந்து கொள்ள மேல்நாடுகட்கு வானூர்தியில் பயணம் - அதுவும் துணைவியாருடன்.

இவையெல்லாம் கண்முன்னே தோன்றி மறைந்தன; இப்போது ஒரு தமிழ்ப் பணிக்காகப் பயணம். 1987-இல் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கவியரங்கத் தலைமை தாங்கச் சென்ற அனுபவம். போய் விட்டு வந்ததும் 20 நாள் சம்பளத்தை இழந்தேன். இப்போது பொலினில் 4 நாள் மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு. 45,000 உருபா நமக்காகச் செலவிடுகிறார்கள் என்ற உணர் வோடு வானில் பறந்து கொண்டிருந்தோம்.

உரிய நேரத்தில் பம்பாய் உள்நாட்டு வான்திடலை அடைந்தோம். பொற்கோ, அவர் புதல்வர் அன்பழகன், தேவதாசன், இராசபாண்டியன், சண்முகராசன், வள்ளுவன் மற்றும் செம்பியம் வள்ளுவர் மன்றத்தார் உட்படப் பலர் மிகுந்த அன்போடு வரவேற்றார்கள்.

பிறகு, நேரடியாகப் பம்பாய்ப் பன்னாட்டு வான்திடலுக்கு வந்துவிட்டோம். ஏறத்தாழ 4 மணி நேரம் இருந்தும் யாரும் பகல் உணவு உட்கொள்ளவில்லை. 400 மாநாட்டு மலரையும் கொண்டு வந்து சேர்ப்பதில் பல இடர்கள் இருந்தன. பன்னாட்டு வான்திடலுக்கு வந்து சேர்ந்து வெகுநேரமாகியும் உடன் பயணம் செய்ய வேண்டிய வா.மு.சே. ஆண்டவர் வந்து சேரவில்லை. மலர்களோ கட்டுமானம் சரியில்லாமல் சிதறிக் கிடக்கும் நிலை. வந்தவர்கள் தங்கள் பெட்டிகளைக் கொஞ்சம் காலியாகக் கொண்டு வந்து ஆளுக்குப் பத்து மலர்களைப் பெட்டியில் போட்டிருந்தால் எவ்வளவோ பாது காப்பு இருந்திருக்கும். என்செய்வது? அவரவர்களுக்கு இட நெருக்கடி. என் பெட்டியில் மட்டும் 35 மலர்களை வைக்க முடிந்தது.

பெட்டிகளையும் சரக்குகளையும் எடைபோடும்போது எடை கூடுதலாக இருந்தது. சென்னையிலேயே பணம் கட்டிவிட்டதாகக் கூறிச் சமாளித்தோம். 16 பேருக்கும் நுழைவு அட்டை (Boarding Card') வாங்கவும் சரக்குகளை அனுப்பி உள்ளே போய்ச் சரிபார்க்கவும் நானே பொறுப்பேற்றுக் கொண்டேன். கடைசி நேரத்தில் ஆண்டவரும் வந்து சேர்ந் தார். அதுவும் 4.45க்கு. அனைவரும் வானூர்திக்குள் சென்று அமர்ந்தோம். 95 அகவையான கி.ஆ.பெ.வி. அவர் களை நடக்க வைத்துக் கூட்டிச் செல்வதுதான் இடர்ப்பாடாக இருந்தது. ஆனால் அவர் சளைக்கவில்லை. ஒரு நெஞ்சுறுதி (Will Power) யோடு நடந்தார்.

மாலை 5.05க்கு AI 733 ஏர் இந்தியா வானூர்தி சாகர் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது. பம்பாயிலிருந்து துபாய், அவ்வளவுதான். கடலின் ஓர் ஓரத்திலிருந்து புறப்பட்டு அராபிக் கடலை (Arabian Sea) அப்படியே தாண்டி மற்றோர் முனைக்குப் போக வேண்டியதுதான். ஒரு மூன்று மணி நேரத்தில் போயிருக்கலாம். வானூர்தி நேரடியாகத் துபாய் போகாமல் தில்லி வழியாகப் போகிறது என்பது அப்புறம்தான் தெரியும். போகிற வழியில் தில்லி இருந்தால் குற்றமில்லை அம்மானைப் போல், மிலானைப்

போல். ஆனால் அரபிக் கடலில் பறக்க வேண்டிய வானூர்தி உள்நாட்டில் பறந்து கொண்டிருக்கிறது. அதுவும் பம்பாயி லிருந்து 1408 கி.மீ. தொலைவு. தேவையில்லாத பயணம். நேர வீணடிப்பு. இரண்டு மணி நேரம் பயணம் செய்து இரவு 7 மணிக்குத் தில்லி போய்ச் சேர்ந்தோம். துபாய் செல்லும் பயணிகளாகிய எங்களுக்குக் கீழே இறங்கி நின்று காற்று வாங்கக்கூட இசைவில்லை. போகட்டும். வானூர்தி யிலாவது உட்கார முடிந்ததா? குளிர்பதன வசதியை நிறுத்திவிட்டார்கள். புழுக்கம் தாங்க முடியவில்லை. ஒரே நரக வேதனை. 1.45 மணி நேரம் உயிரை வாங்கி விட்டார்கள். இந்தக் கொடுமை தாங்க மாட்டாமல் பலர் கத்தத் தொடங்கிவிட்டார்கள். 'Captain, Allow us to go down or take off immediately. It is intolerable' பலரது குரல்களும் சேர்ந்து ஒலித்தன.

நானும் பல நாடுகள் போயிருக்கிறேன். 50க்கு மேற்பட்ட வானூர்திகளில் பயணம் செய்திருக்கிறேன். வானூர்திகளும் இடையில் சில நிலையங்களில் இறங்கி ஏறியதும் உண்டு. ஆனால் 'ஏர் இந்தியா" செய்த இந்தக் கொடுமையை யாரும் செய்ததில்லை. ஏன் இந்தப் பொறுப்பற்ற போக்கு?

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதில் பிற நாடுகள் போட்டி போட்டு முன்னேறுகின்றன. நம் நாட்டில் அதிலும் கவனம் செலுத்தப்படவில்லை. ஒரு பயணி என்ற முறையில் ஒரு கருத்து. ஏர் இந்தியாவிலும் இரண்டு விமானப் பணிப்பெண் கள் (Air Hostess), ஒருவர் பிந்துகோசு மாதிரி. மற்றொருவர் முருங்கைக்காய் மாதிரி. அதிலும் ஒரு அம்மாவைப் பார்த் தால் நம் வீட்டில் பற்றுப் பாத்திரம் தேய்க்கும் பட்டம்மா எவ்வளவோ தேவலாம் போங்கள்.

எதிலும் கவனமில்லை; எதற்கும் கவலையில்லை.

ஒருவழியாகத் தில்லியை விட்டுப் புறப்பட்டு இரவு 11 மணி அளவில் துபாய் போய்ச் சேர்ந்தோம். அந்த இரவுப் பொழுதில் துபாய் நகரம் ஒளி வெள்ளத்தில் மூழ்கி மிதந்தது.

ஏற்கனவே ஒருமுறை துபாய் வந்து சென்றதால் நிலையம் பழக்கமாகியிருந்தது. பயணச் சீட்டுகளின் பகுதிகளைப் பொறுப்புள்ள ஒரு பெண்மணியிடம் கொடுத்தோம். இரண்டு மணி நேரம் கழித்து மேலே புறப்படும் இடத்தில் உள்ள ஒருவரிடம் நுழைவு அட்டை (Boarding Card) பெற்றுக் கொள்ளக் கூறினார்.

ஏறத்தாழ 4 மணி நேரம் பாதுகாப்புக் கூடத்தில் (லவுஞ்சில்) உட்கார்ந்தோம். கி.ஆ.பெ.வி.க்கு முடியவில்லை. என் மேல் துண்டை (கருப்பு சிவப்புக் கரையுள்ளது) விரித்துப் படுத்துவிட்டார். மற்றவர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து அரட்டை அடிக்கத் தொடங்கிவிட்டனர். பிறகு ஒவ்வொருவராக அயர்ந்து நாற்காலிகளிலேயே சரிந்து கிடந்தனர் நானும் ஆண்டவரும் மட்டும் கடைசி வரை தூங்கவில்லை. தொலைக்காட்சியைப் பார்ப்போம் 12.15 London 12.30 Amsterdam என்று வரிசையாகப் பட்டியல் வரும். எப்போது நமது வானூர்திக்கான வரிசை வரும் என்று பார்த்துக் கொண்டே நகர்வோம்.

தீர்வையில்லாப் பொருள் வாங்குமிடம் (Duty Free Shop) கீழ்த்தளத்தில் உள்ளது.. அங்கே ஒரு சுற்றுச் சுற்றினோம். மகிழுந்துக்கான வானொலி (Car Radio) ஒன்று பார்த்து வைத்தேன். விலையும் கேட்டு வைத்தேன். திரும்பி வரும் போது வாங்கிக்கொண்டு செல்வது என முடிவு செய்தேன். ஒளிப்பேழை இயக்கி (VCR) ஒன்றும் விலைகேட்டு வைத்தேன். வாய்ப்பிருந்தால் வாங்கலாமே என்றுதான்.

இப்படிப் பல வகையில் பொழுதுபோக்கியும் ஒரு வகையாக வாயடித்துக் கொண்டும் நேரத்தை நெருங்கி விட்டோம். முகப்பில் உள்ள ஒருவரை அணுகியதும் எங்கள் 16 பேரினுடைய நுழைவு அட்டை (Boarding Card) யையும் கடவுச் சீட்டுகளையும் திருப்பிக் கொடுத்தார். இடையில் எங்களுக்கு அறிமுகமாக தமிழரான ஒரு விமானப் பணியாளரை வற்புறுத்தி எங்கள் சரக்குகள் அனைத்தும் உரோம் நாட்டு வானூர்தியில் (அலிடாலியா) ஏற்றப்பட்டு விட்டனவா என்பதை உறுதி செய்து கொண்டோம்.

இரவு 3.30க்கு (11.8.93 காலை 3.30க்கு) அலிடாலியா வானூர்தி உரோம் நோக்கிப் புறப்பட்டது. புகழ் பெற்ற இத்தாலி நாட்டுக்கு – உலகப் புகழ் பெற்ற உரோமாபுரிக்குப் போகிறோம் என்று புத்துணர்ச்சியோடு வானூர்தியில் அமர்ந்தேன்.

கி.ஆ.பெ.வி.யை அழைத்துச் செல்வதில் எங்களுக்கு இப்போது எந்தத் தொல்லையும் இல்லை. வான் நிலைய யத்தினரே அவருக்கான மின் உயர்த்தி (Grane) வசதி ஏற்படுத்தித் தள்ளுவண்டியில் வைத்து, கடவுச்சீட்டுப் பார்வை, நுழைவு அட்டை பெறுதல் ஆகிய வேலைகளையும் முடித்து அவர்களே அடுத்து வானூர்தியிலும் கொண்டு வந்து உட்கார வைத்துவிட்டார்கள். உடல் ஊனமுற்றோர், முதியவர்களை அவர்கள் எவ்வளவு அன்புடன் கவனிக்கிறார்கள்.

நம் நாட்டில் அந்த மனிதாபிமானம் உள்ளதா? பெரியவர்கள் என்றாலே அலட்சியம். 'இந்த வயதான காலத்திலே வீட்டுலே கிடக்காமே ஏன் பெரிசு இப்படி அலையுறே!' என்ற கிண்டல் மொழிகள். 'கைகால்கள் தான் விளங்கலையே! அதோடு எதுக்கு இந்தப் பயணம்? எங்க உயிரை வாங்கவா?' என்று நெஞ்சில் ஈரமின்றி நிகழ்த்தப்படும் வசைமொழிகள்.

இவை நம்நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகள். ஆனால் வெளி நாடுகளில் கி.ஆ.பெ.வி. 'சம்'மென்று பயணம் செய்து கொண்டிருந்தார். சில நேரங்களில் நாங்கள் உள்ளே நுழைவதற்கு முன்னே அவர் அவரது இருக்கையில் இருப்பார்.

ஆயிற்று! AZ 731 அலிட்டாலியா வானூர்தி புறப்பட்டு விட்டது. இரவு 3.30 மணி. இரவு முழுவதும் தூங்கவில்லை. பொறுப்பான என் வேலை முடிந்ததால், ஒரு மனநிறைவு! கொஞ்ச நேரத்திலேயே அயர்ந்து தூங்கிவிட்டேன்.

காலை 5.15 மணியிருக்கும். நம் தோழர்களில் யாரோ ஒருவர் வந்து எழுப்பினார். 'என்ன?' என்றேன். 'நல்ல

தூக்கமா' என்றார். 'ஆம்' என்றேன். 'இப்போது சொல்ல முடியாத துக்கம்' என்றார். தூக்கி வாரிப் போட்டது எனக்கு.

வானத்தில் ஏதாவது ஏற்பட்டால் வாய்விட்டுக்கூட அழ முடியாது.

'சொல்லுங்கள்' என்றேன்.

'நமது விமானம் பழுதாகி விட்டதாம். அதனால் உரோமுக்குப் போகாமல் மீண்டும் துபாய்க்கே திரும்பிக் கொண்டிருக்கிறது' என்றார்.

'எவ்வளவு நேரமாய்?' என்றேன்.

'4.30 மணிக்கு அறிவித்தார்கள். இப்போது திரும்பி முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது' என்றார்.

எழுந்து ஒருமுறை இங்குமங்கும் நடந்து பார்த்தேன். பலருடைய முகத்திலும் கலவரம் படர்ந்திருந்தது. மெல்ல, கி.ஆ.பெ.வி. அவர்கள் இருக்குமிடம் சென்றேன்.

அவரது கவலை வேறு வகையாக இருந்தது. அவர் ஏற்கனவே திருச்சியில் ஒரு தனி ஏற்பாட்டையே செய்து வைத்திருப்பவர். சில ஏக்கர் நிலத்தில் தோட்டம் துரவுகளைப் போட்டுத் தனக்கென ஒரு நினைவிடத்தையும் இப்போதே தயாராக வைத்திருப்பவர்.

அவர் கவலை என்ன தெரியுமா? ஏதாவது ஆகிவிட்டால் திருச்சியில் தான் செய்துள்ள ஏற்பாடெல்லாம் வீணாகி விடுமே என்பதுதான்.

இது எப்படி இருக்கு?

ஆனால் பலர் கவலைப்பட்டது போல ஒன்றும் ஆக வில்லை. அடுத்த 10 ஆவது மணித்துளியில் அறிவிப்பு வந்து விட்டது. 'துபாயில் இறங்கப் போகிறோம்" என்று. 'விமானத் தில் கோளாறே நீரமுக்கு (ஹைடிராலிக்) அமிலம் கசிகிறது' என்பதுதான். அதனால் முற்றிலும் கசிவதற்கு முன்பே வந்துவிட்டோம். வானூர்தி பத்திரமாகத் தரையிறங்கியது. ஓடுதடத்தில் முழு வேகத்தில் ஓடும்போது பயணிகள்

எலலாம் ஒரே நேரத்தில் கைதட்டினார்கள். அந்த அளவுக்கு மகிழ்ச்சி.

காலை 5.30 மணிக்கு மறுபடியும் துபாய் விமான நிலையம். மீண்டும் தங்கியிருந்த பாதுகாப்புக் கூடத்துக்கே வந்தோம். விமானம் மீண்டும் புறப்பட 2 மணி நேரம் ஆகும் என்று அறிவித்ததால் நாற்காலிகளில் உட்கார்ந்தபடியே விமானத்தில் சிதறிப் போன தூக்கத்தை இழுத்துப் பிடித்து மீண்டும் தொடர்ந்தோம். அரைகுறைத் தூக்கம்தான். வேறென் செய்வது?

காலை 7 மணியிலிருந்து சிற்றுண்டி சாப்பிடலாம் என்று அறிவித்தார்கள். 7.15க்கு உரொட்டி, காப்பி என்று அரை குறையாக அள்ளிப் போட்டோம். 7.30 மணிக்குத் தயாராகி விட்டோம். ஆனால் 8 மணிக்குத்தான் அழைப்பு வந்தது. மீண்டும் அதே விமானத்தில் நுழைந்தோம். மனத்திற்குள் ஓர் உறைப்பு. 'பழுதான அதே விமானத்திலா?' என்று. 'பழுதானதை நிறுத்திவிட்டு வேறொன்றை அனுப்பக் கூடாதா?' என்ற கேள்வி. எல்லாம் மனத்திற்குள்ளேதான். ஆண்டவர், திருவாசகம் போன்றவர்களிடம் சொல்லிக் கொண்டேன்.

காலை 8.30க்கு வானூர்தி புறப்பட்டது. இடையில் தமிழ் மணியிடம் மட்டும் கொஞ்சம் வம்பளந்தேன்.

'ஏன் தமிழ்மணி! நீங்கள் மிகச் சிறந்த கணியர். தமிழ் நாட்டின் எதிர்காலம் எப்படியிருக்கிறது என்றெல்லாம் முன் கூட்டியே கணித்தறிந்து கட்டுரைகள் எழுதியவர். இந்த விமானம் இப்படி ஆகும் என்பதைக் கணித்தறிந்து சொல்லி யிருக்கக்கூடாதா? என்றேன்.

தமிழ்மணி சிரித்துக் கொண்டார். 'இதெல்லாம் எப்படி ஐயா சொல்ல முடியும்?' என்றார்.

அதற்கு மேல் என்மீது மிகுந்த அன்பு கொண்ட நண்பரை வம்புக்கிழுக்க விரும்பவில்லை. அவரது கைரேகை ஆற்ற லின் சிறப்பும் எனக்குத் தெரியும்.

பிறகு விமானத்தில் வழக்கமான கடமைகள். 9.30 மணிக்கு ஒரு சிற்றுண்டி – பழச்சாறு. திரையில் ஒரு படம். காதில் மாட்டிக் கொண்டால் ஏதாவது ஒரு-பாட்டு. இடையில் ஒரு குட்டித் தூக்கம். சரியாக 3 மணி நேரம் கழித்து, காலை 11.30 க்கு ஜோர்டன் நாட்டின் தலைநகரமான அம்மானில் விமானம் இறங்கியது. நாங்கள் அனைவரும் உள்ளேயே இருந்தோம். தில்லியில் ஏர் இந்தியாவில் புழுங்க விட்டுக் கொன்றார்களே, அப்படியெல்லாம் இல்லை. சில பயணிகள் இறங்கிச்சென்றார்கள். சிலர் மேலே ஏறி வந்து அமர்ந் தார்கள். 12.15 மணியளவில் மீண்டும் வானூர்தி புறப்பட்டது. 12.45க்கெல்லாம் முழுச் சாப்பாடு, பன்றிக் கறியுடன். ஒரே திணறடிதான். அதை மட்டும் ஒதுக்கி விட்டு மற்றவற்றை ஒரு பிடி பிடித்தோம்.

1.30க்கு மேல் ஓர் அசதி. கண் விழிக்கும்போது உரோமுக்கு வந்துவிட்டோம். பகல் 3.15க்கெல்லாம் உரோமாபுரியை அடைந்தோம். அங்கு மண்ணில் கால் வைத்ததும் ஓர் இனம் புரியாத உள்ளக் கிளர்ச்சி. வரலாற்றுப் புகழ் பெற்ற மண் ணில்லையா! 'All roads lead to Rome' என்ற தொடரையே உண்டாக்கி விட்டார்களே அவர்கள்! நமது சனவரி, பிப்ரவரி எல்லாம் உரோமாபுரியின் நினைவுச் சின்னங்கள் தானே.

'Augustus' பெயரில்தான் 'August' 'Julius Ceasar' பெயரில்தான் 'July' இப்படி எத்தனையோ எண்ணங்கள்.

இன்று உரோமுக்குள் போகப் போவதில்லை. எனவே வானூர்தி மாற்றம் (Transit Pass) என்ற முறையில் பாதுகாப்புக் கூடத்திற்குள் சென்று விட்டோம். அனைவருக்குமாகப் பொறுப்பெடுத்துக் கொண்டு நானே நுழைவு அட்டை வாங்கி விட்டேன். இங்கு 1.30 மணி நேரம் மாறுதல். மணிப் பொறியை மாற்றி வைத்துக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டும் அரட்டையடித்துக் கொண்டும் பொழுது போக்கினோம். உரோமின் நேரம் 1.45. எனவே 3 மணி நேரம் காத்திருக்க வேண்டும். AZ 1316 விமானம் மாலை 4.50க்குப் புறப்பட்டது. இடையில் மிலான் விமான நிலையத்தில்

இறங்கி ஏறியது. ஒரு 45 மணித்துளி அங்கே. மிலானை விட்டுப் புறப்பட்ட விமானம் இரவு 8.40க்குப பெர்லின் நகரத்தில் தரையிறங்கியது. அப்பாடா! ஒரு பெருமூச்சு! ஒரு துள்ளல். பெர்லினுக்கு வந்து விட்டோமே! இங்கே ஒரு வாரம் இருக்கப் போகிறோம். இடையில் விமானப் பயணம் அறவே இல்லை. அந்த அளவுக்குச் சலிப்பு ஏற்பட்டுப் போய்விட்டது.

உண்மையில் பார்த்தால் பம்பாயிலிருந்து நேரடியாகப் பிராங்பெர்ட் சென்று அங்கிருந்து பெர்லின் சென்றிருக்க லாம். 10.30 மணி நேரத்தில் பெர்லினைச் சென்றடைந் திருக்க வேண்டிய நாங்கள் சுற்றினோம், சுற்றினோம் அப்படிச் சுற்றினோம். அலிடாலியா விமான நிறுவனத் தால் ஆசைப்பட்டவாறெல்லாம் சுற்றினோம்.

10.8.93 காலை 10.50க்குப் புறப்பட்டவர்கள் 11.8.93 இரவு 8.40க்குத்தான் பெர்லின் போய்ச் சேர்ந்தோம். 10.30 மணி நேரத்துக்குப் பதில் 28 மணி நேரம். இடையில் தில்லி எரிச்சல். துபாயில் கலக்கம். இத்தனை விமானத்திலும் ஏறி இறங்கியதில் எல்லோர்க்கும் இன்னொரு ஐயப்பாடு. பெட்டிகளெல்லாம் ஒழுங்காக வந்து சேர்ந்திருக்குமா என்பதுதான் அது. அதிலும் மலர்களெல்லாம் சிதையாமல் வந்து சேர்ந்திருக்குமா என்ற ஐயப்பாடு.

பெர்லினில் இறங்கிவிட்டோம். வெளியில் அன்பர்கள் எல்லாம் காத்து நின்றார்கள். என்றாலும் ஓடிப் போய்க் கை குலுக்க முடியவில்லை. மனத்தில் ஒரு குறுகுறுப்புத் தான்.

பெட்டிகளும் மலர்ச் சிப்பங்களும் வந்து சேர்ந்திருக்குமா என்ற ஐயம்தான். அதற்குள் வார்த் தடத்தில் (Belt Conveyar) பெட்டிகள் வரத் தொடங்கின. அனைவரது கண் களும் ஆவலுடன் ஒவ்வொரு பெட்டியாகப் பார்க்கத் தொடங் கின. ஒருவர் அவரது பெட்டியை அடையாளங் கண்டு கொண்டார். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார். பிறர்க்கும் நம்பிக்கை வந்துவிட்டது. சிறிது நேரத்தில் அவரவர்

பெட்டிகளும் வந்து சேர்ந்து விட்டன. ஆனால் மலர்ச்சிப்பங்களில் இரண்டு தான் வந்து சேர்ந்தன. அதுவும் சிதைந்த நிலையில். ஏழெட்டுச் சிப்பங்கள் கடைசி வரை வரவில்லை. வாரும் ஓடாமல் நின்றுவிட்டது. சிப்பங்கள் இனி வர வாய்ப்பில்லை என்று தெரிந்தபின் அனைவரும் வருத்தத்துடன் வெளியே வந்தோம். கடைசியில் என் பெட்டியில் வந்த 35 மலர்கள் தான் மாநாட்டில் மானத்தைக் காத்தன.

வெளியில் குணரத்தினம், வா.மு.சேதுராமன், முனைவர் இரா.சனார்த்தனம், கிருட்டிணமூர்த்தி, தங்கராசு முதலான பல அன்பர்கள் வரவேற்று அழைத்துச் சென்றனர். அனைவரும் குணரத்தினம் வீட்டிற்குச் சென்றோம். இரவுணவை உரொட்டி, தேநீருடன் முடித்தோம். அனைவரும் வந்தாலும் நீதியரசர் கோவிந்தராசன் மட்டும் வந்து சேரவில்லை. அவருக்கு ஒரு சிக்கல். நம் நாட்டில் நம் ஆளுநர் சென்னாரெட்டி போல், நாஞ்சிலார் போல் கோவிந்தராசனும் கையில் ஒரு மந்திரக்கோல் போன்ற சந்தனப் பிரம்பு வைத்திருந்தார். அதை வாங்கி வைத்திருந்த 'ஏர் இந்தியா' நிறுவனத்தினர் திரும்ப ஒப்படைக்கவில்லை. அது வந்து விடும் என்று தவறான உறுதிமொழி தந்துவிட்டனர். பாவம்! கோவிந்தராசனும் துபாய், உரோம், பெர்லின் என்று ஒவ்வொரு வான்திடலிலும் விசாரித்து விசாரித்து அலுத்து விட்டார். பெர்லினில் வந்து சேர்ந்து விடும் எனும் நம்பிக்கையில்தான் எங்களுடன் வரவில்லை.

பிறகு யார் யாரை யார் யார் வீட்டில் தங்க வைப்பது என்ற ஆராய்ச்சி நடந்தது. குணநேசன் என்ற தோழர் தமிழ்க்குடிமகனை நான்தான் கூட்டிச் செல்வேன் என்று அடம் பிடித்தார். என்றாலும் சில ஒதுக்கீடுகளைச் செய்து ஏற்பாடும் செய்து விட்டதால் என்னைத் திரு.கிருட்டிணமூர்த்தி வீட்டுக்கு இட்டுச் சென்றனர். அங்கு எனக்கு முன்னதாகவே வந்து சேர்ந்த பல் மருத்துவர் திரு.கண்ணப்பர் தங்கியிருந்தார். 7 நாட்கள் இருவரும் அங்கேயே தங்குவது என்று முடிவாயிற்று.

அனைவர்க்குமாகச் சமைத்து வைத்திருந்தனர். எனினும் நாங்கள் இரண்டு மூன்று பேர்தான் சாப்பிட முடிந்தது. பெர்லினில் விடுதியில் தங்குவது என்பது பெருஞ்செலவு; அதற்கெனச் செலவிடப்படும் மார்க் (செருமனி நாணயம்) பெருந்தொகையாகிவிடும். அதனால் சிக்கனம் கருதி நண் பர்கள் பிரித்துக் கொண்டு விருந்தோம்பினர். எங்களுக்கும் வீட்டுச் சாப்பாடு கிடைத்த நிறைவு.

செருமனியில் குளிர் இருந்தது. அதிகம் இல்லையென் றாலும் தூங்கும் போது கம்பளி தேவைப்பட்டது. நீண்ட பயணம் – களைப்பு. 10.8.93 காலை 10.50க்குப் புறப்பட்டு 11.8.93 இரவு 11 மணிக்குத்தான் தூங்கத் தொடங்கினோம். அதிலும் 4.30 மணி நேர வேறுபாடு. இந்நேரம் தமிழ் நாட்டில் இரவு 3.30 மணி என்ற நினைவோடு தூங்கிப் போனோம்.

**12.8.93**

எங்குத் தூங்கினாலும் எவ்வளவு களைப்படைந்தாலும் விடியல் 6 மணிக்கு விழித்துவிடும் பழக்கம் எனக்கு. அதே போல் எழுந்து சாளரங்களை மெல்லத் திறந்து வெளியே பார்த்தேன். வெளியே கடும் பனி. நடுக்கும் குளிர். பிறர் எழுந்திருக்கவில்லை. எனவே என் பெட்டியைத் திறந்து, கொண்டு வந்த பொருள்களை ஒழுங்கு செய்தேன்.

காலைச் சிற்றுண்டி முடித்து விட்டுக் கிருட்டிணமூர்த் தியுடன் நானும் மாநாட்டு அரங்கம் சென்றேன். அரங்கமா அது? புதிதாகக் கட்டப்பட்ட பொன் மாளிகை அது. அறி வியல் வசதிகள் அனைத்தும் கொண்ட அருமையான இடம் அது. கீழ்த்தளத்தில் உணவகம். நம் தமிழ் உணவு எங்க ளுக்காகத் தயார் செய்து தரப்பட்டது. முதல் மாடியில் அலுவலகம் மற்றும் கழிப்பறை வசதிகள். இந்தக் கழிப் பறை வசதிக்காகவே இங்கே தங்கிவிடலாம் போலிருக் கிறது. நம் நாட்டுக் கழிப்பறைக் கண்ணராவிகள நினைத் தாலே குமட்டுவது போல் இருந்தது.

இரண்டாவது மாடியில் மாநாட்டு அரங்கம். பண்பாட்டுத் துறை வளர்ச்சிக்கென்றே கட்டப்பட்ட மண்டபம் இது. அதிலும் பிறநாட்டுக் கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகட்கு என்று ஒதுக்கப்பட்ட இடம் இது.

அந்த மண்டபத்தைச் சலுகைக் கட்டணத்தில் நமக்குத் தந்திருந்தார்கள். இதில் ஒரு மாபெரும் வியப்பு உள்ளது. இப்போதுதான் இந்த மண்டபம் புதிதாக உருவாக்கப்பட் டிருக்கிறது. இன்னும் ஒரு சில வேலைகள் கூட முற்றுப் பெறவில்லை. அரசின் சார்பில் முறையான திறப்பு விழாக் கூட நடைபெறவில்லை. அரசு 'திறப்பு விழா' போன்ற சடங்குகளைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. ஆனால் இந்தியச் சார்பான ஒரு மாநாட்டுக்கு அரங்கத்தை விட்டுக் கொடுத்திருக்கிறது. சடங்குகட்கும் சம்பிரதாயங்களுக்கும் அடிமைப்படாமல் அறிவியல் கண்ணோட்டத்துடன் இயங்கும் பெர்லின் அரசு எங்கே? சடங்குகளின் பெயரால் எதையும் வீணடித்து வரும் நம் நாட்டின் போக்கு எங்கே?

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இந்த மண்டபம் முறையான திறப்பு விழாச் செய்யப்படாத நிலையில் வாட கைக்கு விடப்படுமா இங்கே? தொகுதி எம்.எல்.ஏ. விட்டு விடுவாரா? ஆளுங்கட்சியினர் விழாவை நடக்க விடுவார் களா? எவ்வளவு நாளானாலும் திறப்பு விழாவுக்குப் பின் னால்தானே மற்றதெல்லாம்!

இங்கே கட்டப்பட்டுப் பல நாளாகியும் திறக்கப்படாமல் பூட்டிக் கிடக்கும் கிட்டங்கிகள் – கடைகள் – காவல் நிலையங் கள் பண்டகச் சாலைகள் என்று பலவற்றைப் பார்க்கிறோமே!

இதையெல்லாம் நினைத்து வியந்து கொண்டே மாநாட்டு வேலைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். ஓவி யர் ஒளிவென்றி (செயப்பிரகாசம் – புதுவையிலிருந்து வந்த வர்) முழு மூச்சாக இயங்கி மேடையை அழகுபடுத்திக் கொண்டிருந்தார். இதற்கிடையில் என்னை உட்கார வைத் துப் பத்தே மணித்துளியில் என் உருவத்தைக் கோட்டுருவ

மாக (Line drawing) வரைந்து தளளிவிட்டார். கலைகளில் சிறந்தது ஓவியம் அல்லவா! என்ன அருமையான திறன்!

அந்த மண்டபத்தில் உயரத்தைக் கூட்டவும் குறைக்கவும் வாய்ப்புள்ள மேடை. ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிற்கும் நாற்காலிகள். தேவைப்பட்டால் அகற்றி விடலாம். ஆனால் கண்ட இடமெல்லாம் நகர்த்த முடியாது. 3 மொழி களில் ஒரே நேரத்தில் பேச்சை மொழி பெயர்க்கும் வசதி. மேலே ஏற்படும் சிறு பழுதுகளைப் பார்ப்பதற்கு நகரும் பொறிகள்.

குணரத்தினமும் கிருட்டிணமூர்த்தியும் பல நண்பர்களும் வா.மு.சே.யும் ஆண்டவரும் முன்னேற்பாட்டு வேலைகளை முனைந்து கவனித்தனர். நானும் பகல் 2 மணி வரை அங் கிருந்து உதவி செய்துவிட்டுப் பகல் உணவுக்குக் கிருட்டிண மூர்த்தி இல்லம் திரும்பினேன். உணவு; சற்று ஓய்வு.

**12.8.93**

மாலை 4 மணிக்கு அரங்கத்தில் செய்தியாளர் கூட்டம் நடைபெற்றது மேடையில் குணரத்தினமும், வா.மு.சே.யும், நானும் அமர்ந்தோம். மாநாட்டு நிகழ்ச்சியைப் பிசிறு ஏதுமின்றிக் கொண்டு போக வேண்டும் என்றும் வா.மு. சே.க்குத் துணையாக நிற்பது என்றும் முடிவு செய்து கொண்டேன். இதழின் செய்தியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமின்றி ஆர்வலர் சிலரும் எதிரே அமர்ந்து வினாக் களைத் தொடுத்தனர். செய்தியாளர் கூட்டம் எனும் கட்டுப் பாடு இல்லாது போயிற்று. எனினும் எல்லா வினாக்களுக் கும் பக்குவமாக விடை சொன்னோம். தமிழ் ஈழம் பற்றிய வினாக்கள் மிகுதி – இந்த மாநாடு என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பதை அறிவதில் பலர் ஆர்வம் காட்டினர் என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும்.

பிறகு முதல் நாள் மாநாடு தொடங்கியது. நான் முதல் நாள் மாநாட்டுக்குத் தலைமை ஏற்று உரையாற்றினேன். கால்டுவெல் கண்டறிந்த உண்மைகள் – சங்க இலக்கியம் அவர் காலத்தில் கிடைக்காததால் ஏற்பட்ட பின்னடைவு –

பாவாணர் அதனை நிறைவு செய்து உலக முதல் மொழிக் கொள்கையை நிறுவியது, மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம், அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் தம் ஆட்சிகளில் கிட்டிய நன்மைகள், இன்றைய தமிழ் நிலை, உலகத் தமிழர் நிலை குறித்து விரிவாக உரையாற்றினேன்.

இசையரசி சேலம் செயலட்சுமியின் மங்கள இசையுடன் இசைமாமணி டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட மாநாடு தொடங்கியது. இசை வல்லுநர் களாகிய பொன் சுபாசு சந்திரன், சண்முகராகவன் ஆகி யோர் தமிழர் எழுச்சிப் பாடல்களை முழங்கினர்.

95 அகவை முதிர்ச்சியிலும் தளராது நிமிர்ந்து நின்ற முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவருக்கே உரிய முறையில் தமிழின் தொன்மையைப் பல எடுத்துக்காட்டு களுடன் விளக்கினார்.

வா.மு.சே. மாநாட்டு நோக்கங்களை விரித்துரைத்தார். நீதிரயரசர் வேணுகோபால் மலரை வெளியிட்டுச் சிறப்பித் தார். மலரைப் பற்றிய அறிமுக உரையை இறையனார் மிக அருமையாக ஆற்றினார். தன் இசைத் திறனையும் புலப் படுத்தினார்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரான பண்டிதர் கா.பொ.இரத்தினம், உலகத் தமிழரோடு தொடர் புடைய முனைவர் இரா.சனார்த்தனம், புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் க.பா.அறவாணன், மருத்துவ மேதை கண்ணப்பர், தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கச் செயலாளர் சிவ.இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. 5 பெண்கள் அருமையாக நடனம் ஆடினர் 'சிந்து நதியின் மிசை' பாட் டுக்கு நன்றாக ஆடினர். சிவசிதம்பரம் இன்னிசை நிகழ்ச்சி. ஆனால் பக்க வாத்தியங்கள் எவையும் இல்லை. இங்கிருந்து இசைவாணர் செல்வது – உள்ளூர் இசைக் கருவியாளர்கள் ஒத்துழைப்பது என்று முடிவாகியிருந்தது. சில தோழர்கட்

கும் மாநாட்டுக் குழுவினர்க்கும் இடையில் ஏற்பட்ட மனக் கசப்பால் கருவிகளை இசைப்பார் யாரும் வரவில்லை. எனவே சிவசிதம்பரம் தனக்கேயுரிய எடுப்பான குரலில் இரண்டு பாடல்களை மட்டும் பாடி முடித்தார். இடையில் வேறு கலை நிகழ்ச்சிகள். எல்லாம் சிறப்பாக அமைந்தன.

அரங்கில் கூட்டம் நிரம்பி வழிந்தது. அதிலும் பெண்கள், குழந்தைகள் அதிகம். பெண்கள் காஞ்சிபுரம் பட்டுடுத்தியும், ஆடவர் பலர் பட்டுவேட்டி, பட்டுச் சட்டையுடன் நீளத் துண்டு டனும் காட்சியளித்தனர். ஒரு திருமண விழாவுக்கு வந் திருப்பது போன்ற உணர்ச்சியுடன் அனைவரும் உலாவியது கண்டு மகிழ்ந்தேன். தமிழ் மொழியுணர்ச்சியும், தமிழின உணர்வும், தமிழ்ப் பண்பாடு பேணும் நெறியும் பல கல் தொலைவுக்கப்பால் மேலோங்கி நிற்பதைக் கண்டு தமிழ்க் குடிமகன் வியக்காமல் இருப்பானா?

முதல் நாள் மாநாடு நிறைவுற்றது.

***13.8.93***

காலையில் வழக்கம் போல் 6 மணிக்கு எழுந்து விட்டேன். கிருட்டிணமூர்த்தியின் துணைவியார் தன் இரண்டாவது பையனைத் தயார் செய்து பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விட்டு வரக் கிளம்பினார். அவரே கேட்டார். 'ஏங்க! இந்த ஊர்ப் பள்ளிக்கூடம் எப்படி இருக்குன்னு பார்க்கறீங்களா!' என்றார். எனக்கு மகிழ்ச்சிதான். உடனே நானும் கிளம்பி விட்டேன். விடியற்காலை நேரம். பனி கடுமையாகக் கொட் டிக் கொண்டிருக்கிறது. குளிர் வேறு. நான் சால்வை போர்த்திக் கொண்டுதான் நடந்தேன். நாலைந்து தெருக்கள் கடந்து சென்றோம். மாணவ, மாணவியர் சாலையைக் கடக்கும்போது கையில் புத்தகக் கட்டைப் பார்த்து விட்டால் எல்லா வாகனங்களும் நின்று இடம் கொடுக்கின்றன. பிள் ளைகள் கடக்கும்வரை காத்திருக்கின்றன. வாசிங்டனிலும் இதே காட்சியைக் கண்டிருக்கிறேன். இந்த நல்ல பண்புகள் அமெரிக்காவிலும் இலண்டனிலும் பெர்லினிலும் ஒன்று தான். இந்தப் பண்பு இங்கே நம் நாட்டில் மருந்துக்குக்

கூடஇல்லையே! நம்மூரில் நெடுஞ்சாலையில் வண்டி ஓட்டும்போது கட்டை வண்டி போல உருட்டிக் கொண்டு போவார்கள். ஊருக்குள், நெருக்கடிமிகுந்த தெருக்களில் மக்கள் நெரிசலில் முண்டியடித்துக் கொண்டு கடக்கும் போதுதான் நம்மூர் வாகனஓட்டிகள் முழு வேகத்தையும் காட்டுவார்கள்.

பெர்லினில் பள்ளியை நோக்கிப் போகும்போது நாங்கள் கடந்த ஒரு பெருஞ்சாலை காரல் மார்க்சு சாலை. நம்மூரில் சென்னையில் அண்ணா சாலை போல மிக நீண்ட பெருஞ் சாலை. பொதுவுடைமைத் தத்துவத்தின் மூலவரான கார்ல் மார்க்சு தன் நாட்டுக்காரன் எனும் பெருமையோடு அந்தச் சாலை பேணப்படுகிறது.

பள்ளிக்கூடத்தில் நுழைந்தோம். கட்டிடம் கொஞ்சம் பழையது என்று வெளித் தோற்றத்திலேயே தெரிந்து கொண்டேன். உள்ளே நுழைந்த பிறகுதான் அதன் சிறப்புத் தெரிந்தது. உள்ளே சுவர்கள் எல்லாம் பளபளவென்றிருந் தன. அறைகளில் எல்லாம் கல்விக்குரிய புதிய கருவிகள். மேலே நாற்காலிகளும் மிக வசதியானவை. வகுப்பு நடக்கும் போது கதவுகள் சாத்தப்பட்டிருப்பதால் பிள்ளைகளின் கலகலப்பு ஓசை வெளியில் கேட்கவே இல்லை. தலைமை யாசிரியை எங்களை அன்புடன் வரவேற்றுப் பேசினார். பத்து மணித்துளிகள்தான். வகுப்பு உள்ளது எனப் புறப்பட்டு விட்டார். வேறோர் ஆசிரியை சுற்றிக் காட்டினார். ஒரு வகுப்பின் முன் சுவரில் அறிக்கைப் பலகையில் ஒரே வகை யான – ஆனால் பலர் வரைந்த ஓவியங்கள் – கீழே வரைந்த வர்களின் பெயர்களோடு காட்சியளித்தன. எல்லாம் அந்த வகுப்புப் பிள்ளைகள் நேற்று வரைந்தவை. அவரவர் வரைந்த ஓவியங்களையும் பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வாய்ப்பு.

பின் ஒரு குறிப்பிட்ட வகுப்பறைக்குக் கூட்டிச் சென்றார். அதில் சில மேசை, சில நாற்காலிகள். எல்லாம் மிகப் பழை யவை. அவர்கள் சொன்ன விவரம் என்னைத் திகைக்க

வைத்தது. இவை பல ஆண்டுகட்கு முன் பயன்படுத்திய மேசை நாற்காலிகள். இப்போது இதில் வகுப்பு இல்லை. ஆனால் பழமையைக் காக்க வேண்டும் எனும் நோக்கோடு ஒரு கண்காட்சி போல் இவற்றைக் காத்து வருகிறோம் என்றனர்.

புதுமை கொழிக்கும் பெர்லினில் பழமை பேணும் பக்குவம். நம் நாட்டில் பழமையோ சிதைக்கப்படுகிறது. புதுமையோ தப்பும் தவறுமாகக் கையாளப்படுகிறது. நம்மூரில் கணிப்பொறி கூடத் தவறு செய்துள்ள சான்றுகள் ஏராளம்.

பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்ட நிறைவோடு வீட்டுக்கு வந்தோம். கண்ணப்பர் அதற்குள் எழுந்து தயாராகி விட்டார். பிறகு நானும் தயாராகி உணவருந்தியபின் அனைவரும் மாநாட்டு அரங்கிற்கு விரைந்தோம்.

தனிநாயக அடிகள் அரங்கத்தில் நிகழ்ந்த இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குச் செர்மனி, ஐடில்பர்க் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் தாமோதரன் தலைமை தாங்கினார். தென்னாப்பிரிக்கப் பேராசிரியர் கே.செல்லப்பா அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருந்தார். ஆய்வரங்க அமர்வுகளுக்கு முனைவர் க.பா. அறவாணன் தலைமை தாங்கினார். சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீட்டர் சலம் மிகுந்த ஆர்வத்தோடு கலந்து கொண்டு நெறிப்படுத்தினார்.

நீதியரசர் கோவிந்தராசன், கவிஞர் இரவிபாரதி ஆகியோர் கலந்து கொண்டனர். பிறகு மகளிர் அரங்கம் நடைபெற்றது. இலண்டன் இராசேசுவரி பாலசுப்பிரமணியம், செர்மனி பவானி ஆகியோர் தலைமை, முன்னிலையேற்ற அரங்கில் பல பெண்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். தமிழகத்திலிருந்து வந்தவர்களில் சேலம் இசையரசி செயலட்சுமி மட்டுமே கலந்து கொண்டார். மற்ற அனைவரும் வெளி நாட்டில் வாழும் தமிழ்ப் பெண்களே.

உணவுக்குப் பின் மாலையில் கவியரங்கம் நடைபெற்றது. 'கை நீட்டும் கடலலைகள்' என்பது தலைப்பு. கவிஞர்கள் பாரதிபாலன், பொன்.தியாகராசன், மகேந்திரராசா,

கோவிந்தராசன். அரங்கசாமி, ஆ.திருவாசகன், வா.மு.சே ஆண்டவர் ஆகியோர் கலந்து கொண்டு தம் கவிதைகளைப் படைத்தனர்.

பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் நீதியரசர் வேணு கோபால் தலைமையேற்க மாநாட்டு அமைப்பாளர் வா.செ. குணரத்தினம் வரவேற்க இறையன், நாராயணசாமி, திருமுருகன், மகேந்திரராசா, இரா.நடராசன், கோவிந்த ராசன், கமலநாதன், இலண்டன் முனைவர் நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலையில் கலை நிகழ்ச்சிகள். 'கொட்டுங்கடி கும்மி' எனும் பாட்டுக்கு எடுப்பான ஒரு நடனம். பிள்ளைகள் சிறப் பாக ஆடினர். வேறு நிகழ்ச்சிகளும் நன்கு அமைந்தன. சிவ சிதம்பரம் நேற்றுப் பாட முடியாததால் இன்று இசைக் குழு வுடன் பாடினார். அவர் பாடிக் கொண்டிருக்கும் போதே 'கீழ்த்தளத்தில் தீப்பிடித்து விட்டது' என்று அலறல். அனை வரும் அரங்கத்தை விட்டு வெளியேறுங்கள் எனும் அறிவிப்பு. பலரும் வெளியேறத் தொடங்கினர். நாங்கள் கடைசியாகப் புறப்பட்டோம். பாடிக் கொண்டிருந்த சிவ சிதம்பரமும் புறப்பட்டார். அவரோ ஒரு விபத்தில் ஏற்பட்ட சிக்கலால் பிரம்பூன்றி நடக்கவேண்டிய நிலை. நாங்கள் அரங்கத்தை விட்டு வெளியேற முற்பட்டபோது மீண்டும் அறிவிப்பு. 'புகையோ தீயோ ஏதுமின்றி அணைத்துவிட்டோம். ஒருவர் சிகரெட் பிடித்துவிட்டுக் குப்பைக் கூடையில் போட்ட தால் ஏற்பட்ட விளைவு. நிகழ்ச்சி தொடர்ந்து நடக்கும்' என்று அறிவித்தனர். அறிவிப்பாளர் செகன் குரலில் ஒரு மிடுக்கு இருந்தது. வெளியேறியவர்கள் மீண்டும் வந்து அமர்ந்தனர். சிவசிதம்பரம் மீண்டும் பாடத் தொடங்கினார். அரங்கில் அப்படியொரு அமைதி. 'Pin dropped Silence' என்பார்களே அப்படி. சிவசிதம்பரம் உணர்ச்சிவசமானார். இதற்கிடை யில் யாரோ குறும்பர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைச் சீர் குலைக்கச் செய்த முயற்சி எனும் செய்தியும் பரவியது. எனவே சிவசிதம்பரத்துக்கு அதில் ஒரு வேகமும் உண்டாகி விட்டது.

எடுத்தார் இப்படி:

'பயப்படா திரு மனமே....'

வாய்பொத்தி, மூச்சு விடுவதைக்கூட மெல்ல அடக்கிக் கொண்டிருந்த கூட்டம் உணர்ச்சியால் துள்ளிக் குதித்தது. கையொலி அடங்க நெடுநேரம் பிடித்தது. பிறகு சிவ சிதம்பரத்தின் கம்பீரமான குரல் அரங்கை அதிர வைத்தது. பின்னர் சேலம் செயலட்சுமியின் இசை நிகழ்ச்சி. இது தென்றல் போன்ற இனிமை. 'கானல்வரிப்' பாடல்களை அம்மையார் பாடும்போது மிகவும் சுவைத்துக் கேட்டேன். பட தடவை பாடமாக நடத்தியவன் அல்லவா நான்? குறவஞ் சிப் பாடல்களையும் மிடுக்குடன் பாடினார். தேவார, திருவா சகப் பாடல்களையும் சிறப்பாகப் பாடினார்.

எல்லா நிகழ்ச்சிகளும் முடிய இரவு 11.40 ஆகி விட்டது. நடுக்கும் குளிரில் வெளியே வந்தோம். மாநாட்டு ஏற் பாட்டாளர் எனும் முறையில் கிருட்டிணமூர்த்தி அங்கு மிங் கும் ஓடிக் கொண்டிருந்தார். அவர் அந்த வேலைகளை முடித்து வந்தபின் தானே நாங்கள் புறப்பட முடியும். நானும் கண்ணப்பரும் தங்கையும் பிள்ளைகளும் காத்திருந்து புறப் பட்டு, இரவுணவு முடித்துக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு உறங்கும்போது மணி 1.30.

இதற்கிடையில் பகல் 12 மணிக்கு பெர்லின் வர்த்தக் சங்கத்தில் அதன் செயலரைச் சந்தித்து உரையாடுவது என்று ஏற்பாடு செய்திருந்தார் மூர்த்தி. அதன்படி என் தலைமை யில் நம்மூர்த் தொழிலதிபர் முத்துவேலு மற்றும் இருவர் வந்தனர். அவரவர்களும் தத்தம் தொழில்களைப் பற்றிக் கூறினர். வர்த்தக சங்கச் செயலர் தம் அறிவுரை களை வழங்கினார். 30 மணித்துளி உரையாடலுக்குப்பின் தம் சங் கக் கட்டிடத்தைச் சுற்றிக் காட்டினார். விரிவுரை அரங்கம், வரவேற்பு அறை, உணவறை, நண்பர்கள் சந்தித்து உரை யாடும் இடம் ஆகியவற்றைப் பார்த்தே அயர்ந்து போய் விட் டோம். அத்தன அழகு! ஒழுங்கு! 1879–இல் 329 தொழில் முனைவோரைக் கொண்டு தொடங்கப்பட்ட

பெர்லின் வர்த்தக சங்கம் இது (Assn. of Berlin Merchants and Industrialists). பெருமையோடு வளர்ந்து வந்த இந்தச் சங்கம் இரண்டாம் உலகப் போரின் பின் அதுவும் இட்லருடைய திருவிளையாடலால் பெரும் சோதனைகளைச் சந்தித்தது. இரண்டாம் உலகப் போரால் 85% தொழில் ஆற்றல் முற்றிலும் சிதைக்கப்பட்டது. ஓங்கி உயர்ந்திருந்த தொழில் நிறுவனங்கள் உடைந்து சிதைந்து சாம்பலாகியும் போய் விட்டன என்பதை அவர்கள் தந்த விளக்கக் குறிப்பில் தந்துள்ளனர். ஆனால் இன்று ஒற்றுமையுடன் உழைத்து உருவாக்கி உலக அரங்கில் தொழில் முன்னேற்றத்தில் முன்னிற்கின்றனர்.

கேட்டு வியந்தோம்; பார்த்து மகிழ்ந்தோம். அழிவுப் பகுதியையும் ஆக்கப் பகுதியையும் பார்த்து உண்மை உணர்ந்து திரும்பினோம். அரைமணி நேரத்தில் எங்களை அசத்தி அனுப்பி வைத்தார் அந்த மனிதர்! வியப்பு நீங்காத நிலையில் மீண்டும் மாநாட்டு அரங்கிற்குள் வந்து அமர்ந் தோம்.

*14.8.93*

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள். சென்னையில் அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றும் இரா.நடராசன் தலைமையில் முனைவர் திருமுருகன் தொடங்கி வைத்தார். பின்னர் முனைவர் சனார்த்தனம் தலைமையில் கருத்தரங்கு.

இந்த ஆய்வரங்கில் பண்டிதர் கா.பொ.இரத்தினம், புதுவை வீர.மதுரகவி, மலேசியப் பேராசிரியர் இர.ந.வீரப் பன், கவிஞர் இரவிபாரதி, இலண்டனிலிருந்து வந்த இரா சேசுவரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் பங்கு பெற்று உரை யாற்றினர். இராசேசுவரி தனித்தமிழ் இயக்கம், கலப்புத் தமிழ் பற்றியெல்லாம் மேலோட்டமாகப் பேசியதால் நான் எழுந்து எதிர்க்க வேண்டியதாயிற்று. மறைமலையார், பாவாணர் பற்றிய விவரங்கள் சொன்னபிறகு சகோதரி இராசேசுவரி ஒப்புக் கொண்டார். அதன்பின் எஞ்சிய நாட் களில் என்னுடன் நேரடியாகப் பேசிப் பல செய்திகளை

அறிந்து கொண்டார். இலண்டனில் ஆங்கிலம் பேசி, தமிழை யும் பேணுகின்ற தங்கட்குரிய இடர்களை எடுத்துச் சொல்லி வருந்தினார். கடைசிவரை நட்புணர்வோடு மதித்து நடந்து கொண்டு மகிழ்வித்தார்.

பிற்பலில் வா.மு.சேதுராமன் தலைமையில் இறையன் முன்னிலையில் 'தமிழை நினைப்போம்; தமிழரை இணைப் போம்' எனும் தலைப்பில் பாட்டரங்கம். இரவிபாரதி, கோவிந்தராசன், திருவாசகம், மகேந்திர ராசா மற்றும் சில கவிஞர்கள் கவிதை படைத்தனர்.

அதற்குள் அரங்கம் நிறைந்து விட்டது. இந்த நேரத்தில் மாலை 5.30 மணி அளவில் என் தலைமையில் பட்டிமன்றம். தமிழரின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் தேவை தற்காலக் கடமையே! பழங்காலப் பெருமையே! எதிர்காலப் புதுமையே! எனும் தலைப்பில் நிகழ்ச்சி. முக்காலமும் அலசிப் பார்த்துத் தமிழரின் முன்னேற்றத்துக்குத் தடைக்கல் எதுவென அறிந்து தகர்த்தெறியும் பெரிய முயற்சி. பாரிசுப் பேராசிரியர் சக்திப்புயல், கணேசலிங்கம், ஆண்டவர் முதல் அணி. இதில் பிரான்சு, செருமனி, இந்திய நாட்டைச் சேர்ந்த மூவர் இருப்பதைக் கண்டால் தமிழரை எப்படி இணைத்திருக் கிறோம் என்று தெரியும். திருமுருகன், நாராயணசாமி, உலோகநாதன் இரண்டாம் அணி. இரவிபாரதி, கீதாஞ்சலி, சின்னராசேசுவரன் ஆகியோர் மூன்றாவது அணி. நேரம் சுருக்கம். இதற்குள் சிலர்க்கு அடங்க முடியவில்லை. சிலர் பட்டிமன்றத்தில் முதலில் ஏறுவதால் ஏற்பட்ட குறை. பயிற்சி யுள்ள பலரின் வேகப் பேச்சு. என் நிறைவான தீர்ப்பு. கேட்டவர்கள் பெரிதும் மகிழ்ந்தனர். பெர்லின் முதலிய பகுதிகளில் இப்படிப் பட்டிமன்றம் கேட்பது என்பது எப்போதாவது கிடைக்கக் கூடிய வாய்ப்புத்தானே! அதன் பின் சிவசிதம்பரம் இசை நிகழ்ச்சி. கனடாவைச் சேர்ந்த விசயா சீனிவாசன் எடுப்பான முறையில் சிறப்பாகப் பாடி னார். ஐசக் இன்பராசாவின் நகைச்சுவை நிகழ்ச்சி. பெர் லின், பிரான்சைச் சேர்ந்தவர்கள் நடனங்கள். ஆத்திரேலியா விலிருந்து வந்த சண்முகராகவன் இன்னிசை நிகழ்ச்சி.

எல்லாம் சிறப்பாக நடந்து முடிந்தன.

*15.8.93*

நான்காவது நாள் நிகழ்ச்சிகள் மறைமலை அடிகளார் அரங்கத்தில் தொடங்கின. வா.மு.சேதுராமன் தொடக்க வுரை – முத்தமிழ்க் காவலர் தலைமை – திருச்சி அண்ணாமலையார் முன்னிலை. உலக நாடுகளில் தமிழர் நிலை குறித்துக் க.ப.அறவாணன், மலேசியா இர.ந.வீரப் பன், கா.பொ.இரத்தினம், நீதி அரசர் கிருட்டிணா வைகுந்தவாசன் (இவர்தான் ஐ.நா.அவையில் யாரும் எதிர் பாரா வகையில் தமிழ் ஈழம் பற்றிப் பேசியவர்) நயினை விசயன், ஈழமணி சிவகுமாரன், தமிழன் காசிலிங்கம், இரா. சனார்த்தனம், சக்திப்புயல், சிசல்ஸ் நடேசன், நாகலிங்கம், சோமாஸ்கந்தன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

பிற்பகல் பி.வேணுகோபால் தலைமையில் அ.முத்துவேல் தொடங்கி வைக்கச் செல்வநாயகம் முன்னிலையில் கருத் தரங்கம். மருத்துவத் தொழில் குறித்து மருத்துவர் கண்ணப் பரும், வேளாண்மை குறித்துக் கோவிந்தராசனும் ஸ்ரீபதி, உருத்திரமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

அடுத்து ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக நூல் வெளியீட்டு விழா. இளைய கவிஞரும் வளரும் பிள்ளையுமாகிய வா.மு. சே. ஆண்டவர் எழுதிய 'வேர்களும் விதைகளும்' எனும் நூலைக் கி.ஆ.பெ.வி. வெளியிட, நான் உரையாற்றினேன். கவிதைகளைத் திறனாய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவன் எனும் முறையில் மிக எளிதாகத் திறனாய்ந்து சுருக்கமாகவே பேச்சை முடித்துவிட்டேன்.

பின் மாநாட்டு நிறைவுரை. கி.ஆ.பெ.வி.யும், வேணு கோபால் மற்றும் நானும் நிறைவான உரை செய்தோம். விடுதலைப் புலிகள் தொடர்பான செய்தியை ஓர் இந்தியக் குடிமகன் எனும் முறையில் தெளிவு படுத்தினேன். தமிழ் ஈழத்தை மீட்டெடுப்பதில் அவர்கள் எடுத்திருக்கும் நிலைப் பாடு குறித்தும், இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் சூழல் களால் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட

துடன், தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்பு, தேர்தல் தோல்விகள் குறித்தும், பொதுவாகவே இப்போது ஈழத்தமிழர் படும் இன்னல்களைக் குறித்தும் விரிவாய்ப் பேசினேன். இங் கொன்று பேசி விட்டு இந்தியாவில் போய் மறந்து விடுபவனும் அல்ல. இந்தியாவின் நிலையை மறைத்துவிட்டுக் கைதட்டுக் காகக் கதை சொல்பவனும் அல்ல என்பதைத் தெளிவுபடுத் தினேன். மாநாட்டு அமைப்பாளர்கள் வா.செ.குணரத்தின மும், வா.மு.சேதுராமனும் இந்த மாநாட்டை நடத்துவதற்குப் பட்ட துன்பங்களை எடுத்து வைத்து மனம் நெகிழ வைத்தனர்.

மாநாட்டு மலர்கள் சில வெவ்வேறு வானூர்தி நிலையங் களிலிருந்து திரட்டப்பட்டு 200 படிகள் அளவிலாவது வந்து சேர்ந்தன. அந்த வகையில் மேல்நாட்டு வானூர்தி நிலைய அலுவலர்களின் பொறுப்புணர்ச்சியை வியந்து பாராட்டத் தான் வேண்டும். (இந்தியாவின் பொறுப்புணர்ச்சியை இறுதி யில் பார்ப்போம்). என்றாலும் வந்த மக்கள் மலர்களை ஆர்வத்தோடு வாங்கிக் கொள்ளவில்லை. வா.மு-சே. அதில் கடுமையான இழப்பைச் சந்தித்தார் என்பதை மறந்து விட முடியாது. தமிழகத்திலிருந்து சென்ற பலரும் தத்தம் நூல் களில் சிலவற்றை எடுத்துச் சென்று விற்பனைக்கு வைத்தனர். மிகமிகக் குறைந்த அளவிலேயே நூல்கள் விலை போயின என்பதைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். மலேசியா, சிங் கப்பூரில் நூல் வாங்குவதில் உள்ள ஆர்வம் இங்கு இல்லை.

எங்கள் உரைகள் முடிந்ததும் சிவசிதம்பரம், சேலம் செயலட்சுமி, பொன் சுபாஸ் சந்திரன் ஆகியோர்தம் இசை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. நாடகம், பரதநாட்டியம், குழு நடனம் என்று மேடை குலுங்கியது.

மொத்தத்தில் நான்கு நாள் நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன என்றே சொல்லலாம். இந்த நிறைவோடு – எங்கோ உள்ள பெர்லினில் 500, 600 தமிழர்களை ஒருங்கு கூட்டி நடத்தப்பட்ட மாநாட்டு வெற்றி நிறைவோடு இரண்டு செய்திகளை மட்டும் இணைப்பது கடமையாகும். பிறர் இது டெய்ல் பீஸ் (Tail Piece) என்பார்கள். நமக்கெதற்கு இந்த ஆங்கிலமெல்லாம்!

முதல் செய்தி மகிழ்ச்சியானது.

மாநாடு தொடங்கிய அன்று மாலையில் சரியாக 4 மணிக்கு மண்டபத்தின் வெளியே இருந்த தொலைபேசியில் சென்னைக்குப் பேசினேன். இப்போது சென்னையில் இரவு 8.30 மணியாக இருக்கும் என்பதாலும் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் இருப்பார் என்பதாலும் பேசினேன். உடனே தொடர்பு கிடைத்தது. உசேன் என்னிடம் பேசிவிட்டுத் தலைவரிடம் கொடுத்தார்.

தலைவர் தொலைபேசியில் முதலில் பேசிய வாக்கியமே 'யார் இட்லரா பேசுவது' (செருமனி என்றாலே நினைவுக்கு வருவது இட்லர்தானே!) 'உங்க தம்பி பேசுறேண்ணே! பெர்லின் மாநாட்டு அரங்கத்திலிருந்து பேசுகிறேன்' இந்த நேரத்தில் நான் பேசியதாகச் சுற்றி இருந்தவர்களிடம் சொல்லியிருப்பார் போலிருக்கிறது. ஒரே சிரிப்பு. அந்தச் சிரிப்பொலி செருமனியில் தெளிவாகக் கேட்கிறது. தலைவர் தொடர்ந்தார். 'மாநாடு வெற்றிபெற என் வாழ்த்துகளைச் சொல்லுங்கள்' என்றார். பிறகு மாநாட்டு அரங்கிற்கு வந்து குணரெத்தினத்திடம் தலைவரோடு பேசிய செய்தியைச் சொன்னேன். பெரிதும் மகிழ்ந்தார். உடனே மாநாட்டு அரங்கில் ஏறி இந்தச் செய்தியை அவரே தெரிவித்ததும் அரங்கமே கைதட்டி ஆரவாரித்தது.

மாநாட்டு நிகழ்வுகளை முடிக்கும்போது நன்றியுரை கூற வந்த தங்கராசா மிகக் கவனமாகத் தீர்மானங்களை முதலில் படித்துவிட்டு அதன் பிறகு நன்றி கூறினார். அனைவர்க்கும் ஒருமித்த கருத்து இருந்த காரணத்தால் 'தமிழ் ஈழத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெர்லினில் கூடிய தமிழர்களின் பெருவாரியான விருப்பத்தினை அறிந்து தீர்மானங்களை வடிவமைத்தோம். ஆனால் இத் தீர்மானங்கள் உருவாகும்போது ஒரு பெரிய தகராறு நடந்துவிட்டது. அடிதடி வரைக்கும் போய் நல்லவேளையாக ஒழுங்காக முடிந்தது. பாரிசிலிருந்து வந்த ஈழத் தமிழர் ஒருவர் – கீழ்க்கரவை பொன்னையன் என்று பெயர்.

மாநாட்டில் பங்கு பெற வந்த அவர் சற்று வரம்பு மீறி நடந்து கொண்டார். அவரே சில தீர்மானங்களை எழுதி வைத்துக் கொண்டு அவற்றைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தார். வா.மு.சே., குண ரெத்தினம், அறவாணன் போன்றவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. இவர்களுக்கும் எரிச்சல் வந்துவிட்டது. இந்த நேரத்தில் நானும் மருத்துவர் கண் ணப்பனும் வந்து சேர்ந்தோம். நாங்களும் விளக்கிச் சொன் னோம். கேட்டபாடில்லை. இதனால் நாங்கள் பேசுவதை எங்களுக்கும் தெரியாமல் சிறிய கருவியால் ஒலிப்பதிவு செய்ய முயன்றார் பொன்னையன். பொங்கி எழுந்த மருத்துவர் கண்ணப்பன் உடனே அந்தக் கருவியைப் பறித்து அதன் நாடாவை வெளியே எடுத்துவிட்டார். அடுத்து எனக்கேயுரிய சினத்துடன் நான் திட்டினேன். வா.மு.சே. எழுந்து அடிக்கக் கை ஓங்கிவிட்டார். பொன்னையன் வெலவெலத்துப் போய் விட்டார். உடனே நானும் வா.மு.சே.யும், கண்ணப்பனும், குணரெத்தினத்திடம் கூறினோம். இந்தத் தீர்மானக் குழு விற்குத் தொடர்பில்லாத ஒருவரை உள்ளே விட்டது தவறு. எனவே நாங்கள் மாநாட்டு அரங்கை விட்டு வெளியேறு கிறோம்' என்று தெரிவித்துவிட்டு எழுந்தோம். குணரெத் தினம் சடாரென்று எழுந்து குனிந்து எங்கள் கால்களை நோக்கிக் கை நீட்டினார்.

'மன்னியுங்கள் எங்கள் மானமே போய்விடும்' என்றார். மிகப் பெரிய மனிதர் என்பதை அவர் காட்டிவிட்டார். அதற்கு மதிப்பு—நாங்கள் பேசாமல் அடங்கிவிட்டோம். பிறகு நாங்கள் மட்டுமே அமர்ந்து தீர்மானங்களை வடிவமைத்தோம்.

இந்த அளவோடு மாநாட்டுப் பணிகள் முடிந்தன.

மாநாட்டு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த போது பெர்லின் மாநகரத் தந்தை (மேயர்) 'ஹான்ஸ்டெய்ட்டர் மேய்' வருகை தந்து சிறப்பித்தார். அரை மணி நேரம் முன் வரிசையில் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைச் சுவைத்தார்.

அவருக்குக் கிருட்டிணமூர்த்தி போன்ற நண்பர்கள் பேசப் படும் பேச்சினை மொழி பெயர்த்துச் சொன்னார்கள். எங் களைப் போன்ற சிலர் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டோம். அதிலும் 'Former Speaker of Tamil Nadu Assembly' என்றதும் மிகவும் மகிழ்ந்தார். தானும் ஓர் அரசி யல்வாதி என்பதால் இனம்புரியாத வரவேற்பாக அது இருந்திருக்கும். எனினும் அடுத்து நான் தெளிவுபடுத்தினேன்.

ஓர் அரசியல்வாதியாக நான் இதில் பங்கு பெறவில்லை. ஒரு கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் என்ற முறையில் முனை வர் பட்டம் பெற்ற தமிழ் அறிஞர் (Tamil Scholar) என்ற முறையில் கலந்து கொள்வதாகச் சொன்னதும் அவருக்கே வியப்பு.

தன் பெயர் அட்டையை எடுத்து அதில் தன் கையொப் பத்தையும் இட்டுக் கொடுத்தார். பெயர் அட்டையில் அனைத் தும் செர்மன் மொழியிலிருப்பதைக் க்காணலாம். வெளிநாட் டுக்காரன் ஒருவனிடத்தில் தரும்போது கூட அவன் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பாக ஆங்கிலத்திலும் விவரம் அமையும்படியான ஓர் அட்டையை வழங்கியிருக்கலாமே என்றுதான் நாம் சிந்திக்கிறோம். இந்த மாதிரி நியாயம் எல்லாம் பேச நமக்கு மட்டுமே தெரியும்.

ஆனால் செர்மானியர்கள் – எவரைப் பற்றியும் கவலைப் படவில்லை. தன் மொழி தன் நாடு – உலகம் இதை ஏற்க வேண்டும். அவ்வளவுதான். ஏற்காவிட்டால் கவலை யில்லை.

ஆங்கில மோகம் கொண்டு அலையும் தமிழ் அன்பர்கள் சிந்திப்பார்களா? செருமானியர் பார்வையில 'ஆங்கிலம்' உலக மொழியன்று என்பதுதான் உண்மை.

மாநாடு முடிந்தபின் அடுத்த மூன்று நாளும் பெர்லின் மாநகரைச் சுற்றிப் பார்க்கும் வேலையை மேற்கொண்டோம். இடையில் செல்வராசா, தங்கராசா, குணநேசன் மற்றும் சிலரது இல்லங்களில் விருந்துகளுக்கும் போய் வந்தோம். 16, 17, 18 ஆகிய மூன்று நாட்களும் பார்த்த காட்சிகளையும்

இடங்களையும் பற்றித் தெரிந்து கொண்டால்தான் பயணம் நிறைவுறும்.

செர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கிழக்குச் செர்மனி என்றும் மேற்கு செர்மனி என்றும் இயங்கிய காலம் ஒன்றுண்டு. நீண்ட காலத்திற்குப் பின் 11.11.1989 அன்றுதான் இரண்டும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே செர்மனி ஆகியது. கிழக்குச் செர்மனி உருசிய நாட்டு மேலாண்மையின் கீழும், மேற்கு செர்மனி, அமெரிக்கா, பிரிட்டன் பிரான்சு ஆகிய நாடுகளின் பிடியிலும் இருந்தன. இரண்டும் தனித்தனியாக இருந்த காலத்தில் மேற்கு செர்மனி பெற்ற முன்னேற்றத்தையோ வேகமாக வளர்ச்சியையோ கிழக்குச் செர்மனி பெறவில்லை. உருசிய நாட்டின் பிடியிலிருந்தும் சரியான வளர்ச்சியடைவில்லை என்ற உண்மையை எல்லாரும் கூறினார்கள். ஒன்றுபட்ட பிறகுகூடக் கிழக்குச் செர்மனியின் பழைய வடிவங்கள் இன்னும் முழுமையாக மாற்றப்படவில்லை. ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டும் பிரிக்கப்பட்டபின் இரண்டுக்கும் இடையில் ஏறத்தாழ 680 மீட்டர் நீளமுள்ள சுவர் வைத்துத் தடுக்கப்பட்டது என்பது தான் வியப்பான உண்மை. 89–க்குப் பின் சுவர் இடிக்கப் பட்டு விட்டாலும் பெர்லின் நாடாளுமன்றக் கட்டிடத்தின் முன் இடிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்ட சுவரின் பகுதி உள்ளது. அதற்கு முன் நின்று நாங்கள் எடுத்துக் கொண்ட படமும் இங்கே தரப்பட்டள்ளது. சுவர் இவ்வளவு உறுதியாக – இரும்புத் தளவாடங்களும் சிமெண்டும் கருங்கற் சல்லியும் கலந்து மிகமிக உறுதியாக நிற்கிறது. இதை இடிப்பதற்கு எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள் என்று தெரிகிறது. இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது குடும்பத்தின் ஒரு பகுதி கிழக்குச் செர்மனியிலும், மறுபகுதி மேற்குச் செர்மனியிலும் மாட்டிக் கொண்டதும் உண்டு. கணவன் ஒரு பகுதியிலும், மனைவி ஒரு பகுதியிலும் மாட்டிக் கொண்டதும் உண்டு. எப்படி யாவது ஒன்று சேர்ந்து விடவேண்டுமே எனும் துடிப்பில் ஒரு செர்மனியின் சுவர் ஒரத்தில் உள்ள மாடியிலிருந்து மறு செர்மனியில் குதித்தவர்கள், கயிறு கட்டி இறங்க முற்

பட்டவர்கள் உண்டு. கணவனைப் பிரிந்த மனைவி, குடும்பத்தைப் பிரிந்த பிள்ளை என்று ஏதாவது ஓர் அளவு கோல் வைத்துக் கொண்டு அவர்களை மன்னித்துவிட்டு விடலாம். ஆனால் அப்படி விடவில்லை அரசு. அவர்கள் அனைவருமே எல்லை தாண்டினார்கள் எனும் ஒரே குற்றத் திற்காக ஈவு இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். குதித்த வர்கள் 80 பேர் வரை கொல்லப்பட்டனர். இரண்டு செர் மனியையும் பிரிக்கும் ஆறு ஒன்று செல்கிறது. இப்போது அதில் சுற்றுலாப் படகுகள் பல பயணிகளை ஏற்றிக் கொண்டு வலம் வருகின்றன. ஆனால் பிரிக்கப்பட்டிருந்த காலத்தில் எப்படியும் மனைவி மக்களோடு போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்றோ, ஒரு செருமனியில் இருக்கப் பிடிக்கா மலோ துணிந்து ஆற்றைக் கடக்க முற்பட்டவர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1949-முதல் 1989 வரை 40 ஆண்டு காலம் இந்தக் கொலைகள் நடந்துள்ளன. அப்படிச் சுட்டுக் கொல்லப்பட்டவர்களையெல்லாம் வரிசையாய்ப் புதைத்து அவர்களது பெயர்களுடன் கல்லறைகளை - நினைவிடங்களை வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்த போது என் கண்கள் கலங்கின. பாவம், பாசம் காரணமாகத் தாண்டி வாழ்க் கையையே இழந்து விட்டவர்கள், இது தவிர வேறு குற்றம் செய்யாதவர்கள் இப்படி அடங்கிப் போய்விட்டார்களே என்று நினைத்தேன். இவ்வளவு கொடுங்கோல் நடந்திருக்கிறதே என்று வருந்தினேன். இந்த நினைவிடம் எங்கே இருக்கிறது தெரியுமா? இட்லரின் அரண்மனைக்கு அருகிலேயே இருக் கிறது. இட்லரின் அரண்மனையோ மூவர்ணக் கொடி தாங்கி இன்றும் பீடு குன்றாமல் நிமிர்ந்து நிற்கிறது. இந்த அரண் மனையில் இரண்டாவது அல்லது மூன்றாவது மாடியின் முகப்பில் நின்றுதான் இட்லர் உரையாற்றுவது வழக்கமாம். இட்லரின் அரண்மனையை ஒரு முறை சுற்றிப் பார்த்தோம். உரிய நேரமின்மையால் விரைவில் முடித்தோம். செர்மனி யின் கொடியில் கருப்பு, சிவப்பும் அதன் கீழே மஞ்சளும் இருப்பதைக் காணலாம்.

இட்லர் பெரிய கொடுங்கோலர் என்பது உலகறிந்த உண்மை என்றாலும் இட்லரின் பெயரைச் சொல்லிக் கொண்டு அவருக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிற இடங்கள் இரண்டு. ஒன்று பெர்லின் நகரத்துக்கு உள்ளேயே அவரால் வெட்டுவிக்கப்பட்ட செயற்கை ஆறு. இதில் நடை பெற்று வரும் படகுப் போக்குவரத்து மிகப் பெரிய அளவில் முன்னேற்றத்துக்குப் பயன்படுகிறது. நம்நாட்டில் பல ஏரிகள், பல குளங்கள் மன்னர்களால் உருவாக்கப்பட்டவைதான். நீர்த் தேக்கங்கள் தேவைப்பட்ட அக்காலத்தில் மனித சக்தியைப் பயன்படுத்தி அவர்களால் அவற்றை உருவாக்க முடிந்தது. ஆனால் இந்தியா ஒரே நாடு என்று ஒப்புக் கொண்டு செயற்படும் நாம் ஒரே நாட்டில் வெள்ளப் பெருக் கையும், வறட்சியையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பிரமபுத்திராவில் பெருகி ஓடும் வெள்ளம் இந்தியாவின் வடபுலத்தில் எத்தனையோ சீரழிவுகளை உண்டாக்கி விடுகிறது. இன்றும் அந்த நிலை உள்ளது. தமிழ்நாட்டிலோ வறட்சி தாண்டவமாடுகிறது. வடபுலத்தில் வெள்ள நிவார ணத்துக்குப் பல கோடி செலவு. இங்கே வறட்சி நிவாரணப் பணிகட்குச் சில கோடி செலவு. நம் திட்டங்களும் சரி யில்லை; சட்டங்களும் சரியில்லை

பாரதி எவ்வளவு சிந்தித்துப் பாடினான்.

வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்" என்றானே!

1947 முதல் இன்று வரை ஒரு நாளைக்கு 50 மீட்டர் தொலைவு வெட்டியிருந்தாலும் இந்நேரம் பிரமபுத்திரா வெள்ளம் மையத்து நாடுகளையும், தென்புலத்தையும் வளப் படுத்தியிருக்கும். ஆனால் அரசியல் காரணமாக அது முடமாகிப் போனது. அது ஏன்? நியாயமான முறையில் நமக்கு வர வேண்டிய காவிரி நீரைக்கூட நமக்கு வாங்கித் தர மைய அரசால் முடியவில்லையே!

பெர்லினில் செயற்கை ஆற்றங்கரையில் நின்று கொண்டே இவற்றையெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தேன். உடன்

இருந்த நண்பர்கள் 'என்ன ஊர் நினைப்பா?' என்றார்கள். அவர்கட்கு என் ஆதங்கத்தை எடுத்துச் சொன்னேன். ஒரு சர்வாதிகாரியான இட்லரால் இது முடிந்திருக்கிறது. மிகப் பெரிய சனநாயகவாதிகளான நேருவாலும் இந்திரா காந்தியாலும் இது நடக்கவில்லையே என்றேன். நண்பர்கள் மறுக்கவில்லை.

இட்லரின் மற்றொரு புகழ்ச் சின்னம் அவரால் கட்டி எழுப்பப்பட்ட விளையாட்டரங்கம் (Stadium). ஓர் இலட்சம் பேர் ஒரே நேரத்தில் உட்கார்ந்து காணக்கூடிய அளவில் அந்த அரங்கம் மிக அருமையாக அமைந்திருக்கிறது. அத்தனைபேர் வந்தாலும் அவர்களது வண்டி, வாகனங் களை முறையாக நிறுத்தி வைப்பதற்கான மிகப் பெரிய திடலும் நாலாபக்கமும் விரிந்து கிடக்கிறது. இன்றும் அது முறையாகப் பேணப்பட்டு வருகிறது. நம்மூராக இருந் தால் இந்தத் திடலில் எத்தனை வகையான ஆக்கிரமிப்பு களையோ பார்த்திருக்கலாம். குடிசைகள், கடைகள், பிறகு கெட்டிக் கட்டிடங்கள், பட்டா வழங்கச் சொல்லிப் போராட் டங்கள், செல்வாக்குள்ள சிலர் 'பினாமி'யாக வளைத்துப் போடும் இடங்கள் என்று எத்தனையோ வகையான நோய் களுக்கு ஆளாகி அந்த விளையாட்டரங்கே சிதைவுற்றிருக் கும்.

நிறுவனங்களை உண்டாக்குவது பெரிதல்ல. அவற்றைத் தொடர்ந்து பேணுவதுதான் முறை. நம்நாட்டில் அது கூட இல்லை என்பதற்கு - அரசியல் காழ்ப்புணர்வால் ஒருவர் தொடங்கிய நிறுவனம் அடுத்த ஆட்சியில் அலட்சியப்படுத் தப்படுவதற்கு ஆயிரம் எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆனால் சர்வாதிகாரி – கொடுங்கோலன் இட்லர் நிறுவினால் என்ன – அவன் நிறுவிய விளையாட்டரங்கம் 'ஒலிம்பிக் 2000' கொண் டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. ஆம்! கி.பி. 2000–த்தில் கொண்டாடப்பட வேண்டிய ஒலிம்பிக்கைப் பெர்லினில் நடத்துவதற்கு அந்த அரசு கடும் முயற்சி மேற்கொண்டிருக்கிறது. 'Olympic 2000' எனும் பெயரில் பல விளம்பரங்களைச் செய்து வருகின்றனர். ஆனால் அங்கு

ஒலிம்பிக் நடத்த இசைவு கிட்டவில்லை என்று அண்மைச் செய்தி.

பார்வையிட்ட பல பகுதிகளில் மிகப் பெரிய உயிர்க் காட்சி சாலை (Zoological Garden) ஒன்று. வண்டலூர், திருவனந்தபுரம் முதலான பல இடங்களிலும் பல நாடுகளிலும் விலங்கு மற்றும் பறவையினங்களைப் பார்த் துள்ளதால் இங்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை.

நாங்கள் பார்த்த இடங்களில் சார்லோட்டன்பர்க் அரண்மனை (Charlottenburg Palace) மிகக் குறிப்பிடத் தக்கதாகும். பல ஏக்கர் நிலப் பரப்பில் பழமை மாறாமல் பேணப்பட்டுக் கம்பீரமாக நிற்கும் அரண்மனை அது. பிரசிய ஆட்சியாளர்கள் பலர் (prussian) பயன்படுத்திய அரண்மனை அது. 1695-இல் இருந்து தொடர்ந்து நிர்மாணிக்கப்பட்டு வந்தது. பேரரசியார் கோடைகாலத்தில் தங்குமிடமாக உருவெடுத்தது- பின்னால் வந்த ஒவ்வோர் அரசரும் இதில் தனிக்கவனம் செலுத்திப் புதுப் புதுக் கட்டிடங்களை எழுப்பியுள்ளனர்.

அரண்மனையின் உட்பகுதியில் உள்ள அறைகளில் போடப்பட்டிருக்கிற மேசை, நாற்காலிகளின் அழகு, சீனக் களிமண்ணால் அமைந்த வேலைப் பாடமைந்த பாண்டங் கள், கண்ணாடியால் ஆன அழகழகான சர விளக்குகள், நாணயங்கள், போர்க் கருவிகள், ஒவ்வோர் அறையின் விதானத்திலும் வரையப்பட்டுள்ள காதல் உணர்வைத் தூண்டும் ஓவியங்கள் ஆகியவற்றையெல்லாம் காணக் கண் கோடி வேண்டும். அந்த நாட்டு மன்னர்கள் எவ்வளவு அனுபவித்து வாழ்ந்திருக்கிறார்கள் என்பது ஒருபுறமிருந் தாலும் தன் சுற்றுப்புறத்தையும் வாழ்விடங்களையும் என்ன அழகாக வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது சிலிர்க்காமல் இருக்க முடியாது. அந்த நாடுகளில் பெரும் பெரும் மலர்த் தோட்டங்கள் புகழ் மணம் பரப்பி நிற்கின்றன.
A great part of the social life at the time took place in the large gardens where talented garden architects had created richly decorated and festive sceneries,

என்ற கருத்தை அவர்களே விளக்க நூலில் குறிப்பிடு கிறார்கள். கட்டிடம், சிற்பம், ஓவியம் ஆகிய முக்கலைகளும் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு நம்மை ஈர்ப்பதை உணர்கிறோம். அதற்குள்ளேயே ஒரு சிறு நூலகம் வேறு. ஆனால் எதையும் நாம் எடுத்துப் பார்க்க முடியாதபடி கடுமையான பாதுகாப்புடன் அனைத்தும் திகழ்கின்றன. வரவேற்பறை, ஒப்பனை அறை, படுக்கை அறை ஆகியவை - அதுவும் 280 ஆண்டுகட்கு முன் உருவாக்கப்பட்டவை என்ன எழிலோடு காட்சியளிக்கின்றன! சுற்றிப் பார்த்தவரை போதும் என்று புறப்பட்டோம். அலைந்ததில் களைப்பு; கண்டு மகிழ்ந்ததில் களிப்பு. என்ன அருமையாக வாழ்ந்து பார்த்து அதை நாமும் பார்க்கக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்பதையும், நம்மூரில் பழுதாகி அடைக்கப்பட்டு விட்ட திருமலை நாயக்கர் அரண்மனை யையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டேன்.

இட்லர் என்றால் கொடுங்கோலன், கொலைகாரன் என்றுதானே பெயர்! அப்படிப்பட்ட கொலைகள் நடந்த வகைகள் பற்றி விளக்கும் கண்காட்சியைப் பார்த்தோம். படங்களையும் காட்சிகளையும் அங்குள்ள விளக்கங்களையும் பார்த்து விட்டு மனம் என்னவோபோல் ஆகி விட்டது. மனித உயிர்கள் எவ்வளவு சாதாரணமாகப் பறிக்கப்பட்டுள்ளன! காட்டுக்கு வேட்டையாடப் போகின்றவர்களே கூடக் காட்டையே அழித்து விட முடியாது. ஆனால் இட்லர் ஆயிரம் ஆயிரமாக—சாரி சாரியாகத் தீர்ந்துக் கட்டியிருக்கிறான். இதைப் பார்த்து விட்டுத் திகைக்கமாட்டோமோ என்ன?

இட்லரின் கட்சிக்குப் பெயர் 'தேசிய சமதர்மவாதிகள்' ('National socialists') அதை எதிர்த்து நின்ற அமைப்புக்குப் பெயர் எதிர்ப்பாளர்கள் ('Resistance') எதிர்த்து நின்றவர் களில் குறிப்பிடத்தக்கவர் ஸ்டான்பென்பெர்க். அவர் பெயரால் தான் நினைவிடம் அமைந்துள்ளது. 'Stauffen-bergstrasse memorial' என்று அதற்குப் பெயர் 'பிளாட் ஞன்சு' ('Plotzensee') எனப்படும் சிறையில் பலர் தூக்கி லிடப்பட்டுள்ளனர். இந்த ஒரே இடத்தில் நாஜி சர்வாதி

*காரத்தின்போது 2500க்கு மேற்பட்ட ஆடவர், மகளிர், இளைஞர்கள் தூக்கிலிடப்பட்டனர் அல்லது கில்லட்டினில் வைத்துத் தலை துண்டிக்கப்பட்டனர். செர்மனியர், டச்சுக் காரர், பிரான்சியர், ஆகிய பல இனத்தவரும் இதில் அடங்குவர். 7/8 செப்டம்பர் 1943 நாட்களில் மட்டும் ஒரே இரவில் ஒ்ரு தடவைக்கு எட்டுப் பேராக 186 பேர் தூக்கி லிடப்பட்டனர். அதன் பின்பும் பல தூக்குகள். சிறைக்கு வெளியில் உள்ள ஒரு கூடத்தில் 300 பிணங்கள் ஒரே நேரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.*

*1952-இல்தான் பெர்லின் ஆட்சிப் பேரவை* (Senate) *இட்லரின் சர்வதிகாரத்துக்குப் பலியானவர்களுக்கு என்று ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பியது. அந்த நினைவிடத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒரு சோக வரலாற்றைச் சொல்லிக் கொண்டு நிற்கின்றன.*

During the years of the Hitler dictatorship from 1933 to 1945, hundreds of human beings were put to death by Judicial murder on this spot. They died because they choose to fight against the dictatorship for human rights and political freedom. They included people from every walk of life and nearly every country.

Through this memorial, Berlin honours those millions of victims of the Third Reich who because of their political convictions, their religious beliefs or racial origins, were villified, abused deprived of their freedom or murdered

*ஒரு புறம் கில்லட்டின். மறுபுறத்தில் எட்டுக் கொக்கிகள் கொண்ட இரும்பு உத்தரம். ஒரே நேரத்தில் எட்டுப் பேர் உயிரும் கில்லட்டினில் ஒருவர் உயிருமாக என்ன வேகத்தில் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.*

*1942 டிசம்பர் 22 இல் தொடங்கிய படுகொலைகள் 1945 வரை தொடர்ந்தன. கணவன் மனைவி இருவருமே*

தூக்கிலிடப்பட்டது உண்டு. கடைசி நேரத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளக் கூட அனுமதிக்கப் படவில்லை. அந்த அளவுக்கு - மனிதாபிமானமே தலை காட்ட முடியாத அளவுக்குச் சர்வாதிகாரம் கொடி கட்டிப் பறந்தது.

1945 ஏப்ரல் 25 இல் உருசியப் படைகள் உள்ளே நுழைந்து செர்மனியைப் கைப்பற்றும் வரை படுகொலைகள் நடந்து கொண்டே இருந்தன. உருசியப் படைகள் நுழைந்து பிடிக்கப் போகும் கடைசி நேரத்தில் கூட இட்லரின் படையினர் பல கைதிகளைச் சுட்டுக் கொன்றுவிட்டு, கடைசிவரை தன் இரத்தப் பசிக்குப் பலரை இரையாக்கி விட்டு இரத்தம் தோய்ந்த காட்சிகளோடு தான் சரணடைந்திருக்கின்றனர்.

தூக்கிலிடும் காட்சிகள் அனைத்தையும் படம் எடுத்து வைத்து, தான் அவற்றை மீண்டும் பார்க்க வேண்டும் என்றும் ஆணையிட்டிருந்தானாம் இட்லர். ஆனால் ஒன்றிரண்டு படங்கள் எடுத்தவுடனேயே படம் பிடித்தவர்களால் இந்தக் கொடுமையைச் சகிக்க முடியவில்லை. எல்லாரும் சேர்ந்து படம் எடுக்க முடியாது என்று கூட்டாக மறுத்துவிட்டார் களாம். கெர் சாசெ (Herr sasse) எனும் புகைப்படக்காரர் பிற்காலத்தில் அதைப்பற்றிக் கூறுவது உருக்கமாக இருக்கும்.

'தூக்கிலிடப்பட்டவர்கள் எந்த அச்சமும் நடுக்கமும் இன்றி மிகுந்த நாகரிகத்தோடு தலை நீட்டினராம்,' இப்படிச் சொல்லிச் சொல்லி அழுதிருக்கிறார் அவர்.

இவர்களுக்கெல்லாம் தூக்குத் தண்டனை விதிக்கும் அமைப்புக்குப் பெயர் மக்கள் நீதிமன்றம் (People's Court). எப்படியிருக்கிறது? இட்லரின் சர்வாதிகார ஆணைகளைச், செயற்படுத்தும் அமைப்புக்கு மக்கள் பெயர். இன்று நம் நாட்டில் நடக்கும் சனநாயகப் படுகொலைகள் கூட மக்க்ள் பெயரால் தானே நடக்கின்றன!

மெல்ல மெல்ல அனைத்துக் கட்சிகளும் ஒழிக்கப்பட்டன. இட்லர் பொறுப்பேற்ற ஆறே மாதத்தில் பொதுவுடைமைக் கட்சி உட்பட அனைத்தும் ஒடுக்கப்பட்டன. செர்மனியில்

ஒரே கட்சி அதுதான் National Socialists. கிறித்தவ தொழிற்சங்கத் தலைவர்கள் பொறுப்புகளிலிருந்து தள்ளப் பட்டனர். கிறிஸ்துமஸ் விழாவை ஒட்டி மட்டும் சில கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மொத்தத்தில் மக்கள் எல்லாம் அச்சம் காரணமாக வாய்மூடிக் கொண்டு விட்டனர். இதில் புகழ்பெற்ற புளுகன் கோயபல்சின் இடைவிடாத விளக்கம் வேறு இட்லரின் செயல்களுக்குப் புகழ் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தது.

யூதர்களை ஒழிப்பதில், நாட்டை விட்டு வெளியேற்று வதில் இட்லர் அரசு மிகவும் கடுமையாக இருந்தது- அப் போது வாழ்ந்து இப்போதும் உயிரோடிருக்கும் முதியவர் களைப் பார்த்து இன்றைய செர்மன் இளைஞர்கள் கடுமை யாகக் கேட்கிறார்கள் 'எப்படி இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டீர்கள்' என்று. அந்த முதியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"அரசியல் சட்ட ரீதியாக இயங்கும் இன்றைய இளைஞர் கட்கு நாங்கள் என்ன சொல்லி விளக்க முடியும்? இட்லரின் காவல்துறை ஆட்சியில் (National Socialist Police State) வாழ்ந்து பார்த்திருந்தால்தானே தெரியும்! அரசுக்கு எதிரான ஒரு துண்டறிக்கை அச்சிடுவதும் வழங்குவதும் மரண தண்டனைக்குரிய குற்றம் என்பதை உணர்ந்தால் இவர்கள் இப்படிப் பேசுவார்களா?" என்கிறார்கள்.

சிறந்த அரசியல் சிந்தனை படைத்தவர்கள், மிகப் பெரும் பொறுப்பில் இருந்தவர்கள் எல்லாம் கொல்லப்பட் டுள்ளனர். அவர்களில் சில பெயர்களையும் அவர்களது பொறுப்புகளையும் அறிந்தால் வியப்பாக உள்ளது. இராபர்ட் ஸ்டாம் - பொதுவுடைமைக் கட்சி சார்ந்த அரசியல் மேதை. 4.11.1937 இல் தலை துண்டிக்கப்பட்டது. ஜூலியஸ் எலபர் - ஓர் இதழாசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர். பின்னர் நிலக்கரி வாணிகர். ஸ்டாபென்பெர்க்கின் நெருங்கிய தோழர். 5.1.1945இல் தூக்கிலிடப்பட்டார். வில்ஹெல்ம் லீக்னர் - ஹென்ஸ் மாநிலத்தில் அமைச்சராக இருந்தவர். பின்னர் துணை வேந்தராக இருந்தவர். "ஒன்றாக

நில்லுங்கள்; செர்மனியை மீண்டும் உருவாக்குங்கள்" என்று சொல்லி விட்டுத் தூக்குக் கயிற்றை முத்தமிட்டார்; ஆல்பிரட் டெல்ப் இயேசு சபையின் மதகுரு. 2.2.1994 இல் தூக்கு. ஜோஹன்னஸ் போபிட்சு - பிரசிய நாட்டு நிதி அமைச்சர். 2.2.1945இல் தூக்கு. வான் ஹாசல் - உரோம் நாட்டில் இருந்த செர்மனிய தூதுவர். வெளியுறவுத் துறையில் வல்லவர். கால் பிரெடரிக் - மேயராக இருந்தவர். ஜோஹன்னா கிர்சான் எனும் பெண்மணி உட்படப் பலரது பெயர்ப் பட்டியல் நீண்டு கொண்டேபோகிறது.

நான் இப்படி எழுதிக் கொண்டு போனால் என் பயணக் கட்டுரையும் நீண்டு கொண்டே போய்விடும். எனவே இந்தக் கொடுமைக் கதைகளை முடித்து விடுகிறேன். இரண்டு செய்திகளை மட்டும் சொல்லியாக வேண்டும்.

பல கைதிகளைப் புகைவண்டிகளில் ஆடு மாடுகள் போல் ஏற்றி அடைத்து ஒரு சுரங்கப் பாதைக்குள் போகும்போது இருபுறமும் அடைத்து விட்டு நெருப்பாவியை உள்ளே விட்டு அவித்துக் கொன்ற கொடுமைகளும் நடந்துள்ளது.

பெர்லினிலேயே மற்றொரு நினைவிடம். அதைப் பிற் காலத்தில் செர்மனி நாட்டுப் பேரவைத் தலைவர் (Parlimentary Speaker) நிறுவியிருக்கிறார். நானும் பேர வையின் முன்னாள் தலைவர் என்ற உணர்வோடு அந்த நினை விடத்தில் ஒரு படம் எடுத்துக் கொண்டு உள்ளே போய்ப் பார்த்து விட்டு வந்தேன். (முகப்பட்டையில் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களுடன் நூலாசிரியர் நிற்கும் இடம்) ஐந்து ஐந்து பேராகத் தூக்கிடும் அமைப்பில் உள்ள கொக்கிகள், உடல்களை எரிக்கும் மிகப் பெரிய சுடுகலன் கள் ஆகியவற்றைப் பார்த்துவிட்டுப் பெருமூச்சோடு வெளியே வந்தோம்.

இவ்வளவு பேருக்கு மரண தண்டனை வழங்கிக் குருதி நீரில் ஆடித் திளைத்த கொடுங்கோலன் இட்லர் என்ன ஆனான்?

"கொற்றமன்னர் முடி சூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றும் கூகை ஆந்தையோடு
முதுபேய் வாழும் காடாமே!"

என்றான் உமார்கய்யாம்.

ஆனால் கொடுங்கோலன் இட்லர் வாழ்ந்த அந்த அரண்மனை பேய் வீடாக மாறவில்லை. மாறாக வருவோர் போவோர் பார்த்துத் தெரிந்து கொள்ளும் கண்காட்சியாக மாறியிருக்கிறது. அவன் வாழ்ந்த அரண்மனைதான் பேணப் படுகிறது. ஆனால் அவன் - அந்தக் கொடுங்கோலன் இட்லர் மறைந்த இடம்.....

ஆம்! அதையும் பார்த்தோம். ஓரிடத்தில் நிலம் கரடு முரடாகக் கிடக்கிறது. சிறு சிறு பாறைகள் ஆங்காங்கே தலை தூக்கி நிற்கின்றன. அவற்றுக்கு நடுவே ஒரு பெரிய மேடு - கூழாங்கற்களும், முரட்டுப் பாறைகளும், கட்டிடச் சிதைவுகளும் கொட்டிக் கிடக்கும் ஒரு மேடு. நண்பர்கள் அங்கே கொண்டுபோய் நிறுத்தினார்கள். இதுதான் இட்லர் மறைந்த இடம் என்றார்கள். அந்த இடத்தில் அடிப் பகுதி யில் ஒரு சிறு மாளிகை புதைந்து கிடக்கிறது. அந்த மாளி கைக்குள்தான் இட்லர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு மடிந்து விட்டான். நான் கூட 'The Last days of Hitler' எனும் திரைப்படத்தில் பார்த்திருக்கிறேன்.

அவன் மடிந்த அந்த மாளிகையையே மக்கள் மண்ணுக் குள் புதைத்து விட்டனர். அதை ஒரு முறையான நினைவுச் சின்னமாக்க எவரும் விரும்பவில்லை. வெறும் மண்ணைத் தள்ளி அதை ஒரு மண்மேடாகவே ஆக்கி விட்டார்கள்.

என்ன கொடுங்கோலாட்சி! என்ன தடபுடல்! கடைசியில் அந்த இட்லர் புழுதி மேட்டுக்குள் புதைந்து கிடக்கிறான். நானும் என் பங்குக்கு அந்தப் புழுதி மேட்டில் நின்று அவன் தலையில் மிதித்தது போன்ற உணர்ச்சியோடு கீழே வந்தேன்.

அடங்காமல் ஆட்டம் போடுபவர்களின்
அவல முடிவுகளுக்கு
ஓர் அடையாளச் சின்னம் இது!

ஒருநாள் காலை - தோழர் தங்கராசா எங்களையெல்லாம் அலெக்சாண்டிரிய பிளாட்சு (Alexandria Platze) எனப்படும் கோபுரத்தைப் பார்க்க அழைத்துச் சென்றார். அதன் உச்சிக்கு மின் தூக்கி (Lift)யில் தான் செல்ல வேண்டும். அதன் படி சென்று அதற்கு மேலும் அமைக்கப்பட்டுள்ள சுழலும் விடுதியில் (Rotating Hotel) அமர்ந்தோம். உரொட்டி, காப்பிக்குச் சொல்லிவிட்டு அமர்ந்தோம். பெர்லின் முழுவதையும் இப்போது பார்க்க முடிந்தது. அதுமட்டுமன்று. நாம் உட்கார்ந்துள்ள இடம் மெல்லச் சுழன்று அரை மணி நேரத்தில் நாம் விட்ட இடத்துக்கே வந்து விடுவதால் பெர்லின் மாநகரம் முழுமையும் ஒரு பார்வை பார்த்து விட்டோம். 360 மீட்டர் உயரத்தில் உள்ள அந்தக் கோபுரத்தின் உச்சியில் அமர்ந்து பெர்லின் மாநகரம் முழுவதையும் பார்ப்பது என்பது எவ்வளவு பெரிய வாய்ப்பு! 1985இல் கோலாலம்பூர் சென்றிருந்தபோது இதேபோல ஒரு சுழலும் விடுதியில் திரு. ச. பாண்டியுடன் கோலாலம்பூர் மாநகரம் முழுவதையுமே பார்த்தது நினைவுக்கு வந்தது.

ஸ்டாபென்பெர்க் நினைவிடத்து அருகிலேயே பெர்லின் நெடுஞ்சுவர். அரைகுறையாக நிற்கும் அந்தச் சுவரின் அடுத்த பக்கத்திலேயே புத்தம் புதிய வடிவில் செர்மனி நாடாளுமன்றக் கட்டிடம். உள்ளே புகுந்து சுற்றிவந்தோம். கண்ணாடிக் கதவு வாயிலாக நாடாளுமன்றம் கூடுகின்ற இடத்தையும் பார்த்தோம். பேரவைத் தலைவர் இருக்கை நிமிர்ந்து நிற்பதைப் பார்த்தேன். பழைய நினைவுகள்! போகட்டும்! கட்டிடம் என்ன அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒன்றிரண்டு இடங்களில் அமர்ந்தும் நின்றும் படம் எடுத்துக் கொண்டோம்.

அங்கே கல்லும் பசுஞ்சுதையும் கலந்து கட்டப்படும் கட்டிடம் மட்டுமா? அலுமினியத் தகடுகளால் மட்டுமே ஒரு

கட்டிடத்தை எழுப்பியுள்ளார்கள். மூன்றே மாதத்தில் நான்கு மாடிக் கட்டிடத்தை எழுப்பிவிட்டார்கள் என்ற செய்தியை அறிந்து வியப்பில் மூழ்கிப் போனோம்.

11.8.93 அன்று மாலை பெர்லினில் வந்து இறங்கியதும் மகிழுந்தில் குணரத்தினம் வீட்டை நோக்கிப் பறந்தோம். அப்போதே கவனித்தேன். நான் எங்குப் போனாலும் சாலை ஒழுங்கு, போக்குவரத்து ஒழுங்கு ஆகியவற்றை ஆர்வத்தோடு கவனிப்பது உண்டு. தன் நாட்டில் இல்லாத ஒன்றைப் பிறநாட்டில் கண்டால் வியப்போடுதானே பார்க்க வேண்டும்? மகிழுந்து ஓடிக் கொண்டிருக்கும் போதே சாலை நெடுகிலும் அழகாக வளர்க்கப்பட்டிருந்த மரங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அந்த மரத்துக்கு 'லிண்டன்' என்று பெயர். நம்மூர் அசோக மரங்களைப் போல் ஓங்கி உயர்ந்து தெருக்களுக்குத் தனி அழகைத் தந்து கொண்டிருக்கின்றன.

அரசு மரங்களை வளர்த்து அழகு பார்க்கிறது. மக்களோ மலர்களை வளர்த்து அழகு பார்க்கிறார்கள். மழையும் பனியும் அதிகமாக உள்ள பெர்லினில் தனிவகை மலர்கள் பல வண்ணத்தில் பூத்துக் கிடக்கின்றன. அதிலும் ஒவ்வொரு வீட்டாரும் பல வண்ண மலர்களைப் பலகணிகளிலும், வீட்டு முகப்பில் உள்ள முற்றத்திலும் (பால்கனியிலும்) வைத்துள்ளனர். பூத்தொட்டிகளில் அழகாக அடுக்கி வைத்தும், சாளரக் கம்பிகளில் தொங்கவிட்டும் அழகு படுத்தியுள்ளனர். கிட்டத்தட்ட எல்லாரது வீட்டு முகப்பிலும் அல்லது வீட்டின் பின்புறம் மாடியில் உள்ள பின்புற முற்றத்திலும் இந்த மலர் அணிவகுப்பைக் காணலாம். அழகுக்கு அழகு செய்யும் அந்த அற்புதக் காட்சி மனத்தில் பச்சென்று நிற்கிறது. பாரிசிலும் சில வீடுகளில் இப்படி உள்ளதென்றாலும் பெர்லினில் உள்ளதுபோல் எல்லா வீடுகளிலும் இல்லை. மழையிலும் பனியிலும் வாடாமல் பல காலம் இருக்கும் தன்மை வாய்ந்த மலர்கள் அவை. இரண்டாம் உலகப் போரிலும் இட்லரின் கோரப் பிடியிலும் இறந்து போய் விட்ட எண்ணற்ற மக்களை எண்ணி ஏங்கி மலர் அஞ்சலி செலுத்துகிறார்களோ அந்த மக்கள்?

அலெக்சாண்டிரியா கோபுரத்தின் உச்சியில் சுழலும் விடுதியில் அமர்ந்து பார்த்தபோது பல காட்சிகளையும் கண்டோம். அதில் ஒன்று அழகாக ஒடிக் கொண்டிருக்கும் மின் வண்டிகள் (Electric Trains) பெர்லின் மாநகரம் முழுவதையும் சுற்றி வரும் அளவிலும் பயணிகளுக்கு நன்மை செய்யும் வகையிலும் இந்தத் தொடர்வண்டி இயக்கம் அமைந்துள்ளது. இது தரைக்கு மேலே ஓடும் மின்வண்டி. இதைவிடச் சிறப்புக்குரியதும் வியத்தற்குரியதும் பூமிக்கடியில் ஓடும் சுரங்க மின்வண்டிதான். அதிலும் பயணம் பண்ணினோம். ஒருநாள் தங்கராசா என்னையும், ஆண்டவர், திருவாசகம் போன்றவர்களையும் சுரங்க மின்வண்டியில் ஏற்றி அனுப்பினார். கிருட்டிணமூர்த்திக்குத் தொலைபேசி போட்டு இராத்தூஸ் (Rathus) எனும் நிலையத்தில் வந்து வரவேற்கச் சொல்லிவிட்டார். வண்டி புறப்பட்டு விட்டது. தானே மூடும் கதவுகளையும், குளிர்பதன வசதியையும் கொண்ட அமைப்பு அது. புத்தம்புதுப் பெட்டிகள். நம்மொழி தெரியாத வெவ்வேறு நாட்டுக்காரர்கள். வண்டிக்குள் ஏறியதும் ஒரு திகைப்பு. சரியான இடத்தில் இறங்க வேண்டுமே! மேலும் ஆங்கிலத்தில் கேட்டால் பலரிடமிருந்து செர்மன் மொழியில்தானே விடை வரும் என்ற கணிப்பு. தங்கராசா 15-ஆவது நிறுத்தம் என்று சொன்னதை மட்டும் நம்பி ஒவ்வொரு நிறுத்தமாக எண்ணிக் கொண்டே வந்தோம். கம்பியைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு நிலையப் பெயராகப் பார்த்துப் படித்துக் கொண்டு வந்தேன். என்ன வியப்பு! கதவு ஓரத்தில் தலைக்கு மேலே ஒரு வரைபடம். இந்த வண்டி எந்தெந்த நிலையங்களின் வழியாக எந்தெந்தத் திசையில் போகிறது எனும் அட்டவணை.

கவனமாகப் பார்த்து 'இராத்தூஸ்' எனும் நிலையத்துக்கு இரண்டு நிலையங்கட்கு முன்னாலேயே எழுந்து நின்று சரியான இடம் வந்ததும் இறங்கி விட்டோம். கிருட்டிணமூர்த்தியும் சரியாக வந்து வரவேற்றார். பின் சிறிது தொலைவு நடந்து தங்குமிடம் சென்றோம். சுரங்க மின் வண்டி குறுக்குவழியில் மின்னல் வேகத்தில் நம்மைக்

கொண்டு செல்கிறது. அந்த வண்டியின் அழகை இப்போது நினைத்தாலும் மனம் மகிழ்கிறது.

சாலைகளைப் பற்றிச் சொன்னேன். சாலையை இரண்டு பகுதிகளாகப் பிரித்துப் போக வர என்று தெளிவுபடுத்தி யுள்ளார்கள். எல்லா இடத்திலும் வழிவிளக்கு (Signals)களின் கட்டளைதான். காவலர்களை எங்கும் பார்க்கவில்லை. யாரும் குறுக்கே விட்டு இடிப்பதை, ஒருவழிப் பாதையில் செல்வதை, தேவையின்றி முரணான முறையில் முந்துவதைப் பர்க்க முடியவில்லை. எல்லாம் ஓர் ஒழுங்கில் நடக்கின்றன. இதைவிட நான் வியந்தது இருமருங்கிலும் விடப்பட்ட நடை மேடை (Platform) ஒழுங்கைத்தான். ஒரு பேருந்து போகக் கூடிய அளவுக்கு அகலமான நடைமேடை. அதன் நடுவில் 3' அகலத்தில் சிவப்பு நிறத்தில் ஒரு பாதை. நடப்பவர்கள் நடைமேடையிலேயே இருபுறமும் நடக்கலாம். சிவப்புப் பாதைக்குள் சில தாய்மார்கள், செவிலியர் தம் குழந்தை களைத் தள்ளுவண்டிக்குள் வைத்துத் தள்ளிக் கொண்டு போகிறார்கள். வெகுசிலர் மிதிவண்டிகளில் போகிறார்கள் ஒலிப்பான் (Horn) பயன்படுத்துவதில்லை என்பதால் எல் லாம் ஓர் ஊமை நாடகம் போல் நடக்கிறது.

இங்கு நம் நாட்டில் நடைமேடை (பிளாட்பாரம்)களின் நிலையை எண்ணிப் பாருங்கள். புரோட்டாக் கடை, பூக்கடை, செருப்புத் தைத்தல், மிதிவண்டிகளை அடுக்கி வைத்தல், அவரவர் கடைக்கு முன்னே ஆக்கிரமித்தல், சில இடங்களில் முற்றிலும் உடைந்து நடக்க முடியாத அளவுக்குச் சேதம், சில இடங்களில் கழிப்பறைக்குரிய பயன் என்று பல்வகைப் பயனோடு காட்சியளிக்கும் நடைமேடைகள். மனிதர்கள் நட மாடவே முடியாதபடி ஆக்கிரமிப்புகள். நடப்பவர்கள் கவலைப்படுவதில்லை. தெருவில் – சாலையில் இறங்கிக் கூட்டம் கூட்டமாக நடப்பார்கள். சாலை நடுவில் நின்று அரட்டை அடிப்பார்கள். இத்தகைய அவல நிலை இங்கே!

நடைமேடைகளையே இந்த நாட்டில் இடித்துவிட்டுச் சாலையை அகலப்படுத்திவிட்டால் என்ன? இருந்தும் பயன்

படாத இவை எதற்கு? வண்டிகளாவது கொஞ்சம் தாரா மாக ஓடுமே!

சிந்திக்க வேண்டிய ஒன்று. வருங்காலத்தில் செயற் படுத்த முடியுமா என்று பார்ப்போம்.

தெருவில் நடந்து செல்லும்போது ஒரு முடிதிருத்தகம் குறுக்கிட்டது. முடி வெட்டிக் கொண்டால் என்ன என்று சிந்தித்தோம். உள்ளே எட்டிப் பார்த்தோம். அடடா! என்ன உலகம்! இரண்டு மூன்று பேர்க்கு முடி வெட்டு நடந்து கொண்டிருந்தது. முடி வெட்டுபவர்கள் எங்கள் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தனர். ஆம்! எல்லாருமே இளம் பெண்கள். பார்க்கவும் கேட்கவும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் முடி வெட்டிக் கொள்வதற்கு 150 உருபாய்க்கு மேல் ஆகும் என்று 'மொழி' தெரிந்த தோழர் சொன்னதும் அனைவரும் மூச்சுவிடாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தோம்.

பாரிசில் பெரிய கடைகளில் தொங்கும் பனியன்கள் மற்றும் வண்ண உடைகள் அனைத்தும் தமிழ்நாட்டிலிருந்து வர வழைக்கப்பட்டவை. ஆனால் பெர்லினில் அப்படியில்லை. ஆடை உற்பத்தியில் அவர்கள் தன்னிறைவு அடைந்திருக் கின்றனர், ஆலைத் தொழில் அங்கு சிறந்து விளங்குவ தாகவும், உடைகள் எவையும் இறக்குமதி செய்யப்படுவ தில்லை என்றும் தெரிவித்தார்கள்.

பெர்லினில் வாழைப்பழம் கிடைக்கிறது. ஆனால் அது சிலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. ஒரே நிறம் – ஒரே வகையான வாழைப்பழம்தான். வேறு நிறமோ – வேறு வகையோ இல்லை. வாழை மரங்கள் பெர்லினில் இல்லை. இதுபற்றி அறிந்ததும் தொழில் உற்பத்திக் கழகச் செயலரிடம் நான் பேசிக்கொண்டிருந்த போது நம்மூர் வாழையைப் பற்றித் தெரிவித்தேன். தமிழகத்தின் தொன்மை மிக்க முக்கனிகளுள் வாழை இடம் பெறுவது குறித்தும், பூவன் பழம், இரஸ்தாளி, சிறுமலைப்பழம், பச்சை வாழைப் பழம், நாகர்கோயில் நேந்திரம் பழம் என்று பல்வகை இருப் பதையும் பல சுவையினவாக இருப்பதையும் விளக்கிச்

சொன்னபோது வியப்படைந்தார். வேறென்ன செய்வது? வாழைப்பழத்திலாவது நாம் செருமானியரை விஞ்சி நிற்கிறோம் என்று மார்தட்டிக் கொள்ள வேண்டியதுதானே! கடைசியில் நாம் வாழைப் பழச் சோம்பேறிகளாகவே ஆகி விட்டோம் என்பதையும் எண்ணிக் கொண்டேன்.

செருமனியில் உள்ள மாநிலங்கள் தனித்தனி உரிமை பெற்ற மாநிலங்களாக உள்ளன. கூட்டாட்சித் தத்துவ அமைப்பில் (Federal Set up) அவை இயங்குகின்றன. சரியாகச் சொன்னால் மாநிலத் தன்னாட்சி அங்கு அதிகமாகவே உள்ளது. இந்திய அரசியல் சிந்தனையாளர்கள் இதனை மனத்திற் கொள்வார்களாக!

மாநாட்டு அரங்கின் அடித்தளத்தில் (Ground Floor) உணவகம் உள்ளது. பகல் உணவு மற்றும் மாலைச் சிற்றுண்டி அங்குத்தான் வழங்கப்பட்டன. மாநாடு முடிந்த அடுத்த நாள் நாங்கள் அனைவரும் ஒரு விருந்தில் அந்த விடுதியில் கலந்து கொண்டோம். பின்னர் அனைவரும் படம் எடுத்துக் கொண்டோம். விடுதியில் பணியாற்றும் இரண்டு பெண்களும் என் அருகில் நின்று படம் எடுத்துக் கொண்டனர். அந்த நேரம் பார்த்துக் கிருட்டிணமூர்த்தி செர்மன் மொழியில் அவர்களிடத்து ஏதோ சொன்னார். வேறொன்றுமில்லை. "தமிழ்க்குடிமகன் தமிழ்நாட்டில் ஓர் அரசியல்வாதி. நீங்கள் இருவரும் இப்படிப் பக்கத்தில் நின்று படம் எடுத்து அதை அந்த நாட்டு இதழ்களில் வெளியிட்டால் அவரைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கப் போகிறார்கள்" என்றுதான் கூறினார். இதைக் கேட்டதும் அந்த இரு பெண்களுமே சொல்லி வைத்தாற் போல் என்தோள் மீது கைபோட்டு 'இப்போது படம் எடுங்கள். இதை வெளியிடச் சொல்லுங்கள்' என்றனர். அவர்கள் சொன்னதைத் தமிழில் சொன்னதும் அனைவரும் திகைத்துப் போய் விட்டோம். அதற்குள் படமும் பிடித்தாகி விட்டது. அந்தப் படத்தை வெளியிட்டிருக்கிறேன் பின்புற அட்டையில்.

அவர்களது சூதுவாதற்ற, கள்ளங் கபடமற்ற இந்தப் பண்பினை எண்ணி வியக்கிறேன். அறிஞர் மு.வ. ஒரு

நூலில் எழுதுவார். ஓர் ஆணும் மற்றோர் ஆணும் நண்பர்களாகப் பழகுகின்றனர். ஒரு பெண்ணும் மற்றொரு பெண்ணும் தோழிகளாகப் பழகுகின்றனர். ஏன் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் நண்பர்களாகப் பழகக் கூடாது? உடலைக் கடந்து உலகின் போலித்தனமான வாதங்களை உடைத்தெறிந்து பழகக் கூடாதா என்று கேட்பார். செர்மன் நாட்டில் அந்தப் பெண்கள் நட்புணர்வோடுதான் அப்படி நடந்து கொண்டார்கள்.

தமிழன் நினைக்கிறான்; செருமானியன் செயற்படுத்துகிறான். ஏன்? பிற நாடுகள் எல்லாமே செயற்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் இதைக் கொச்சைப்படுத்தக் காத்திருக்கும் கோடிக்கணக்கான பேர்களின் மன உணர்வோடு நம்மால் போரிட முடியுமா? காலங் காலமாகப் புறங்கூறியே பழக்கப்பட்டுவிட்ட இந்திய சமூகத்தில் இந்தப் பண்பாடுகளைப் பற்றிப் பேசி என்ன பயன்?

ஓரிரு இதழாசிரியர்கள் எங்களுடன் படம் எடுத்துக் கொண்டனர். 'தமிழன்' எனும் பெயர் தாங்கிய இதழ் மாநாட்டுச் சிறப்பிதழையே வெளியிட்டிருந்தது. செர்மன் நாட்டு அதிபர் ஹெல்மட் ஹோல் அவர்கள் வாழ்த்துச் செய்தி விடுத்திருந்தார். தமிழகத்திலிருந்து கலைஞர் அனுப்பிய வாழ்த்துச் செய்தி 'தமிழன்' போன்ற எல்லா இதழ்களிலும் சிறப்பிடம் பெற்றிருந்தது. கி.ஆ.பெ.வி., தமிழ்க்குடிமகன், வா.மு.சேதுராமன், புதுவை அமைச்சர் அரங்கசாமி, பண்டிதர் கா.பொ.இரத்தினம், ஆகியோரது வாழ்த்துரைகள் 'தமிழன்' இதழில் இடம் பெற்றிருந்தன. செருமனி நாட்டிற்கும் நமக்கும் நீண்ட காலமாகவே வணிகத் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன. பண்பாட்டு உறவுகளும் வலுவாகவே இருந்துள்ளன.

1902 இல் இந்தியா வந்த பியாதான் என்பவர் ஈரோடு, குடந்தை ஆகிய இடங்களிலும் பணியாற்றிச் செருமனிக்குத் திரும்பினார். அங்கு தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். அவர் எழுதிய பேச்சுத் தமிழ் இலக்கணம் பெர்லின் தமிழரிடையே புகழ் பெற்றது.

வியார்டோ சோகோமரஸ் என்பவர் 1905இல் ஈரோட்டில் பணியாற்றியபோது பல ஓலைச் சுவடிகளைத் தேடிப் பிடித்து அச்சிட்டு வெளியிட்டார். மாணிக்க வாசகர் பாடல்களில் சிலவற்றையும் பெரிய புராணத்தில் திருவாதவூரார் புராணத்தையும் செர்மன் மொழியில் மொழி பெயர்த்தார்.

கார்ல் கிரவுன் என்பவர் தமிழ் நூல் அடைவு' எனும் நூல 4 தொகுதிகளாக வெளியிட்டதுடன் அகப்பொருள் விளக்கத்தைச் செர்மன் மொழியில் பெயர்த்துள்ளார்.

1706 இல் இந்தியா வந்து தரங்கம்பாடியில் அச்சகம் அமைத்துத் தமிழ் நூல்களை வெளியிட்ட பெருமை செருமானியரான சீகன் பால்கு அய்யரைச் சேரும். அவர் தமிழ் இலக்கணம் ஒன்றும் செய்தளித்தார். பைபிளைத் தமிழில் முதன்முதலில் மொழிபெயர்த்தவர் இவரே.

இப்படிச் சிலர் 3 நூற்றாண்டு காலமாகச் செருமானிக்கும் தமிழகத்துக்கும் பாலமாக அமைந்து பணியாற்றினர். அந்தப் பாலத்தில் நடந்துதான் நாங்கள் பெர்லினில் தமிழ்ப் பணி செய்யச் சென்றோம்.

இந்த நாட்டின் போக்குவரத்து ஒழுங்குகள்தான் என்னை வியக்க வைக்கின்றன. மகிழுந்துகளை நிறுத்தும் இடம், ஓட்டும் வேகம், சிவப்பு பச்சை விளக்குகளை மதித்து ஒழுகும் பாங்கு ஆகியவற்றுள் எல்லாருமே ஒருங்கிணைந்து நிற்கின்றனர். நான் பார்த்த எல்லா நாடுகளிலும் இதே நிலைதான். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், துபாய், இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, இத்தாலி செருமனி ஆகிய நாடுகளைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். இந்த ஒழுங்கு அறவே இல்லாத நாடு இந்தியாதான். கல்கத்தாவோடு ஒப்பிடும் போது சென்னை எவ்வளவோ தேவலாம் என்றுதான் சொல்லிக் கொள்ள முடிகிறதே தவிர ஒழுங்கீனம் என்பது எங்கும் நிறைந்திருக்கிறது என்பதை மறைத்துவிட முடியவில்லை. இதை வெளியே சொல்லிவிட்டு வெட்கித் தலைகுனிவதா? நாட்டை விட்டுக் கொடுக்கக்கூடாது எனும் நாகரீகமான காரணம்

காட்டி வெளியே சொல்லாமல் துக்கப்படுவதா என்றுதான் தெரியவில்லை.

வேறு நாடுகளில் தானிகள் (Auto), நரவண்டிகள் (Rick-shaw) அறவே இல்லை. இங்கே அவர்கள் வைத்ததுதானே சட்டம் ஒழுங்கெல்லாம். எந்த இடைவெளியிலும் புகுந்து வெளியே வந்துவிடும் இவர்களுக்கு ஒழுங்காவது மண்ணாவது? ஒருவேளை இவை இல்லாததால் அந்த நாடுகள் ஒழுங்கைப் பேண முடிகிறதா? அல்லது பெருகிக் கிடக்கும் மக்கள் தொகையில் இவ்வளவுதான் முடியும் என்று பெருமூச்சு விடப் போகிறோமா? அறிவாளிகள் சிந்திக்கட்டும்.

பெர்லினிலேயே மிகப் பெரிய தெரு, மாநகரைஊடறுத்துச் செல்லும் தெரு காரல் மார்க்சு தெருதான். நமது அண்ணா சாலையை விட அகலம்; சீர்மை சிறப்பெல்லாம் அதிகம். தங்கள் நாட்டு அறிஞனை அருமையாகப் பெருமைப் படுத்தியுள்ளார்கள். Class என்பதை Klasse என்றும், School என்பதை Schule என்றும் Secretariat என்பதை Sekretaraiat என்றும் செர்மானிய மொழியில் எழுதுவர்.

பெர்லின் சுவர்களில் எங்காவது ஓரிரு இடங்களில் சுவர் எழுத்துக்கள் உள்ளன. மற்றபடி எங்கும் சுவரொட்டிகள் இல்லை. நம் நாட்டு நிலையை விளக்க வேண்டியதில்லை. ஒரு சிற்றூரில் ஏதோ ஒரு கருப்பாயி அம்மாள் மறைந்து விட்டால் கூட இரங்கல் சுவரொட்டிகள் முளைத்து விடுகின்றன. ஊரைக் குறிக்கும் பெயர்ப் பலகைகள், அகலமான கை காட்டிகள், (மைல்) கற்கள் ஆகிய எல்லாவற்றிலும் சுவரொட்டிகளை - அப்பி எவனும் எதையும் கண்டுபிடிக்க முடியாதபடி செய்யும் அவலம் இங்கே. இத்தகைய 'அழகழிப்பு' வேலைகள் அங்கு அறவே இல்லை.

குழந்தை மணம், கைம்மை நோன்பு, பாரதியார் சொன்னது போல் 'புருஷ விதவைகள்', வரதட்சிணைக் கொடுமை, கற்பின் செழுமை என்பதெல்லாம் இங்கே பார்க்கத் தேவையில்லை. 18 அகவையான தன் மகள் இன்னும் ஆண் தோழனை (boy friend) அழைத்து வரவில்லையே என்ற

கவலைதான் பெற்றோருக்கு. அப்படி ஒரிருவரை அழைத்து வந்துவிட்டால் பெற்றோர் தம் பொறுப்பு முடிந்ததாகவே முடிவுக்கு வந்துவிடுவர். இது தொடர்பாக திரு.மணியன் எழுதிய ஒரு பகுதியை அப்படியே தருவதுதான் சரியாக இருக்கும்.

"கல்யாணம் செய்து கொண்டால்தான் கணவன் மனைவியாக வாழ முடியுமா என்ன? எங்கள் மனத்தைவிட, அதில் ஏற்படும் பிணைப்பைவிட, சர்க்கார் கொடுக்கும் துண்டுக் கடிதமா பெரிது? We don't think so. என்றாள் பெர்ஸ்ட்.

'வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாடு வேண்டாம் என்கிறீர்களா?' இது மணியம்.

'மனத்தால் கட்டுப்பாடு வேண்டும்; காகிதக் கட்டுப்பாடு வேண்டாம் என்கிறோம். சம்பிரதாயங்களை எல்லாம் மீற வேண்டும் என்பது எங்கள் ஆசை. இப்போது எல்லோரும் சாற்றை விட்டு விட்டுச் சக்கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதரை அவர் தோற்றத்தைக் கொண்டு எடைபோடும் காலம் மாறிவிட்டது. நாங்கள் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுப்பவர்கள். எங்களுடையது அசல் வாழ்க்கை. போலி அல்ல. மனிதன் சுதந்திரமாக வாழ வேண்டும். விரும்பியபடி வாழ வேண்டும். வாழ்க்கையே குறுகியது. எனவே எந்த நேரமும் 'எக்சிட்'டுக்கு (Exit) நாம் தயாராக இருக்க வேண்டும். நிலைமை அப்படியிருக்க ஏன் போலி யாக வாழ வேண்டும்? You live only once - Enjoy - இதுதான் எங்கள் தத்துவம் - புரிகிறதா? என்றாள் பெர்ஸ்ட்."

இதழ்களில் பாலியல் தாராளமாகவே உள்ளது. இதழ் ஒன்றில் பெண்ணின் மார்பகத்தைப் பிரமாதமாகப் படம் பிடித்துக் காட்டியிருந்தனர். இருவர் கட்டிப் புரள்வது போன்ற படங்களுக்கும் குறைவில்லை. இதனால் தெருக்களில் அலைந்து 'ஜொள்ளு' விட்டுக் கொண்டிருக்கும் நிலைகள் இல்லாமல் போய்விட்டன.

இங்கு தொழில்கள் அதிகம்; தொழிற்சங்கங்களும் உண்டு. வேலை நிறுத்தங்களும் உண்டு. ஆனால் வேலை நிறுத் தம் செய்வோர் அந்தக் குறிப்பிட்ட தொழிலக வளாகத்தை விட்டுத் தெருவுக்கு வருவதில்லை. அவரவர் போராட்டத்தை அவரவர் எல்லைக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். அதனால் பொதுச் சொத்துக்களுக்கு எந்தச் சேதமும் ஏற்படுவதில்லை (என்ன! வியப்பாக இருக்கிறதா?).

இங்கே என்ன நடக்கிறது? ஒரு கல்லூரிக்குள் சிக்கல் என்றால் மாணவர்கள் சிறிது நேரத்தில் சாலைக்கு வந்து விடுகின்றனர். இதற்குத் தொடர்பேயில்லாத திருவள்ளுவரும் பல்லவனும் பாண்டியனும் சேரனும், சோழனும் அடி வாங்கி, கண்ணாடியிழந்து, தீயில் கருகி அரைகுறையாகி நிற்கும் நிலை, அந்த வட்டாரத்தில் உள்ள தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் கூடச் சூறையாடப்படும் நிலை. இயற்கையாக ஏற்படும் மராட்டிய நிலநடுக்கச் சேதம், தமிழக வெள்ளச் சேதம் ஆகியவற்றை வேறுவழியின்றி வேதனையுடன் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் ஒரு நிறுவனத்திற்குள்ளோ, கட்சிக்குள்ளோ ஏற்படும் சிக்கலால் அல்லது ஒருவர் இயற்கையாக மடிந்து போனால் கூடப் பொதுச் சொத்துகள் கோடிக்கணக்கில் நாசமாகி, தெருவில் உள்ள அழகுப் பொருள்கள் கூட அடித்து நொறுக்கப் பட்டால் பிறகு இவற்றைச் சரிக்கட்ட அரசுக்கு எத்தனை கோடி தேவை? தனியாருக்கு எந்த அளவுக்குப் பொருள் தேவை?

அழிவை நாமே செய்து விட்டு அரசுக் கருவூலத்தைக் காலியாக்கும் போக்கு இந்தியா முழுவதும் பரவிக் கிடக்கும்போது, ஆக்கப் பணிகளுக்குப் பணம் எப்படி வந்து சேரும்? அறிவுள்ள, பொறுப்புள்ள குடிமக்கள் சிந்திக்க வேண்டும்.

மொத்தத்தில் பெர்லினில் ஒரு சமூகப் பொறுப்புணர்ச்சி (Social Responsibility) இருப்பதைப் பார்க்கிறோம். மலிவான திருட்டுத்தனம் இல்லை. நேர்மைக்குக் குறைவில்லை.

உழைப்புக்குப் பஞ்சமில்லை. உழைப்புக்குக் கிடைக்கும் ஊதியத்திலும் குறைவில்லை. அதனால்தான் இரண்டாம் உலகப் போரின்போது வீழ்ந்த சப்பானும், செருமனியும், சப்பானால் பிடிக்கப்பட்டுப் பின் மீண்ட சிங்கப்பூரும் கூட இன்று நிமிர்ந்து எழுந்து நிற்கின்றன. உருசியாவின் பிடியிலிருந்த கிழக்குப் பெர்லின் மட்டும் பார்க்க நன்றாக இல்லை எனும்படி ஒரு தோற்றம். அதையும் இப்போது ஒருங் கிணைந்த பெர்லின் சரிப்படுத்தி வருகிறது.

பழைய பெருமையுள்ள இந்த நாடுகளும் எழுந்துள்ளன. பழம் பெருமையே இல்லாத ஆப்பிரிக்கா கூட இன்று ஒரு தெளிவுக்கு வந்து விட்டது. அங்கேதான் நமீபியா கூட விடுதலைக் காற்றை அனுபவிக்க முடிகிறது. நெல்சன் மண்டேலா குடியரசுத் தலைவர் ஆகிவிட்டார். ஆனால் நமக்கோ பழம்பெருமை இருந்தும், புதுமை படைக்கும் திறம் இருந்தும், புதுக் கருவிகளின் வரவும் உறவும் இருந்தும் பாழ்பட்டுக் கிடக்கிறோம்.

'பாழ்பட்டு நின்றதாமோர் பாரதேசம்' என்றானே பாரதி. இதையே ஓர் ஆண்டுக்கு ஒருமுறை பாடிக் கொண்டே இருக்க வேண்டும் போல் தெரிகிறது. ஆண்டுவிழாக் கொண்டாடி நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கிறது

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை' என்பதைத் தவிர வேறென்ன சொல்ல இருக்கிறது.

பெர்லினில் நான்கு நாள் மாநாடும், 3 நாள் சுற்றுப் பயணமும் முடிவுற்றன. இப்போது 16 பேரும் புறப்பட வில்லை. தமிழ்மணி, கோவிந்தசாமி, அரங்கசாமி, மதுரகவி போன்றவர்கள் வேறு வேலையாக அங்கேயே பிரிந்து விட்டனர். பத்துப் பன்னிரண்டு பேர் மட்டும் 19.8.93 அன்று பெர்லினை விட்டுப் புறப்பட்டோம். அவரவரும் தங்கியிருந்த வீடுகளிலிருந்து நேராக (Tigel) வானூர்தி நிலையத்துக்கு வந்து சேர்ந்தோம். வா.மு.சேதுராமன் வேறு நிகழ்ச்சிக் காக அங்கே தங்கிவிட்டார். அவரும், குணரத்தினம், கிருட்

டிணமூர்த்தி, தங்கராசா, போன்ற இனிய உடன்பிறப்புகளும் முகமலர்ந்து, மாநாட்டு வெற்றியால் அகம் நிறைந்து, அன்பால் இதயம் நனைந்து எங்களை வழியனுப்பினர். AZ 1317 வானூர்தியில் 19.8.93 காலை 8.10க்கு புறப்பட்டோம். காலை 10 மணிக்கு மிலன் மாநகரம் வந்து சேர்ந்தோம். மிலன் நகருக்குள் போவதாக இல்லையென்பதாலும் பாரிசுக்குப் போகிற வழியில் இங்கு வானூர்தி மாற வேண்டியிருப்பதாலும் வான்திடலிலேயே தங்கினோம். இதில் பெரிய கொடுமையே வெட்டியாகக் காத்துக் கிடப்பதுதான். அதிலும் மிலன் வான்திடலில் 4.45 மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதே நிறுவனத்தின் பொறுப்பில் (அலிட்டாலியா) பயண ஏற்பாடு வந்ததால் அவர்களது வானூர்தி நேரங்களைக் கணக்கிட்டு இப்படி வதைத்து விட்டனர். எப்படியோ ஒருவழியாக அங்குமிங்கும் அலைந்தும் அரட்டை அடித்தும் 4.45 மணி நேரத்தை வீணாக்கி விட்டு மாலை 2.45 மணிக்கு AZ 330 வானூர்தியில் பாரிசு நோக்கிப் பறந்தோம். 85 மணித் துளிகளில் – அதாவது மாலை 4.10க்குப் பிரான்சு நாட்டில் – பாரிசு நகரில் டிகால் வானூர்தி நிலையத்தில் இறங்கினோம்.

ஏற்கனவே பேரவைத் தலைவராக இருந்தபோது பாரிசு நகரத்துக்கு ஒருமுறை வந்து சென்றதாலும், எனக்கு மிகவும் வேண்டியவர்களாக சுசீலா – பக்தவத்சலம் குடும்பத்தினர் அங்கிருப்பதாலும் எந்தக் கவலையுமின்றி இறங்கினேன். மேலும் பெர்லினில் எங்களுடன் பங்குகொண்ட பேராசிரியர் சக்திப்புயல் எங்களை வரவேற்க வருவதாக உறுதி செய்திருந்தார். அவர்க்கு உறுதுணை பல செய்த நீதியரசர் கோவிந்தராசனும், சட்டத்துறைத் துணைச் செயலர் நாராயணசாமியும் உடன்வந்ததால் புதுவைக்காரரான சக்திப் புயல் கட்டாயம் வருவார் எனும் நம்பிக்கையில் அனைவரும் இருந்தோம். மேலும் நான் சென்னையை விட்டுப் புறப்படும் போதே சுசீலாவுக்கு மடலும் எழுதியிருந்தேன்.

எதிர்பார்த்தபடியே சுசீலா ஒரு சுற்றுலா வண்டியோடு (Luxury Van) வந்து நின்றார். சக்திப்புயலும் வரவேற்றார்.

ஈழத் தோழர்கள் சிலரும் வந்துவிட்டனர். கி.ஆ.பெ.வி.யும். நானும் சுசீலா வீட்டில் தங்குவது, இருவர் சக்திப்புயல் வீட்டிலும் திருவாசகம், அண்ணாமலையார், ஆண்டவர் முதலானோர் தோழர்கள் வீட்டிலும் தங்குவதென்றும் முடிவானது.

அதன்படி கி.ஆ.பெ.வி.யும் நானும் சுசிலா இல்லத்திற்குச் சென்றோம். அவரது பிள்ளைகள் வரவேற்றனர். திரு. பக்தவத்சலம் தமிழ்நாட்டுக்குச் சென்றுவிட்டதால் அவரைப் பார்க்க முடியாது போயிற்று. எங்கள் மீது பாசமும், தமிழ் இனத்தின் மீது பற்றும் உடையவர் அவர். கவிதை உணர்வு படைத்தவரும் கூட.

20.8.93 அன்று கடைத் தெருவிற்குப் போவது என்று முடிவு செய்து கொண்டோம். நன்கு விவரம் தெரிந்த தோழரை வண்டியுடன் என்னோடு அனுப்பினர். கி.ஆ.பெ. வி. வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. கண்பார்வையும் மங்கி, ஒவ்வொரு படியாக அடியெடுத்து வைக்கும் இந் நிலையில் கடைத் தெருவிற்கு வேகமாகச் சென்று திரும்ப வேண்டியிருந்ததால் அவரை விட்டுவிட்டே சென்றேன்.

மனைவியும் மகளும் குறித்தனுப்பியிருந்த சில ஒப்பனைக் பொருட்கள், மக்கட்கு வேண்டிய சில உடைகள் – குறிப்பாக சட்டை (T.Shirts) பனியன்கள் ஆகியவை வாங்கினோம். இதில் வேடிக்கை என்னவென்றால் மிகப் பெரிய அந்தக் கடையில் விற்கப்படுவன அனைத்தும் நம் திருப்பூரில் தயாரிக்கப்பட்டவைதாம். நம்மூரில் நமக்குக் கிட்டாத ஏற்றுமதிச் சரக்கு (Export Quality) அது. திருப்பூரில் அதிக அளவில் துணிகள் பிரான்சு நாட்டுக்குத் தான் ஏற்றுமதியாகின்றன.

**பாரிசு**

பாரிசிலிருக்கும் மக்களில் கத்தோலிக்கர் முதலிடம் பெறுகின்றனர். இசுலாமியர் இரண்டாவது இடத்தையும், பிராடெஸ்ட்ண்ட் கிறித்தவர்கள் மூன்றாவது இடத்தையும்

பெறுகின்றனர். பிரான்சு நாட்டின் மொத்த மக்கள்தொகை எட்டரைக் கோடி. இதில் பாரிசு நகர மக்கள் தொகை மட்டும் 21 இலட்சம்.

இங்கு ஒரே ஆண்டில் 85,604 கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றுள்ளன. 'Paris by Night' என்றவுடனே எல்லோருக்கும் ஒரு கிளுகிளுப்பு வரும். அந்த நிகழ்ச்சிகள் ஒருபுறம் இருந்தாலும் பிரஞ்சு மக்கள் கலை நிகழ்ச்சிகளில் ஒட்டு மொத்த ஆர்வம் படைத்தவர்கள் என்பதை மறுக்க முடியாது.

வாழ்வு நெறி எப்படி? ஒரே ஆண்டில் 1,10,000 மணவிலக்கு (Divorce)கள் நடைபெற்றுள்ளன, உடன்பாடில் லாதபோது எதையும் உதறித் தள்ளி விட்டுப் புதுவாழ்வு காண்பதில் புது உறவு கொள்வதில் பிரெஞ்சியர் தயக்கம் காட்டுவதில்லை என்றே தெரிகிறது.

இங்குப் படித்தவர்கள் அதிகம். 87% கற்றவர்கள் இருப் பதாக அறிகிறோம். இவர்களை நம்பி 3007 இதழ்கள் நடைபெறுகின்றன.

ஓர் ஆண்டில் சாவு எண்ணிக்கை 5,42,520 பேர். இதில் புற்றுநோயால் இறப்பவர்கள் மட்டும் 1,36,608 பேர். இந்த அளவுக்குப் பிரான்சு நாட்டில் புற்று நோயின் தாக்கம் இருப்பது வியப்பான செய்திதான். 12,363 பேர் தற்கொலை செய்துகொண்டு சாகின்றனர். எத்தனை வழிகள் இருந்தா லும் அனுபவிக்கும் வாய்ப்பு இருந்தாலும் தற்கொலை களைத் தடுக்க முடியவில்லை. ஆண் பெண் உறவுகளில் நம் நாட்டில் உள்ளது போல் கட்டுத் திட்டங்களோ, 'கற்பு' ஒழுங்குகளோ இல்லையென்ற நிலையிலும் ஒரே ஆண்டில் 35,000 பேர் கற்பழிக்கப்பட்டுள்ளனர் என்பதும் வியப்பாகத் தான் உள் ளது. நெறியில் வாழ்வோர், நிறையழிய ஒப்பா தோர் எங்கும் வாழ்கிறார்கள் என்பதே உண்மை. மேற்போக் காகப் பார்ப்போருக்கு ஒரு வகையாகத் தோன்றினாலும் நெறியான குடும்ப வாழ்வு காண்போர் இங்கும் பலராவர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சாவைவிடப் பிறப்பு எண்ணிக்கை அங்கும் அதிகம்தான். ஓர் ஆண்டில் 7,78,40 பேர் பிறக்கின்றனர்.

பாரிசு நகரத்தில் மட்டுமே 20 இலட்சம் மகிழுந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் போக்குவரத்து ஒழுங்கு பிறழாமல் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் - இந்தியாவில் மகிழுந்துகள் - பிற வாகனங்கள் மிகவும் குறைவு. ஆனால் ஒழுங்கு மட்டும் அறவே இல் லையே, ஏன்?

நம் நாட்டில் அம்பாசிடர் மகிழுந்து அதிகமாகப் பெயர் பெற்றிருப்பதைப் போல் பிரான்சில் ரினால்ட் (Renault) எனும் பெயர் தாங்கிய வண்டிகள் மட்டும் 7 இலட்சம் உள்ளன.

பிரெஞ்சு நாடு போர் விமானங்களையும், ஆயுதங்களை யும் அதிக அளவில் உற்பத்தி செய்து உலக நாடுகளுக்கு விற்பனை செய்து அதனால் பெரும் பொருளை ஈட்டி வருகிறது.

இங்கு தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ் கிறார்கள். அதிலும் இந்தியத் தமிழர் என்றால் அவர்கள் புதுவைத் தமிழராகத்தான் இருப்பர். 20,00க்கும் மேற்பட்ட புதுவைத் தமிழர்கள் பாரிசில் வாழ்கிறார்கள். ஈழத் தமி ழர்களும் 30,000க்கும் மேற்பட்டவர்கள் அங்கே இருக்கிறார் கள். அங்கே தொழில் செய்யவும், இயல்பாக இயங்கவும் உரிமை பெற்றிருக்கிறார்கள்.

அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுக்குக் குறைந்த அளவு சம்பளம் 6000 பிராங். அதிக அளவு 2000 பிராங்க் (1 பிராங்க் 5.20 உரூபாய்).

பாரிசில் உள்ள ஒரு தெரு நம்மூர்த் தெரு போலவே காட்சியளிக்கிறது. விளம்பரப் பலகைகளில் கலப்படத் தமிழ் அங்கும் இடம் பெற்றிருந்தாலும் நல்ல தமிழ் ஆட்சி புரி வதைப் பூரிப்போடு பார்க்க முடிந்தது.

நகை மாளிகை, தங்க மாளிகை எனும் பெயர்கள் 'ஜூவல்லர்ஸ்' என்பதற்குப் பதில் இடம் பெற்றுள்ளன.

'யாழினி' எனும் பெயர் சிறப்பிடம் பெற்றுள்ளது. ஒரு விளம்பரத்தை அப்படியே தந்துள்ளேன்.

காசெட்டுகள் என்பதை கசெற்றுக்கள் என்று தமிழ் மயப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

(இணைப்பு)

இங்கு இரண்டு வான்திடல்கள் (Airpots) உள்ளன. ஆர்லி (Orly) என்பதும், அதைவிடப் பெரியதும் பன்னாட்டு வரவுள்ளதுமான 'டிகால்' வான்திடல் என்பதும் சிறந்து விளங்குகின்றன.

பண்பாட்டுப் பாதுகாப்பு உணர்வு அதிகம். பாஸ்டைல் சிறை உடைக்கப்பட்ட இடம் கூடப் புதிய கட்டிடங்களால் நிரப்பப்பட்டிருந்தாலும் பழைமையையும் பேணும் உணர்வுடன் விளங்குகிறது.

புதுமைகளின் உச்சத்திற்குப் போனாலும் லூயி மன்னனின் பழைய அரண்மனை பொலிவு குன்றாமல் பேணப்படுகிறதே!

புதுமை என்றதும் 'Sex Shop' எனப்படும் பாலியல் கூடங்கள் தான் நினைவுக்கு வருகின்றன. வெறும் உடலோடு காட்சியளிக்கும் மகளிர் நாம் காப்பி, சிற்றுண்டி சாப்பிடும் நேரம் வரை உடன் அமர்ந்து தொட்டு மகிழ வைத்து நம் செலவிலேயே அவர்களும் சாப்பிட்டு விட்டுப் போகும் மின்னல் வேக நிகழ்ச்சியும் உண்டு.,

மெதுவாக நடக்கும் பாலியல் உறவுகளும் உண்டு. எதற்கும் இடந்தரும் வகையில் இங்கு ஏராளமான கூடங்கள் உள்ளன. இதே போன்ற பாலியல் கூடங்கள் பெர்லினிலும் இருப்பதைப் பார்த்தேன். வெளியிலேயே பெண்ணின் நிர்வாணப் பட விளம்பரங்கள் கண்சிமிட்டி அழைக்கின்றன. பெர்லினில் தங்கராசு இல்லத்தின் கீழ்த்தளத்தில் உள்ள தெருவிலேயே அவற்றைக் கண்டேன். கி.ஆ.பெ.வி. அவர் வீட்டில் தான் தங்கியிருந்தார். இதுபற்றிப் பெரியவரிடம் கூறிய போது புன்னகைத்தார். அவ்வளவுதான்.

பிரான்சு நாட்டினர் தாய்மொழிப் பற்று மிகுந்தவர்கள். 100 விளம்பரப் பலகைகளைப் பார்த்தால் 98இல் பிரெஞ்சு மொழி தவிர வேறு எதுவுமில்லை. இரண்டு இடங்களில் ஆங்கிலமும் இடம் பெறுகின்றது. அந்த அளவுக்கு ஒரே மொழி ஆட்சி. ஆங்கிலத்தை அவர்கள் உலக மொழியாகவே ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு மணி நேரப் பயணத்தில் இங்கிலாந்துக்குப் போய்விடக் கூடிய தொலைவில் இருந் தாலும் பிரெஞ்சியர் ஆங்கிலத்தைப் பொருட்படுத்துவதில்லை. அதுவும் இப்போது கடலுக்குள் சுரங்கவழி அமைத்து விரைவான தொடர்வண்டிப் பயணத்தையும் ஏற்பாடு செய்து விட்டனர். அந்த அளவுக்குத் தொடர்பு அதிகம்!

ஐ.நா. சபைச் செயலர் பௌடஸ் காலி தேர்தலில் போட்டி யிட்ட போது பிரெஞ்சு அதிபர் ஒரே மூச்சில் அவரை ஆதரித் தார். அதற்கான காரணம் பௌடஸ் காலிக்குப் பிரெஞ்சு மொழி தெரியும் என்பதுதான்.

"We will support any african who speaks French" என்ற பிரெஞ்சு அதிபர் செய்த அறிவிப்பு அவர்களது மொழிப் பற்றை உணர்த்துகிறது.

தமிழ்நாட்டில் தூய தனித்தமிழ் இயக்கம் இருப்பது போலவே பிரெஞ்சு நாட்டிலும் தூய பிரெஞ்சு இயக்கம் இருந்து செயற்பட்டு இன்று அது வெற்றிகரமாகக் கோலோச் சிக் கொண்டிருக்கிறது என்பதை உணர முடிகிறது. இது தொடர்பாக ஆய்வாளர் திருமாறன் கூறியதை அப்படியே தந்தால் பொருத்தமாக இருக்கும்:-

"பிரெஞ்சு குடியரசுத் தலைவர் டிகால் 19.12.1969 இல் தலைமை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் பிரெஞ்சு மொழி யின் பாதுகாப்புக் கொள்கை எனக் கருதத்தக்க சில நடைமுறைகளைக் கூறியிருக்கிறார். அவற்றின் நோக்கம் புதுச் சொற்படைப்பின் வழியாகப் பிரெஞ்சு மொழியை வளபபடுத்தலே. பல்வேறு அமைச்சகங்களிலும் கலைச் சொற் குழுக்களை அமைக்குமாறு தலைமை அமைச்சரைக் குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார். மேலும் புதிய

தூய பிரெஞ்சுக் கலைச் சொற்கள் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால் பிரெஞ்சு அதிகாரிகளும், குடிமக்களும் அரசு ஆணை, ஒப்பந்தம், அறிக்கை, அறிவிப்பு முதலியவற்றிலும் பழைய கலப்புப் பிரெஞ்சு மொழியையோ கடன் சொற் களையோ ஆளக்கூடாது என்று பிரான்சின் தலைமை யமைச்சர் சேச்சுசாபான் தெல்மா கடுமையான கட்டளை யிட்டார்."

இந்த அளவுக்கு மொழிப் பற்றும், பழைமைப் பிடிப்பும் நீங்காத புதுமை நாட்டமுடைய நாடாக பிரான்சு விளங்கு கிறது.

இந்த நகரத்துக்கு, ஏன் நாட்டுக்கே சிறப்பளிப்பது ஈபிள் கோபுரம்தான் (Effle Tower) இதன் உண்மையான பெயர் தெரிவதற்குமுன் தமிழ்நாட்டில் இதனை ஈகில் (Eagle) கோபு ரம் என்றுதான் கூறுவார்கள். கழுகுக் கோபுரம் என்று பெயர் வைக்கும் அளவுக்குத் தமிழ்நாட்டில் இதன் செல் வாக்கு அதிகம். இங்கு அரசியல் கட்சிகள் மாநாடு நடத் தும்போதோ பெரிய நிகழ்ச்சிகள் நடத்தும்போதோ தலைவர் களை வரவேற்கும் வகையில் வரவேற்பு வளைவுகள் அமைக்கும் போதோ இந்த ஈபிள் கோபுரம் தவறாமல் இடம் பெறத் தொடங்கி விட்டது. மூங்கில் கழிகளால் பின்னி அமைத்து அதில் மின்சாரச் சரவிளக்குகளைத் தொங்க விட்டுத் தொலைவிலிருந்து பார்த்தால் ஈபிள் கோபுரம் அப்படியே வந்துவிடுகிறது.

தஞ்சைக் கோபுரம் போல் அமைப்பு, தாசுமகால் போன்ற அமைப்பு, மாதா கோயில் அமைப்புகள் என்று எத்தனை வந்தாலும் எளிதாக அமைக்கக் கூடியதும் பளிச்சென்று நம் கண்ணைக் கவர்வதும் ஈபிள் கோபுரம்தான். அலங்கார வளைவிலேயே இப்படியிருந்தால் நேரில் எப்படியிருக்கும்?

உண்மையில் பார்த்ததும் வியந்து போனேன். 1989இல் நான் பாரிசு போனபோதே இதனைப் பார்த்து மகிழ்ந்தேன். நான் போன நேரம் ஈபிள் கோபுரத்துக்கு 100 வயது. ஆம்! 1989இல் நான் பாரிசு போனபோதே இதனைப் பார்த்து மகிழ்ந்தேன். நான் போன நேரம் ஈபிள் கோபுரத்துக்கு

100 வயது. ஆம்! 1889இல் கட்டப்பட்ட கோபுரம் அது. உலகப் பொருட்காட்சி நடைபெற்ற காலத்தில் கட்டப்பட்டது. இதற்குச் செலவான தொகை அப்போது ரூ.1 கோடி. இதைப் பார்க்க வந்தவர்களிடம் கட்டணமாகப் பெற்றே இந்தத் தொகையை அரசு திரும்ப வரவு வைத்துக் கொண்டது. இதன் உயரம் 1000 அடி. இரும்பு எஃகு தளவாடங்களாலேயே உருவாக்கப்பட்டது. 3 மாடிகள் – 5000 படிகள். மேலே போக மின்தூக்கி வசதி. இதில் உள்ள 12000 உத்தரங்களும் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட இணைப்பு (ரிவெட்) ஆணிகளால் முடுக்கப்பட்டுள்ளன. வெறும் கட்டிடமாகக் கட்டி எழுப்பி அது காலத்தால் பழமையாகி விடத் தேவையில்லாத வகையில் இரும்பைப் பயன்படுத்தி இவ்வளவு சிறப்பாக அமைத்ததால்தான் இதற்கு இவ்வளவு புகழ்.

இதற்கு மற்றொரு பெயர் என்ன தெரியுமா?

"Grand Old Lady".

செர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளில் எந்த இடத்திலும் அவரவர் மொழியைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஒரு கடையில் பொருள் வாங்குகிறோம். அதற்கான பட்டியலை (Bill) வாங்கிப் பாருங்கள் அதில், ஆங்கிலமே இல்லை.

அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு பட்டியலை அப்படியே தந்துள்ளேன். ஆனால் நம் தமிழ் நாட்டில் கூட்டுறவுப் பண்டக சாலையில் ஒரு பட்டியல் தரப்பட்டுள்ளது. வெறும் மளிகைப் பொருள்களை வாங்கியதற்கான பட்டியல்தான் அது. ஆகா! என்ன அழகாக ஆங்கிலத்தில் தருகிறார்கள். ஏன் இந்த நிலை? தமிழர்களிடையே இந்த அடிமைத்தனம் ஏன்?

லூயி மன்னனின் புகழ்பெற்ற அரண்மனையைப் பார்த்து நான் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை. எத்தனை காணி நிலப்பரப்பில் நீச்சல் குளங்களும், பூங்காக்களும் சுற்றிலும் அமைந்து கிடக்க இன்னும் தன் கலை நுட்பங்களோடு கள்ளப் புன்னகை புரிந்து கொண்டிருக்கும் கணக்கற்ற அறைகளைக் கொண்ட அரண்மனை. மன்னர்கள்

எவ்வளவு அனுபவித்து வாழ்ந்துள்ளார்கள் என்பதை நேரில் காண நம் முன்னால் நிற்கும் உண்மையான சான்று இந்த அரண்மனைதான்.

கடந்த முறை பாரிசுக்குச் சென்றபோது ஈபிள் கோபுரம், லூயி மன்னன் அரண்மனை, பாஸ்டைல் சிறை இருந்த இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டுவிட்டதால் இம்முறை கிடைத்த ஒரு முழுநாளை டிஸ்னி உலகத்தைப் (Euro Disney) பார்வையிடுவதில் செலவிட்டேன். *(21.8.93)*

நானும், சுசீலாவும்...... கோவிந்தசாமியும் புறப்பட்டோம். பாரிசிலிருந்து 40 கி.மீ. தொலைவில் பரந்த இடத்தில் அமைந்துள்ளது இந்த விளையாட்டுலகம். லாஸ் ஏஞ்சல்சு நகரில் உள்ள டிஸ்னி உலகத்துக்கு நிகராக இதனை அமைத்து ஐரோப்பாக் கண்டம் முழுவதற்கும் இதனை உரிமையாக்கியிருக்கிறார்கள். அமெரிக்காவின் பிளாரிடாவிலும் டிஸ்னி உலகம் உள்ளது.

முதலில் இதன் அமைப்பு முறைகள், மற்றும் இங்குள்ள விதிமுறைகள் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லது.

2 அகவைக்குட்பட்ட குழந்தைகளுக்கு நுழைவுக் கட்டணமில்லை. இங்கு பேய் உலகம் இருப்பதால் 7 அகவைக்குட்பட்டவர்கள் ஒரு மூத்தவரோடு (adult) சேர்ந்துதான் சீட்டு எடுக்க வேண்டும்.

உடையைப் பற்றி ஒரு வரையறை உண்டு. மூடுகாலணிகளும் சட்டையும் அணிந்தாக வேண்டும் அங்கே. பொருத்தமான உடையும் இருக்க வேண்டும். விதிமுறை இப்படி இருந்தாலும் நான் என் வழக்கமான வேட்டி, சட்டையுடன் தான் சென்றேன். யாரும் என்னைத் தடுக்கவில்லை. (Shoes and shirts must be worn at all times.)

பேரிடி மலையிலும் (Big thunder Mountain) ஆட்டோபியா போன்ற சிலவற்றிலும் சென்று சுற்றிப் பார்க்க விரும்புபவர்கள் இருதய நோய், முதுகு வலி, கழுத்து வலி,

வயிற்று நலிவு போன்றவை இல்லாதவர்களாக இருக்க வேண்டும். அங்கே ஏற்படும் பரபரப்பைப் பலர் தாங்கிக் கொள்ள முடியாது என்பதே இதற்குக் காரணம்.

மூன்று நாட்கள் முழுமையாய்ப் பார்த்தால்தான் இதனை முற்றிலும் பார்க்க முடியும் என்பதால் நுழைவுச் சீட்டை 3 நாட்கள், 2 நாட்கள், 1 நாள் என்று மூன்று வகையாகப் பிரித்து வழங்குகின்றனர். ஒரே நாளில் பாதியில் வெளியில் சென்று மீண்டும் வர வேண்டுமானால் கையில் ஒருவகை இரப்பர் முத்திரை வைக்கிறார்கள். அது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் மீண்டும் உள்ளே நுழையும்போது வாயிலில் இருப்பவர்கள் ஒரு கருவியை வைத்துக் கண்டு பிடித்து விடுகிறார்கள். வியப்புத்தான். இந்த வியப்பை இங்குதான் முதன்முதலில் பார்த்தேன்.

இந்த வியப்பு உலகத்துக்கு வெளியில் பல வகையான வாடகைகளில் நிறைய விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. 3 நாள் தங்கிப் பார்ப்பவர்கள் இங்குத் தங்கி வந்து பார்த்துவிட்டு விடுதி சென்று ஓய்வு எடுத்து விட்டு மீண்டும் வந்து பார்க் கின்றனர்.

நமது செல்ல நாய்கள் போன்றவற்றை உள்ளே கொண்டு போக முடியாது. அதற்கென விலங்குப் பாதுகாப்பகம் (Animal Care Centre) உள்ளது. அதில் விட்டுவிட்டு உள்ளே சென்று திரும்பும்போதுதான் அவற்றை அழைத்துக் கொள்ள முடியும். குழந்தைகள் அதிகமாக நடமாடும் உலகில் வேறு ஏதாவது குழப்பம் நேர்ந்து விடக் கூடாதல்லவா? ஆரவார ஒலி மட்டும் கேட்டு, அமைதியுடன் நடக்கும் அந்த உலகில் குரைப்பு ஒலிகள் குறுக்கே வந்து குலைந்து விடக்கூடா தல்லவா? இரண்டு நாய்கள் ஒரே இடத்தில் சந்தித்தால் என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியுமே! அந்தச் சண் டையை விலக்கத்தான் நமக்கு நேரம் சரியாக இருக்கும். அத னால்தான் இந்த ஏற்பாடு. பாரிசு நாய்கள் மட்டும் ஒன் றையொன்று நட்புடனா பார்த்துக் கொள்ளப் போகின்றன?

இதே போலக் குழந்தைகட்கான இடமும் உள்ளது. ஆனால் குழந்தைகளை நாள் முழுதும் விட்டுச் செல்ல முடியாது. குழந்தைக்கட்கான தேவைகளை நிறைவேற்றத் தாய்மார்கள் சிறிதுநேரம் ஒதுங்கியிருக்கும் இடமாகஇது உள்ளது. குழந்தைகட்கான உணவு வகைகளும் இங்கு கிடைக்கும்.

டிஸ்னி உலகம் அமெரிக்காவைச் சேர்ந்தது என்பதால் இங்கே பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாக 'Main Street, U.S.A.' என்பதையும் ஒன்றாக இணைத்துள்ளார்கள். இதில் 31 வகையான அமைப்புகள் இயங்குகின்றன. இந்த நிறுவனம் இருப்பது பாரிசில் என்றாலும் தன் நாட்டு வரலாற்றுச் சின்னங்களை மறவாமலும் அவற்றைப் பேணிப் போற்றும் பாங்கிலும் அமைந்திருப்பது வியப்பாகும்.

1886 இல் நிறுவப்பட்ட சுதந்திரச் சிலையைக் கூட (Statue of Liberty) இங்கு நினைவுபடுத்தியிருக்கிறார்கள் இதுபோல 6 கவர்ச்சிப் பகுதிகள், 15 வகையான கடைகள், 10 வகையான உணவகங்கள் இங்கு உள்ளன.

இங்குள்ள நான்கு பெரும் பிரிவுகளும் சிறப்பானவை.

### 1. வீர உலகம் (Frontier land)

இதில் பேரிடி மலையில் சுரங்கங்களின் வழியாக ஓர் இரயிலில் பயணம் செய்தது மறக்க முடியாத அனுபவம். மலையில் ஏறியும், பள்ளத்தில் இறங்கியும், திருப்பங்களில் மின்னல் வேகத்தில் திரும்பியும் திடீரென்று வெளிச்சமே இல்லாத இருட்குகைக்குள் நுழைந்தும் நம்மைக் கிறுகிறுக்க வைத்து விடுகிறார்கள். இருதய நோய் உள்ளவன், கொஞ்சம் பயந்தவன் எவனும் இதில் ஏறக்கூடாது. அது போகும் வேகமும் பயந்தவன் சாகும் வேகமும் ஒன்றுதான். அந்த அளவுக்குப் படுபயங்கர அதிர்வுடன் செல்லும் இரயில் பயணம்.

இங்கேயே, சுற்றி உள்ள ஆறுகளில் படகில் போகலாம். கப்பலிலும் ஒரு சுற்றுச் சுற்றி வரலாம். நாங்கள் கப்பலில் ஒரு சுற்றுச் சுற்றினோம். இடையிடையே எரிமலைக் குழம்பு

கக்குவதுபோன்ற காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு 'Indian style' என்று பெயர் வைத்திருப்பதைக் கேட்டால் பெருமையாக இல்லையா? எல்லா இடங்களிலும் சென்று இறங்கிக் கொள்ளக்கூடிய வகையில் நீராவி இரயில் உள்ளது. மலையும் அதைச் சுற்றி வரும் கப்பலும் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**2. சாதனை உலகம்** (Adventure Land)

தொல் பொருள்கள் நிறைந்ததும், மறைந்த நகரங்களின் சிதைவுகள் இடம் பெற்றதுமான பகுதிகள் உண்டு.

குகைகள், செயற்கை நீர்விழ்ச்சிகள், பாலங்கள் என்று ஒருவகைத் தீவு - முதலியவை இதில் இடம் பெறுகின்றன.

**3. புதுமை உலகம்** (Fantasy land)

அடர்ந்த காட்டுக்குள் பயணம். பேய்கள் மற்றும் வெவ்வேறு காட்சிகளைக் காணும் வாய்ப்பு - ஒரு படகில் சென்று நீரோடை இழுத்துச் செல்ல ஒரு குகைக்குள் புகுந்தால் அங்கு உலக நாடுகளின் இசைப் பொம்மைகள். நம் நாட்டை அடையாளம் காட்டப் பரத நாட்டியக் காட்சியும், பாம்புப் பிடாரன் மகுடி ஊதும் காட்சியும் இடம் பெறுகின்றன.

**4. கண்டுபிடிப்பு உலகம்** (Discovery land)

இதில் ஆடோபியா, ஒளிப்பேழைக் காவலர்கள் (வீடியோ போலிஸ்) போன்ற பல சிறப்புக் கூறுகள் உண்டு.

இன்னும் எத்தனையோ சிறப்புகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். 3 நாளில் பார்த்தாலும் தீராத பகுதிகளில் சிலவற்றை மட்டும் ஒரே நாளில் பார்த்து விட்டு அனைவரும் பாரிசு திரும்பினோம்.

ஒரே நாளில் 50000 பேரை அனுமதித்து உலாவவிடும் இந்த உலகம் இப்போது கண்ணில் நிற்கிறது.

புறப்படும்போது பேரனுக்குப் பொம்மையும் சட்டையும் வாங்க விரும்பினேன். உடன் வந்த கோவிந்தசாமி அது தன்

அன்பளிப்பாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வாங்கித் தந்தார். 85 பிராங்குகளை எனக்காகச் செலவிட்ட அவரது அன்பை வியந்தேன்.

டிஸ்னி உலகம் பார்த்துத் திரும்பியதும் 3 இடங்களில் தரப்படும் வரவேற்பு மற்றும் சிற்றுண்டிக்காகச் செல்ல வேண்டியிருந்தது. சக்திப்புயலும் வேறு சில அன்பர்களும் சேர்ந்து ஓர் உணவகத்தில் சுவைநீரும், நினைவுப் பொருளும் வழங்கினார்கள். பிறகு நண்பர் ஒருவர் வீட்டில் கி.ஆ.பெ.வி. முதலான எங்களோடு மேலும் ஒரு பத்துப் பேர் கலந்து கொண்டு சிற்றுண்டி அருந்தினோம். பலவகையான சுவையான சிற்றுண்டிகள், மதுவகைகளும் பரப்பப்பட்டன. என் போன்ற பலர் அதைத் தொடாமலே கிளம்பினோம். கலைக்குழு வைத்து உணர்வு எழுப்பும் ஈழத் தோழர் ஒருவர் வீட்டில் இரவுணவு. அந்த வேகத்தில் அங்கே கிளம் பினோம். இரவுணவும் முடித்து, ஒளிப்பேழை (Video) க்காக எடுக்கப்பட்ட ஒரு பேட்டியிலும் பங்கு பெற்று விட்டுக் கிளம்பினோம்.

இரவு 11.30 மணிக்குச் சுசீலா வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். அதன் பிறகு ஈழ அன்பர் முருகன் வந்து அவர் வீட்டுக்கு வந்தே ஆக வேண்டும் என்று அழைத்துச் சென்றார். அவர் கடந்த முறையே எங்கட்கு அறிமுகமானவர். அவர் வீட்டுக்குச் சென்று முறைக்காக ஒன்றிரண்டு வகைகளைக் கொரித்து விட்டுத் திரும்பும்போது மணி 1.15 ஈழத் தமிழர் சிக்கல்கள் குறித்துப் பேசினோம்.

கி.ஆ.பெ.வி. தூங்கிக் கொண்டிருந்தார். நானும் சிறிது நேரத்தில் தூங்கத் தொடங்கினேன். நாளை பாரிசை விட்டு உரோம் நோக்கிப் புறப்பட வேண்டுமே!

**நினைவலைகள்** : - பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட வால்டேர், உரூசோ போன்றவர்களை நினைத்துக் கொண்டேன். அவர்கள் முயற்சி வெற்றி பெற்று இன்று அவர்கள் கண்ட கனவையும் விஞ்சி இந்த நாடு நிமிர்ந்து நிற்கிறதே! உரூசோவை மற்றொரு வகையிலும் நினைத்துப் பார்த்தேன்.

அவரது 'சமுதாய ஒப்பந்தம்.' எனும் நூலைப் படித்தபோது பிரெஞ்சுக் குடிமகன் என்று தன்னை அழைத்துக் கொள் வதில் பெருமை கொள்வதாக அதில் குறிப்பிட்டிருப்பார். "றேன் ழக்கே ரூசோ" எனும் அத்தொடர் ஏற்படுத்திய தாக் கத்தால்தான் நான் என் பெயரைத் 'தமிழ்க்குடிமகன்' என்று வைத்துக் கொண்டேன் என்பதை நினைத்துப் பார்த்தேன்.

சிறிது நேரம் கண்ணயர்ந்து தூங்கி விட்டு விழித்துப் பார்த்தேன். கி.ஆ.பெ.வி. எழுந்து மங்கலான வெளிச்சத்தில் பெட்டியைத் தயார் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். ஆறு மணிக்குப் புறப்பட வேண்டும் என்பதால் 5.30 மணிக்கே தயாராகிக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். என்ன பொறுப்புணர்ச்சி! என்ன கடமையுணர்வு! 95 அகவை யில் அவரது விழிப்பும் பொறுப்பும் வியப்பை அளித்தன.

அவர் எழுந்த பிறகு நான் தூங்குவதுபோல நடிக்க முடியுமா என்ன? நானும் எழுந்து விட்டேன். மளமளவென்று காலைக் கடன்கள். சுசீலா சுடச்சுடக் காப்பி போட்டுக் கொடுத்தார். குடித்து விட்டுத் தயாரானதும் அழைத்துச் செல்ல முருகன் வந்து விட்டார்.

கி.ஆ.பெ.வி.யை மெல்ல அழைத்துச் சென்று வண்டியில் அமர்த்தியதும் கிளம்பினோம்.

காலை 7.30க்கெல்லாம் டிகால் வான்திடல் வந்து சேர்ந்தோம். இப்போது கோவிந்தராசனும் நாராயணசாமி யும் பாரிசிலேயே தங்கி விட்டனர். நாங்கள் ஐந்து பேர் மட்டும் புறப்பட்டோம். கி.ஆ.பெ.வி. அண்ணாமலையார், நான், திருவாசகம், ஆண்டவர்.

சுசீலாவிடமும், வழியனுப்ப வந்திருந்த முருகன், சக்திப்புயல், கோவிந்தராசன் ஆகியோரிடமும் விடைபெற்றுக் கொண்டு 22.8.93 காலையில் 9.40 மணிக்கு AZ 283 வானூர்தியில் புறப்பட்டோம். இரண்டே மணி நேரத்தில் காலை 11.40க்கெல்லாம் உரோம் நகரத்தில் தரையிறங் கினோம்.

பெர்லினில் ஏற்கனவே மாநாட்டு வரவேற்புக் குழு இருக்கிறது. அங்குச் செல்வதில் சிக்கல் ஒன்றுமில்லை. பாரிசில் சகோதரி சுசீலா இருக்கிறார். அவரது கணவர் பக்தவச்சலம் இருக்கிறார். அவர்களால் எங்களைப் பேண முடியும். எனவே பாரிசுப் பயணத்தில் கவலையேதும் இல்லை. ஆனால் உரோம் பயணம்தான் இடிக்கிறது. பயணச் சீட்டோ உரோமில் இரண்டு நாள் தங்குவதாக அமைக்கப் பட்டு விட்டது. இனி மாற்றி வைப்பது - அதுவும் ஐந்து பேர்க்குரிய பயணச் சீட்டை மாற்றி அமைப்பது கடினம். இவ்வளவு தூரம் வந்துவிட்டுப் புகழ் பெற்ற உரோமாபுரிக்குப் போகாமலா ஊர்க்குப் போவது என்ற நினைப்பு ஒருபுறம். மீண்டும் உரோமாபுரிக்கு வர வாய்ப்புக் கிட்டுமா - அதுவும் பிறர் அழைப்பில். எனவே கிடைத்த வாய்ப்பில் எப்படியாவது 2 நாள் உரோமாபுரியில் தங்கியே தீர வேண்டும். கத்தோலிக்கர்களின் புனித தலமாகிய வத்திகான் அரண்மனையைப் பார்த்தாக வேண்டுமே!

ஆசை ஒரு பக்கம். யாரை நம்பி உரோமில் கால் வைப்பது என்ற குழப்பம் ஒருபக்கம். வா.மு.சேதுராமன்தான் கடைசியில் இதற்குத் தீர்வு கண்டார். வத்திகான் வானொலியில் பணியாற்றிடும் கிறிஸ்டோபரிடம் தொடர்பு கொண்டு எங்களை வரவேற்க வைத்துவிட்டார். கிறிஸ்டோபரும் இரண்டு மகிழுந்துகளை அனுப்பி எங்களை அழைத்து வர ஏற்பாடு செய்துவிட்டார். நாங்கள் அனைவரும் வான்திடலை விட்டு வெளியே வந்ததும் சுற்று முற்றும் பார்த்தோம். என்னை நோக்கி ஒருவர் வேகமாக வந்து, "நீங்கள் தான் தமிழ் நாட்டிலிருந்து வரும் அறிஞர்களா?" என்றார். என் சிப்பா துண்டு அவருக்கு உடனே அடையாளம் காட்டி விட்டது. அவர்தான் கிறிஸ்டோபரால் அனுப்பப்பட்ட அன்பர் என்பதை அறிந்தவுடன் மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. அறிமுகமே இல்லாத உரோம் நகரில் அன்பான வரவேற்பு. அழைத்துச் செல்ல வந்த இரு மகிழுந்துகளும் வான்திடல் முகப்பில் நிறுத்தக்கூடாது என்பதால் தொலைவில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இப்போது வந்துவிடும் என்றும்

தெரிவித்தார். சிறிது நேரத்தில் இரண்டு மூன்று அன்பர்களுடன் மகிழுந்துகள் வந்து சேர்ந்தன.

ஏறிப் புறப்பட்டோம். 22.8.93 பகல் 12.45 மணி. நல்ல வெயில். உரோமில் இரண்டு மூன்று மாதமாக மழையே இல்லையாம். போகிற வழியில் சாலை மருங்குகளில் வளர்த்து வைக்கப்பட்டிருந்த சில மரங்கள் கருகிப் போய் நின்றன. காட்டுக் கருவேல மரங்களையே கண்டு – கருகிப் போய்த் தலை தொங்கி நிற்கும் தென்னை மரங்களைக் கண்ட இராமநாதபுரம் போல் உரோம் காட்சியளித்தது. ஒருவழியாக நம்மூர்க்கே வந்துவிட்டோமோ எனும் மயக்கம்.... அவ்வளவு வறட்சி அங்கே.

வண்டிகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து 25 கி.மீ. தொலைவு கடந்து உரோம் நகருக்குள் நுழைந்தன.

நேரடியாக, கத்தோலிக்க இளங்குருமார்கள தங்கும் விடுதிக்குள் நுழைந்தோம். விடுமுறைக் காலம் என்பதால் இளங்குருமார்கள் பலர் இங்குத் தங்கவில்லை. எனவே 12 அறைகள் கொண்ட ஓர் அருமையான மாடிப்பகுதியை எங்களுக்கு ஒதுக்கியிருந்தார்கள். நான் அண்ணாமலையார், ஆ. திருவாசகம், ஆண்டவர் ஆகிய நால்வர்க்கும் ஆளுக்கோர் அறை.

அறைகளின் அமைப்பும், அங்குள்ள குளியல் அறை, கழிப்பறை வசதிகளும் எங்களை எங்கோ கொண்டு போய் விட்டன. பெர்லினிலும் பாரிசிலும் நண்பர்களது இல்லங்களில் தங்கியிருந்த எங்களுக்குத் தனியறை வசதிகள் – அதிலும் மிக அருமையான வசதிகள் என்றால் மனம் கூத்தாடாதா என்ன? சங்கைக்குரிய (Reverent) சகோதரர்கள் தனசேகரன், அல்போன்சோ போன்றவர்கள் வரவேற்றனர். பெட்டிகளை அறையில் வைத்து விட்டுக் கீழே இறங்கிவந்து வண்டிகளில் ஏறினோம். சில மணித் துளிகளில் நண்பர் கிறிஸ்டோபர் இல்லம் அடைந்தோம். அவரும் திருவாட்டி சாந்தா அம்மையாரும், சங். சகோதரிகள் சிலரும் வரவேற்றனர். கி.ஆ.பெ.

வி. மட்டும் கிறிஸ்டோபர் வீட்டிலேயே தங்குவது என்று ஏற்பாடாயிற்று.

அனைவரும் சாப்பிட உட்கார்ந்தோம். அப்பாடா! ஒரு வகையாக அனைத்தும் தமிழ்நாட்டு உணவு. குழம்பு, மிளகுநீர், தயிர் என்றும் மற்றும் புலால் வகையென்றும் அமர்க்களப்பட்டது. நீண்ட நாளாயிற்றே இப்படிச் சாப்பிட்டு. ஒருபுறம் பசி. வயிறாரச் சாப்பிட முடியாமல் கண்டதை யெல்லாம் தள்ளி வைத்ததால் ஏற்பட்ட நீண்ட நாள் பட்டினி வேறு. அதனால் நிறைவோடு சாப்பிட்டோம். கி.ஆ.பெ. வி. களைப்பாக இருந்ததால் அவர்க்கு அறை ஒதுக்கி அவரை உறங்கச் சொல்லிவிட்டோம். நாங்கள் எல்லாரும் கொஞ்ச நேரம் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம்.

மாலை 4.30 மணியளவில் கிறிஸ்டோபர் எங்கட்கொரு செய்தி அறிவித்தார். இன்று ஞாயிறு என்பதால் உரோமிலும் உரோமுக்குச் சில கற்றொலைவிலும் வாழும் தமிழர்கள் – அனைவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் – மாலையில் ஒரு பூங்காவில் சந்திப்பதென்றும் சில மணி நேரம் அனை வரும் கலந்து பேசி – விளையாட்டுகளிலும் கலந்து கொண்டு விட்டுப் பிரிந்து போவது வழக்கமென்றும் இன்று நாங்களும் வந்திருப்பதால் அனைவருமே பூங்காவிற்குச் சென்றால் எல் லோரையும் சந்தித்து மகிழலாம் என்றும் தெரிவித்தார். எங்களுக்கும் மகிழ்ச்சிதான். புறப்பட்டோம். கி.ஆ.பெ.வி. தூங்கிய அறையில் எட்டிப் பார்த்தோம். ஐயா என்று மெல்ல அழைத்துப் பார்த்தோம். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். இப்போது தூக்கத்தில் அவரை எழுப்பிப் பூங்காவரை அழைத்துச் சென்று அங்குச் சில மணி நேரம் அவரை உட்கார வைத்துத் தொல்லைப்படுத்த வேண்டாமே என்று கருதினோம். அப்படியே தூங்கட்டும்; ஓய்வெ டுக்கட்டும். விரைவில் நாம் திரும்பிவந்து அவருக்குத் தேவையான் உணவு முதலியவற்றை ஒழுங்கு செய்து கொள்ளலாம் என்று நினைத்தோம். அது எவ்வளவு பெரிய வம்பாகப் போய்விட்டது என்பதை அப்புறம்தான் விளக்க முடியும்.

கதவை வெளியே பூட்டிவிட்டு, அதற்கு அப்புறம் உள்ள பொதுக் கதவையும் பூட்டிவிட்டுக் கிளம்பிவிட்டோம். (இதில் உள்ள எண்ணைச் சரியாகப் பொருத்தினால்தான் உள் வீட்டில் இருப்பவர்கள் வந்து கதவைத் திறப்பார்கள்.)

20 மணித் துளி நேரம் உரோம் நகர வீதிகளில் வலம் வந்தோம். ஆங்காங்கே சில (சில மட்டும் தான்) சுவரொட்டிகளைப் பார்த்தோம். அதிலும் திரைப்படச் சுவரொட்டிகளே பெரும்பாலும். நினைத்துப் பார்த்தேன், நம்மூர்ப் பழக்கம் இங்கே கொஞ்சம் கொஞ்சம் இருக்கும் போலிருக்கிறதே என்று. என்ன இருந்தாலும் நமக்கும் உரோமபுரிக்கும் இடையில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வணிக உறவு இருந்திருக்கிறதே - தமிழ் நாட்டு முத்துகளைச் சாராயத்தில் போட்டுப் பருகினாளாமே கிளியோபாத்ரா - அதனுடைய மிச்ச சொச்சம்தான் இந்தச் சுவரொட்டிகளோ என்று நினைத்தேன்.

ஆனால் சுவரொட்டி மட்டும் மேல் நாட்டுச் சாயலில் பளிச்சென இருந்தது. ஒரு பெண்ணின் மார்பகம் வெளிப்படையாகத் தெரியும்படி ஒரு படம். இதற்கு மேல் என்ன சொல்ல? சில இடங்களில் சுவர்களில் எழுதியிருக்கிறார்கள். நியூயார்க்கில் இந்தக் குறை கொஞ்சம் உண்டு. அது உரோமிலும் உள்ளது.

புகழ் பெற்ற வத்திகான் அரண்மனையைத் தாண்டி நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். நாளை உள்ளே சென்று பார்த்துக் கொள்ளலாம் எனும் ஆர்வத்தோடு கடந்து சென்றோம்.

மகிழுந்துகள் ஓடும் சாலையிலேயே அமிழ் தண்டூர்திகள் (tram) ஓடுகின்றன. அந்த வண்டி மெதுவாகவே வருவதால் மகிழுந்துகள் ஒதுங்கி இடம் கொடுக்க வாய்ப்பாகவே உள்ளது. 'டமால் டுமீல்' மோதல்களுக்கு இடமே இல்லை.

இந்தியாவில் கல்கத்தா நகரத்தில் பார்த்ததற்குப் பின்னால் உரோம் நகரில்தான் அமிழ்தண்டூர்தி (டிராம்)யைப் பார்க்கிறேன்.

வெகு விரைவில் பூங்காவிற்கு வந்து சேர்ந்தோம். புதிய முகங்களான அனைவரும் எங்களை அன்புடன் வரவேற்றார்கள். அலுவலகங்களில் வேலை பார்ப்போர், கிறித்தவ மடங்களில் தொண்டாற்றும் சங். கன்னிமார் (Rev. Sisters) சிலர், இளங்குமார்கள் சிலர், குடும்பப் பெண்கள், பிள்ளைகள் என்று பல வகையினரும் கூடியிருந்தனர். தமிழ்நாடு எப்படியிருக்கிறது என்று ஆர்வத்துடன் கேட்டறிந்தார்கள். நாங்கள்தானே தமிழகத்தின் நேரடித் தூதுவர்கள்! பொதுவான அரசியல் நிலைகளை எடுத்துச் சொன்னோம். அதிலும் சிலர் இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்கள், உடுமலை, தேனிப் பகுதி என்று நெருக்கமாகவே அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். இது மேலும் ஒரு பாச உணர்வைத் தோற்றுவித்தது. அவரவர் கொண்டு வந்திருந்த இனிப்பு மற்றும் முறுக்கு வகையறாக்களை எல்லார்க்கும் பிரித்துத் தந்தார்கள். ஆண்களில் சிலர் இருபுறமும் கம்புகளை ஊன்றி இடையில் வலையையும் கட்டிக் கைப்பந்து (volleyball) ஆடத் தொடங்கி விட்டார்கள். எனக்கும் ஆடலாமா என்று ஆசை தான். கல்லூரியில் இருக்கும் வரை நான் விரும்பி ஆடிய விளையாட்டு கைப்பந்துதான். ஆனால் இப்போது ஏனோ விளையாட மனம் வரவில்லை.

சிறிதுநேரம் கழித்துப் பார்த்தால் சில ஆடவரும், பல மகளிரும் உட்கார்ந்து சீட்டு ஆடத் தொடங்கிவிட்டார்கள். காசு வைத்தல்ல, வெறும் புள்ளிக் கணக்குத்தான்.

இப்போது நானும் திருவாசகம், ஆண்டவரும் மட்டும் வாளா இருந்து வாய் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அவர்களே எங்களிடமும் ஒன்றிரண்டு கட்டுகளைக் கொடுத்து, ஆடுங்கள்! நீங்களும் சிறிது நேரம் பொழுது போக்கலாமே! என்றார்கள். நாங்களும் தட்டாமல் கொஞ்ச நேரம் பொதுவாக ஆடிப் பொழுது போக்கினோம். உரோம் நகரில் வந்து சீட்டாடுகிறோம் என்பதை நினைத்ததும் சிரிப்புத்தான் வந்தது.

அவர்கள் கொண்டு வந்து கொடுத்த சிற்றுண்டிகளில் அவர்கள் கொடுத்த நிலக்கடலை என்னை வியப்புக்குள்

ளாக்கியது. நம்மூரில் அவ்வளவு பெரிய கடலையைப் பார்த்ததே இல்லை. ஐந்தாறு கடலைகள் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டேன், நம்மூரில் போய்க் காட்டலாமே என்று. வறுத்த கடலை என்னை அறுத்த கதை ஒன்று தனியாக இருக்கிறது.

இருட்டி விட்டது. அனைவரும் வந்து ஒன்றாக உட்கார்ந்து விட்டார்கள். அவரவர்கள் கொண்டு வந்திருந்த தமிழ்த் திரைப்பட ஒளிப்பேழையைப் (Video Cassette) பரிமாற்றம் செய்து கொண்டார்கள். ஒவ்வொரு கிழமையும் வெவ்வேறு தமிழ்ப் படங்களைப் பார்ப்பதற்கென்று இந்த ஏற்பாடு. வெளிநாடுகளில் பல தமிழர்கட்குத் தமிழை நினைவூட்டிக் கொண்டிருப்பதே இந்த ஒளிப்பேழைகள் தான் என்ற உண்மையையும் நான் மறைக்க விரும்பவில்லை. மொரீசியசில் தமிழ் பேசத் தடுமாறுகிறார்கள். ஆனால் தமிழ்ப்பட ஒளிப் பேழையைப் பார்த்துப் புரிந்து கொள்கிறார்கள்.

சிறிது நேரம் கழித்து அனைவரும் அன்புடன் விடை பெற்றுக் கொண்டார்கள். நாங்களும் இரண்டு நாட்களில் கிளம்பி விடுவோம் என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டோம். வண்டியில் வீட்டுக்குத் திரும்பினோம். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த பிறகுதான் இங்கு ஒரு புயல் வீசிக் கொண்டிருப்பது தெரிந்தது. இங்கு ஓர் எரிமலை தீக்குழம்பைக் கக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அதில் சிக்கி நாங்கள் அனைவருமே திக்கு முக்காடிப் போனோம். பூங்காவில் நாங்கள் அடைந்த மகிழ்ச்சி எல்லாம் சுக்கு நூறாகிப் போய்விட்டது.

கி.ஆ.பெ.வி. 'ருத்ர தாண்டவ' கோலத்தில் நின்றிருந்தார். நாங்கள் போன பிறகு கொஞ்சம் நேரம் கழித்து விழித்துப் பார்த்திருக்கிறார் யாரும் இல்லை; கதவுகளையும் திறக்க முடியவில்லை.

கத்திப் பார்த்திருக்கிறார். காது கொடுப்பார் யாருமில்லை. நாங்கள் அனைவரும் வேண்டுமென்றே அவரை இப்படி விட்டுவிட்டுப் போய் விட்டதாக நினைத்து விட்டார். வசவு மொழிகள் சரமாரியாக விழுந்தன. கிறிஸ்டோபரும் சாந்தா

அம்மையாரும் சங். கன்னிமார்களும் கலங்கிப் போய் விட்டார்கள். நான் நிலைமையை விளக்கி எடுத்துச் சொல்லியும் பயனில்லை. அவரே பேசி அடங்கட்டும் என்று அண்ணாமலையாரை அவர் அருகில் உட்கார வைத்து விட்டு நாங்கள் வேறுபுறம் வந்துவிட்டோம். எவ்வளவு நேரம் தான் இது நீடிக்கும்! ஒரு வழியாக அமைதி அடைந்தார். அதன் பிறகு வழக்கம் போல் கலகலப்பு!

அன்று இரவு தோசையும் நம்மூர்க் குழம்பும் பரிமாறினார்கள். மிகவும் விரும்பிச் சாப்பிட்டுவிட்டுக் காலார நடந்து எங்கள் அறைக்கு வந்து சேர்ந்தோம்.

பயணக் களைப்பு. மாலையிலும் ஓய்வெடுக்காத குறை. வசதிமிக்க அறை. கேட்க வேண்டுமா? நல்ல உறக்கம்.

**23.8.93**

உரோம் நகரைச் சுற்றிப் பார்ப்பதென முடிவாயிற்று. கி.ஆ.பெ.வி.யை வீட்டில் விட்டு விட்டு நாங்கள் நால்வரும் இரு சகோதரிகள் வழி காட்டுதலுடன் உரோம் நகரின் சில பகுதிகளைப் பார்த்தோம்.

பங்கராசு அடிகளார் கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்த்தோம். ஒரு கோயிலுக்குக் கீழே சுரங்கப் பாதைக்கு உள்ளே போனால் அங்கு சில கல்லறைகள். குறுகிய குகை வழிகள். ஆங்காங்கே சில மின் விளக்குகள். அவை இப்போது போடப்பட்டவை. ஆனால் இந்தக் குகைப் பாதுகாப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் காற்றும் வெளிச்சமும் இல்லாமல் எவ்வளவு துன்பப்பட்டிருப்பார்களோ தெரியவில்லை. சமயவாதிகள் தாக்கப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை இந்த இடங்கள். இதில் எத்தனையோ பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

பிறகு, உரோமாபுரியின் இடிந்து போன கட்டிடங்கள். உரோமின் புகழ் மிக்க மன்னர்களின் பழைய சரக்குகள். இடிந்து கிடந்தாலும் அந்த வரலாறுகள் நம் மனத்தில் விரிந்து கிடக்கின்றன. சேக்ச்பியர் பல நாடகங்களை எழுதியதன் வாயிலாக சூலியஸ் சீசர், மார்க் அந்தோணி, கிளி

யோபாத்ரா போன்றவர்களை நம் மனத்தில் வாழ வைத்து விட்டார். அந்த மாபெரும் மனிதர்களின் சிலைகளை இப் போது உரோம் நகரிலேயே பார்க்கும்போது ஒரு பரபரப்பு. ஒரு கணம் பழைய கதைகளை அசை போட்டோம். சூலியஸ் சீசர், அகஸ்டஸ் சிலைகளின் முன் நின்று படம் எடுத்துக் கொண்டோம். (அட்டையில் ஒரு படம் உள்ளது). புகழ் பூத்த மன்னர்கள் அல்லவா அவர்கள். அவர்களது அருகில் நிற்கும்போது மனமெல்லாம் புல்லரித்தது.

'முடி சார்ந்த மன்னரும் முடி விலொரு

பிடிசாம்பல்' ஆகிவிடுவர் என்பதை நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் சிலைகள் அவை.

அடுத்து, உரோமில் அந்த நாளில் நடைபெற்ற விலங்கு விளையாட்டரங்கம். ஒரு வகையில் அது விலங்குத் தனமான - மனித நேயமற்ற விளையாட்டுதான்.

மேலே வசதியாகவும் பாதுகாப்பாகவும் உட்கார்ந்து பார்க்க அடுக்கடுக்கான அமர் இருக்கைகள் (Galleries). நம்மூர் விளையாட்டரங்களும் இப்படித்தான் உள்ளன. அதில் அரச குடும்பத்தினரும், பிரபுக்களும் பாதுகாப்பாக அமர்ந் திருப்பர்.

கீழே சுவர்த் தடுப்புகளுள் நீண்ட, வளைந்த பாதைகள். அடிமைகளை அங்கேதான் நிற்க வைப்பார்கள். பிறகு சிங்கம் போன்ற பசியெடுத்த விலங்குகளை அவிழ்த்து விடுவார்கள். அவை ஓடி ஓடி இளைக்கின்ற அடிமைகள் மீது பாய்ந்து கொன்று தசையைத் தின்று வாய் முழுதும் குருதியை ஒழுகவிடும் கோரக் காட்சிகள். இதை வேடிக்கை பார்க்க மேல் தட்டினர். சாவதற்கென்றே மனித அடிமைகள்.

எவ்வளவு கொடுமையான வரலாறு. அந்த இடத்தைப் பார்த்தபோது மனிதனின் விலங்குத்தனம் எவ்வளவு கீழே போயிருக்கிறது என்பதைத்தான் உணர முடிந்தது. 1956 வாக்கில் தேவ கோட்டைப் பள்ளி நிருவாகத்தினர் மாணவர் களாகிய எங்களைக் காரைக்குடிக்கு அழைத்துச் சென்று காட்டிய 'கோவாடிஸ்' (Quovadis) எனும் படத்தில் இந்தக்

காட்சிகள் வருவதையும், சமயவாதிகள் பலர் இப்படி அடிமைகளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்பதையும் நினைத்துக் கொண்டேன். அந்த அரங்கத்தின் சில பகுதிகள் இடிந்து விட்டாலும் உலகத்தார் எல்லாரும் வந்து பார்க்கும் அளவுக்குக் காட்சிப் பொருளாக நிற்கிறது.

இங்கு அனைவருமே இத்தாலி மொழியைத்தான் பயன்படுத்துகின்றனர். ஆங்கிலத்தின் பயன்பாடு மிகவும் குறைவு. ஆங்கிலத்தின் மீது பெரிய மதிப்பும் இல்லை. காரணம் ஆங்கிலச் சொற்களின் மூலங்களில் பல இலத்தீன் சொற்களே. இத்தாலி மொழியோ இலத்தீன் மொழியோடு மிக நெருக்கமான உறவுடையது. எனவே பல சொற்கள் உரோமில் இலத்தீன் வழியிலேயே நிற்கின்றன. 'National' எனப்படும் ஆங்கிலச் சொல் பழைய இலத்தீன் வடிவில் 'Nazionale' என்றே பயன்படுத்தப்பட்டு வருகிறது. உரோமைச் சுற்றிப் பார்த்தபோது நமக்கு அறிமுகமான பல ஆங்கிலச் சொற்களின் மூல வடிவங்களைப் பார்த்து வியப்படைய நேர்ந்தது.

அன்று பிற்பகல் வத்திகான் வானொலி நிலையத்தைப் பார்வையிடச் சென்றோம். என்னுடன் அண்ணாமலையார், திருவாசகம், வா.மு.சே. ஆண்டவர் மூவரும் வந்தனர். நண்பர் கிறிஸ்டோபர் பல பகுதிகளையும் சுட்டிக் காட்டினார். இந்தியப் பிரிவின் தலைவருக்கு எங்களை அறிமுகம் செய்து வைத்தார். சிங்களவரான அவர் எங்களுடன் சரளமான ஆங்கிலத்தில் உரையாடி மகிழ்ந்தார்.

இந்தியப் பிரிவில் தமிழ், மலையாளம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. தமிழில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான நிகழ்ச்சி அமைகின்றது. ஞாயிறு - சிந்தனை, திங்கள், வியாழன் - திருத்தந்தையின் பொதுப்பேட்டி, செவ்வாய் - விவிலியம், புதன் - நாடகம், வெள்ளி - நேர்முகம், சனி - உறவுக்குக் கை கொடுப்போம்.

ஒவ்வொரு நாளும் இறுதி 5 மணித்துளிகள் தமிழில் செய்தி இடம் பெறும்.

கட்டிடத்தைப் பார்வையிட்டு வரும்போது ஒரு தளத்தில் படியேறும் இடத்தில் 'மார்க்கோனி'யின் அரை உருவச் சிலை அமைந்திருப்பது கண்டு நெகிழ்ந்து போனேன். வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனியின் சிலையை எவ்வளவு நினைவோடு வைத்துள்ளார்கள் என்பதை எண்ணி மகிழ்ந்தேன். உள் நோக்கிச் சிந்தித்தபோது வியப்பு மேலும் விரிந்தது.

மார்க்கோனி இத்தாலிக் காரராயிற்றே! எனவே ஓர் உரிமையோடும் எங்கள் நாட்டவர் எனும் பெருமிதத்தோடும் அவரது சிலையை வைத்திருப்பதில் வியப்பில்லையே!

ஆனால் பெருவியப்பு என்னவென்றால் 1931 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 அன்றுதான் வத்திகான் வானொலியின் ஒலி பரப்பு மையம் திருத்தந்தை பதினோராம் பக்திநாதரால் துவக்கி வைக்கப்பட்டது. வானொலியைக் கண்டுபிடித்த குல்யெல்மோ மார்க்கோனியால் தான் இந்த மையமே கட்டப் பட்டது என்பது தான் வியப்பு.

உலகிலுள்ள வானொலி நிலையங்கள் மார்க்கோனியின் பெருமையைத்தான் பேசலாம். ஆனால் வத்திகான் வானொலி மையம் மார்க்கோனியாலேயே உருவாக்கப்பட்ட தாயிற்றே!

இந்த வானொலியில் நான் உரையாற்றப் போகிறேன் எனும்போது ஓர் இனம் புரியாத பூரிப்பு. உலகத்தமிழர் மாநாட்டிற்குச் சென்று வந்ததை ஒட்டி 'உலகத் தமிழர் நிலை' எனும் தலைப்பிலும் 'பொதுவான தமிழ் இலக்கிய வரலாறு' எனும் தலைப்பிலும் உரையாற்றினேன். ஒவ் வொன்றும் பத்து மணித்துளிகள். எந்தத் தட்டுத் தடங்கலுமின்றிக் கையில் குறிப்பேதுமின்றி ஒரே மூச்சில் விறுவிறுப்புக் குன்றாமல் பேசிவிட்டேன். 'ஒரே டேக்கில் ஓ.கே.' என்று நம்மூரில் சொல்வார்களே அப்படி!

பேசியதை அப்படியே கேட்டு மகிழ்ந்துவிட்டு அனைவரும் வெளியே கிளம்பினோம்.

சமய உரிமை குறைவாயுள்ள நாடுகட்குச் செய்தி போய்ச் சேர வேண்டும் என்பது தான் இந்த மையத்தின் நோக்கம். இங்கு 44 நாடுகளைச் சேர்ந்த 60 தொழில் நுட்பப் பணி யாளர்கள் உட்பட 360 பேர் பணிபுரிகின்றனர். 200 பகுதி நேரப் பணியாளர்களும் உண்டு. இந்தியப் பிரிவில் நான்கு மொழிகளுக்காக 11 முழு நேரப் பணியாளர்களும் 2 பகுதி நேரப் பணியாளர்களும் உள்ளனர்.

இந்த மையம் முழுவதும் இயேசு சபையினரால் நிர் வகிக்கப்படுகிறது. தமிழ்ப் பிரிவின் தலைவராக நண்பர் கிறிஸ்டோபர் திகழ்கிறார்.

மார்க்கோனியைப் பெருமையோடு நினைக்கும் நாம் மாசினியை மறக்க முடியுமா? இத்தாலி நாட்டின் எழுச் சிக்குக் காரணமான மாவீரன் அல்லவா அவன்? அதிலும் இளைஞர்களின் எழுச்சிக்குத் தன் பேச்சாலும் செயலாலும் பெரிதும் வழிகாட்டியவன் அவன்.

"எழுந்திருங்கள். இப்போதே எழுச்சிபெறத் தவறிவிட்டால் பின்னால் தடைகள் அதிகமாகி விடும்" எனும் புகழ்மிக்க வரிகளை மொழிந்தவன் அவன்.

'Rise! oh! Rise! Rise today; tomorrow the obstacles will be greater' எனும் வரிகளை நினைத்துக் கொண்டேன்.

வத்திகான் அரண்மனை - வத்திகான் மாதா கோயில் என்றால் உலகமே வியப்போடு பார்க்கும்போது நாங்கள் வியக்காமல் இருப்போமா! போப்பாண்டவர் கோபுர உச்சியில் நின்று உரையாற்றும்போது கூடி நின்று கேட்க மிகப்பெரிய திடல். அனைத்தும் வெள்ளைக்கல் தரையாக இருக்கிறது.

மாளிகையின் முன்புறம் உள்ள தூண்கள் எல்லாம் நம்மூர்த் திருமலை நாயக்கர் மண்டபத் தூண்களைப் போல் அவ்வளவு பெரியவை. மாதா கோயிலின் உள்ளே சென்று

பார்த்தோம். அந்த அழகு. அந்த அமைதி. அதனால் மனத்தில் ஏற்படும் ஓர் உணர்வு. மைக்கேல் ஏஞ்சலோவின் கைவண்ணத்தில் நிமிர்ந்து நிற்கும் சிலைகள். இயற்கையான தோற்றத்தை அப்படி அப்படியே கொண்டு வந்து நிறுத்தியுள்ள அவரது கைவண்ணம்!

மேலே பார்த்துவிட்டுச் சுரங்க வழிகளில் இறங்கி நடந்தோம். அங்கும் ஓர் உலகம். மறைந்த போப்பாண்ட வர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் முறையாகப் பேணப்பட்டிருந்தன. அந்தந்த இடங்களிலே சிலர் சேர்ந்து தொழுவதற்கான வழிபாட்டுக் கூடங்கள். அனைத்துமே பளிங்குக் கற்களால் ஆனவை.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் அங்கே செலவிட்டு விட்டு வீட்டுக்குப் புறப்பட்டோம்.

எல்லா நாடுகளிலும் அமைந்துள்ள போக்குவரத்து ஒழுங்கைப் பார்த்து வியந்த எனக்கு உரோமில் சற்று வேறுபாடான அனுபவம் நேர்ந்தது. மகிழுந்து மற்றும் பேருந்துகள் எல்லாம் சிவப்பு விளக்குமுன் பொறுமையாகக் காத்திருக்க, சில மிதியுந்துக்காரர்கள் மட்டும் (Motorcyclists) இங்குமங்கும் பார்த்துவிட்டு வண்டிகளைக் கிளப்பிக் கொண்டு போகிறார்கள். இந்த வரம்பு மீறல் ஒன்றுதான் 'இந்தியத் தன்மை' வாய்ந்ததாக எனக்குப் பட்டது. எல்லா ரும் அப்படியா என்றால் இல்லை.

அது மட்டுமா? உரோம் நகரில் ஒன்றிரண்டு பிச்சைக் காரர்களும் தென்பட்டார்கள். வேறு நாடுகளில் பார்க்காத நிலை இது. உரோம் நகர அரசு இதில் கவனம் செலுத்தி இந்த ஒரு சில பிச்சைக்காரர்களுக்கும் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்துவிட்டால் நாடு எவ்வளவு நன்றாக இருக்கும்? ஆனால் இந்தப் பிச்சைக்காரர்கள் நம் தமிழர்கள் அல்லர். மலேசியாவில் சில தமிழர்கள் பிச்சையெடுத்து நம் மானத்தை வாங்குவது போல் இவர்கள் நமக்குப் பாதிப்பை உண்டாக்கவில்லை. பிச்சை எடுப்பவர் இத்தாலிக்காரர் என்றாலும் இது உரோமுக்கு இழுக்குத்தானே!

இங்கு குடிநீர் மிகவும் சுவையாக இருப்பது ஒரு சிறப்பு. வேறு நாடுகளிலும் 'மினரல்' நீர் பாதுகாக்கப்பட்ட நீர் முறையாகக் கிடைத்தாலும், குழாய் மூலம் தவறாமல் வழங் கப்பட்டாலும் உரோம் நகரக் குடிநீர் சற்றுச் சுவையாகவே இருந்தது.

இங்குள்ள லிரா நாணயம் நம்மை வியக்க வைக்கிறது. திருவாசகமும், ஆண்டவரும் சில டாலர்களை மாற்றி னார்கள். ஓர் இலட்சம் லிராவுக்கு மேல் வாங்கிப் பையில் திணித்தார்கள். 'உரோமில் வந்தாவது நீங்கள் இருவரும் இலட்சாதிபதிகள் ஆனது பற்றி மகிழ்ச்சி' என்று பாராட் டினேன். இந்த இறுமாப்பு சிலமணி நேரம்தான். இடங் களைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஓர் உணவகத்தில் அமர்ந் தோம். வெயில் கடுமை தாங்காமல் குளிர்ந்த பானங்களை வரவழைத்தோம். உரொட்டித் துண்டுகளும் சாப்பிட்டோம். பட்டியலைக் கேட்டால் 8700 லிரா என்றிருந்தது. இந்த வேகத்திலேயே தோழர்கள் காசைக் கரைத்துக் கொண்டி ருந்தார்கள்.

அன்று மாலை, தமிழகத்திலிருந்து இங்கு வந்து இறைப் பணி புரிந்து வரும் சகோதரிகளாகிய கன்னிமார்கள் எங் களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தனர். அவர்களது இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டோம். நகருந்தில் சென்று இறங்கி, சிறிது தொலைவு நடந்து அவர்களது இருப்பிடம் சென்றோம். அவர்கள் அளித்த உணவு அப்படியே நம் வீட்டுணவு. தமிழகத்துக் குடும்ப உணவு. ஆம்! வெள்ளரிக் காய், முருங்கைக்காய் மட்டுமின்றிக் கத்தரி வற்றல் குழம்பும் ஊற்றி உப்புக்கண்டமும் வறுத்து வைத்தால் கேட்க வேண்டுமா! அண்மையில் தமிழ்நாடு சென்று வந்த சகோதரி ஒருவர் கொண்டு வந்த உப்புக்கண்டம். நான் மிகவும் விரும்பிச் சாப்பிட்டேன். சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டோம்.

இப்போது வீட்டுக்குத் திரும்புவது எப்படி என்று சிந்தித்தோம். பக்கத்தில் தங்கியிருந்த பாதிரியார் வண்டி வைத்துள்ளார். அவரிடம் சென்று கேட்டார்கள். உடனே

ஒப்புக் கொண்டார். சிறிது நேரத்தில் வண்டியுடன் வந்து நின்று விட்டார். இப்போது சிக்கல் ஒன்று. கி.ஆ.பெ. உட்பட நாங்கள் ஐவர். கிறிஸ்டோபர் மற்றும் ஒரு நண்பர். இத்தனை பேரும் ஒரே வண்டியில் எப்படிப் போவது? நம்மூராக இருந்தால் எல்லோரையும் ஒரே வண்டிக்குள் அடக்கி விடுவார்கள். ஒருவர் மடியில் ஒருவர் அமர்ந்து உரிய இடத்துக்கும் போய் விடுவார்கள். ஆனால் பாதிரியார் அனைவரையும் ஒரே வண்டியில் அழைத்துச் செல்வது சட்டத்திற்குப் புறம்பானது என்று தெரிவித்து விட்டார். ஆனால் அவரே சொன்ன மாற்றுத் திட்டம்தான் அந்த மாமனிதரை எவ்வளவோ உயரத்தில் தூக்கி வைத்துவிட்டது.

சிலரை முதலில் கொண்டு போய் விட்டுவிட்டு மீண்டும் வந்து பிறரை அழைத்துச் செல்வதாகக் கூறினார். அதைப் போல இரண்டு நடை மகிழுந்து ஓடியது. நம்மூரில் உதவுவார்கள். ஆனால் இப்படி ஒரு நிலை வந்தால் இதையே சாக்காக வைத்துக் கொண்டு வண்டியைக் கிளப்பிக் கொண்டு போய் விடுவார்கள்.

பாதிரியார் சட்டத்தையும் மதிப்பவர்; மனித நேயத்திலும் உயர்ந்தவர்; மறக்க முடியாதவர்.

சகோதரிகளிடம் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டோம். அனைவரும் எங்கள் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். கி.ஆ. பெ.வி. கிறிஸ்டோபருடன் அவர் வீட்டுக்குப் போய்விட்டார்.

சிறிது நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம். நாளை ஊர் செல்வதால் பெட்டியை ஒழுங்கு செய்து கட்டினோம். தோற்பை தனியாக-துபாயில் சிறிது பொருள் வாங்கி நிரப்ப அதில் கொஞ்சம் இடமும் விட்டு வைத்தோம். பெட்டியை இறுக்கிப் பூட்டினோம். பூட்டை ஒருமுறை ஆட்டிப் பார்த்துக் கொண்டோம். உரோமில் அனுப்பப்படும் பெட்டியைப் பம்பாயில்தானே எடுக்க வேண்டும். அதனால் தான் இவ்வளவு கவனம்!

எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டுப் படுத்து விட்டோம். ஆனால் படுக்கத் தொடங்கிய சில மணித்துளிகட்

குள் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. யாராக இருக்கும் இந்த நேரத்தில் என்று பார்த்தால் சகோ. தனசேகரன், அவரைச் சுற்றி இன்னும் 6, 7 பேர் அனைவரும் இளங் குருமார்கள். எமது விடுதியின் இன்னொரு புறத்தில் தங்கி யிருப்பவர்கள். பகலில் எல்லாம் உரோமாபுரியின் மாதா கோயில்கள், ஆராதனைக் கூடங்கள் ஆகியவற்றுக்குச் சென்று திரும்பிய அவர்கள் நாங்கள் இங்கே தங்கியிருப்பதைக் கேள்விப்பட்டுப் பார்க்க வந்திருந்தனர். தமிழகத்திலிருந்து பயிற்சிக்காக இங்கு வந்திருப்பவர்கள் அவர்கள். வந்து நாளாயிற்று. எனவே, எங்களைப் பார்க்க வேண்டும் எனும் தாகம் ஏற்பட்டுவிட்டது. அதிலும் வந்தவர்களில் பலர் மதுரை யில் கருமாத்தூரில் உள்ள அருளானந்தர் கல்லூரியில் உள்ள இளங்குருமார் இல்லத்தில் இருந்து பயிற்சி பெற்றவர்கள். எனவே மதுரைக்காரனாகிய என்னைப் பார்ப்பதில் மேலும் கொஞ்சம் கூடுதலான ஆர்வம். மிகுந்த அக்கறையோடு பல செய்திகளைப் பறிமாறிக் கொண்டனர். கையோடு படப் பெட்டியும் (Camera) கொண்டு வந்ததால் படமும் எடுத்துக் கொண்டனர். மிகுந்த அன்போடு விடைபெற்றுக் கொண் டனர். அவர்களை அனுப்பி விட்டுப் படுக்கைக்குச் சென்ற போது இரவு மணி 12.40.

24.8.93 காலையில் கிறிஸ்டோபர் வீட்டில் சிற்றுண்டி சாப்பிட்டோம். குடும்பத்தாருடன் படம் எடுத்துக் கொண் டோம். சகோ. தனசேகரன் மற்றும் உள்ள சகோதரர்கள் ஏற்பாட்டில் ஒரு வண்டி வந்து சேர்ந்தது. அதிலேயே அனைவரும் புறப்பட்டோம். அந்த வண்டியும் வழியனுப்ப வந்த சிலரும் அவரவர் அலுவலுக்குச் செல்ல வேண்டி யிருந்ததால் காலை 9 மணிக்கெல்லாம் வான்திடல் வந்து விட்டோம். கிறிஸ்டோபரும் மேலும் ஒரிருவர் மட்டும் எங்க ளோடு இருந்தனர். பயணச் சீட்டுகள் உறுதிப்படுத்தப்படு வதில் (Reconfirmation) எங்குமே சிக்கல் எழவில்லை. திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் எதுவும் இல்லாததால் சென்னை திரும்பும்வரை அனைத்தும் உறுதி செய்யப்பட் டிருந்தன.

இந்த நேரத்தில் ஒரு செய்தியை விளக்கியாக வேண்டும். நம் ஊர்த் தொடர்வண்டி நிலையங்களில் சிவப்புச் சட்டை யில் கையில் பட்டையும் தலையில் பாகையும் அணிந்து வேகம் வேகமாக நம் பெட்டி படுக்கையை நோக்கிக் கைநீட்டி ஓடி வருவோர் (Porters) பலரைப் பார்க்கிறோம். இவர்களாவது விரும்பி ஓடி வந்து சுமை தூக்க முன் வருபவர்கள். ஆனல் பேருந்து நிலையத்தில் உள்ள சுமை தூக்குவோர் இருக்கிறார்களே அசகாய சூரர்கள்; அதிரடிப் பேர்வழிகள். நாம் பேருந்தை விட்டு இறங்கி, பேருந்தின் உச்சி (top)யில், மேல் தளத்தில் கிடக்கும் சுமையை அடையாளம் காட்டுவதற்குள் அவர்களே மேலே ஏறி மின்னல் வேகத்தில் கீழே கொண்டு வந்து விடுவார்கள். அப்புறம் என்ன! கூலியைக் கொடுக்க வேண்டியது தானே என்பீர் கள். அதில் தானே சிக்கல்! கூலியை நிர்ணயம் செய்பவர் களே அவர்கள் தானே! சுமைக்கு உரியவர் பேச முடியாத நிலை. சுமையைவிட அவர்கள் சொல்லும் கூலி பெரிய சுமையாக இருக்கும்.

இது போகப் பேருந்து நிலையத்தில் சற்றுக் கூடுதலான சரக்கோடு இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தாலே போதும்! எங்கிருந்து வருவார்களோ இந்தச் சுமைதூக்கிகள். ஒரே நேரத்தில் ஐந்தாறு பேர் பாய்ந்து நம் கையில் இருப்பதைப் பிடுங்கிக் கொண்டு நீங்கள் 'பின்பற்றியே' ஆக வேண்டும் எனும் 'மௌனக்' கட்டளையோடு புறப்பட்டு விடுவார்கள். வேறு வழி! பிறகு மீண்டும் கூலி விவகாரம் தான்!

இவ்வளவு முன்னுரை ஏன்! நம் நாட்டைப் பற்றி இவ்வளவு விளக்கம் ஏன் என்பீர்கள்.

நான் சென்று கண்ட பெர்லின், பாரிசு, உரோமாபுரி ஆகிய எங்குமே இத்தகைய இழுபறி நிலையும் கூலி பேசு வதில் ஏற்படும் கூச்சல் குழப்பமும் இல்லை!

அடடே! அவ்வளவு ஒழுங்கு படுத்தி வைத்திருக்கிறார் களா என்று தானே வியக்கிறீர்கள்! ஒழுங்குபடுத்தி வைக்க வில்லை. சுமை தூக்கிகளே இல்லாமல் ஒழித்தே வைத் திருக்கிறார்கள்.

ஆம்! அங்கு மட்டுமல்ல! நான் சென்று கண்ட பத்து நாடுகளிலும் வானூர்தி நிலையங்களிலும் பிற இடங்களிலும் சுமை தூக்கிகளே இல்லை. அவரவர் சுமையை அவரவர் தான் சுமக்க வேண்டும். அந்த வகையில் நம்மூரில் 'சாமான் சட்டுமுட்டு' என்று பெருஞ் சரக்கையே எடுத்துச் செல்லும் போக்கு அங்கு இல்லாமல் அளவாக எடுத்துச் செல்லும் கடுமையான உணர்வைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

நம் நாட்டிலும் வானூர்தி நிலையங்களில் இப்போது சுமை தூக்கிகள் இல்லை. அங்கேயே ஏராளமாக நிற்கும் சிறிய தள்ளுவண்டி (டிராலி)களில் நம் சுமையை வைத்துத் தள்ளி வந்து வெளியில் நம் மகிழுந்து நிற்கும் இடம் வரைக் கும் கொண்டு வந்து சுமையை எடுத்துக் கொண்டு அப்படி அப்படியே விட்டுவிட்டுப் போய்விடலாம். அங்குள்ள பணியாளர்கள் அவற்றை முறையாக உள்ளே கொண்டு போய் விடுவார்கள்.

பாரிசில் ஒரு பல்பொருள் அங்காடியில் (Plaza) இதைவிட ஒருபடி மேலே போய்விட்டார்கள். உள்ளே போகும் போதே ஒரு தள்ளுவண்டி எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் 10 பிராங்க் நாணயத்தை ஒரு துளையில் செலுத்தினால்தான் தள்ளுவண்டியின் பூட்டுத் திறக்கும். பிறகு உள்ளே சென்று பொருள்களை வாங்கிக் கொண்டு வெளியே வந்து விட்டால் போதும். வண்டியை எடுத்த இடத்தில் விட்டுப் பூட்டை இழுத்தால் பூட்டிக் கொள்ளும். நாம் செருகிய 10 பிராங்க் நாணயம் வெளியில் வந்துவிடும். தள்ளுவண்டி 'அதன் இடத்தில்! காசு நம் இடத்தில்!

உரோமிலிருந்து துபாய்க்கு AZ 730 அலிடாலியா வானூர் தியில் புறப்பட வேண்டும். பெட்டிகளையெல்லாம் பதிவு செய்தோம். அனைத்துப் பெட்டிகளையும் என் பெயரிலோ ஆண்டவர் பெயரிலோ திருவாசகம் பெயரிலோ பதிவு செய் திருக்க வேண்டும். நாங்கள் மூவரும் சென்னையில் இருப்ப வர்கள். ஏதாவது சிக்கல் என்றால் சென்னையில் உள்ள நாங்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். ஆனால் எங்கள் கடவுச் சீட்டுகளை மொத்தமாக நீட்டி விட்டோம்.

ஐவரும் சேர்ந்து பயணம் செய்வதாகவும் கூறிவிட்டோம். எனவே மேலேயிருந்த அண்ணாமலையின் பெயரில் 'Annamalai & Co' என்ற தலைப்பில் அனைத்துப் பெட்டி களும் பதிவு செய்யப்பட்டு விட்டன. உரிய நேரத்தில் அனைவரும் நண்பர் கிறிஸ்டோபரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம். 7 மணி நேரப் பயணம். வழியில் 'அம்மான்' நகரத்தில் அரைமணி நேரம். பிறகு தொடர் பயணம். வீட்டை நோக்கித் திரும்புகிற மாடுகள் வண்டியை ஒரு பரபரப்போடு இழுத்துச் செல்லுமே அதைப் போன்ற பரபரப்பு. துபாய்க்கு இந்த வானூர்தி இரவு 9.40க்குப் போய்ச் சேரும். 10.40க்கெல்லாம் பம்பாய் செல்லும் வானூர்தியில் ஏற வேண்டும். இடையில் ஒரு மணி நேரம் தான். அதற்குள் துபாய் வானூர்தி நிலையக் கடைக்குள் (Duty free shop) ஒன்றிரண்டு பொருள் வாங்கிக் கொள்ள வேண்டும். பெட்டிகள் மாறிவிட்டனவாவென்றும் பார்க்க வேண்டும். இந்தப் பரபரப்புடன் துபாயை நெருங்கிக் கொண்டிருந்தோம். ஏற்கனவே வானூர்திஅரைமணி நேரம் சுணக்கத்தில் பறந்து கொண்டிருந்தது. இதுவேறு எங்களை வாட்டிக் கொண்டிருந்தது. சொல்லி வைத்தது போல் வானூர்தி காலம் தாழ்ந்தே வந்தது. 35 மணித்துளிகள் தான் இருந்தன. அடுத்துப் பம்பாய் புறப்படும் DK 500 வானூர்தியில் ஏற வேண்டும். வந்து இறங்கும்போதே வானூர்தியில் அறிவிப்பு, 'பம்பாய் செல்பவர்கள் உடனே செல்ல வேண்டும் என்று!' பரக்கப் பரக்க வந்தோம். பயணச் சீட்டை உறுதி செய்து நுழைவு அட்டை (Boarding Card) பெற்றுக் கொண்டோம். பெட்டியைச் சரிபார்க்க நேர மில்லை. உரோமில் எங்களுடன் சேர்ந்து கொண்ட செய லட்சுமி மட்டும் ஒருவரிடம் அடையாளம் சொன்னார். நாங் களும் சொல்லியிருக்க வேண்டும். வந்துவிடும் எனும் நம் பிக்கையில் வேகமாகப் போய் விட்டோம். பொருள் வாங்க வேண்டும் எனும் ஆவல் அதைக் கெடுத்தது. உள்ளே நுழைந்து DK 500க்குள் நுழையும் வாயிலில் சென்று கடைக் குள் போய்விட்டு வந்து விடுவதாகச் சொன்னோம். ஆனால் வானூர்தி அலுவலர்கள் அனுமதிக்கவில்லை. ஏற்கனவே

வானூர்தியில் பலரும் ஏறிவிட்டதாகக் கூறி எங்களை வலுக் கட்டாயமாக உள்ளே தள்ளி விட்டார்கள். பணம் இருந்தும் பயனில்லை. வாங்க விரும்பிய பொருளை ஏற்கனவே இடமும், பொருளும், தொகையும் பார்த்து வைத்து விட்டு வந்தும் நேரமின்மை காரணமாக வாங்க முடியவில்லை. வானூர்தியில் ஏறி அமர்ந்தோம்.

அந்த வானூர்தி சரியான நேரத்தில் துபாய் நேரம் இரவு 10.45க்குப் புறப்பட்டு விட்டது. ஒவ்வொருவர் இருக்கைக்கு முன்னும் ஒரு சிறிய தொலைக்காட்சி - இரண்டு மூன்று அலைவரிசைகள். வழியில் மாற்றிப் மாற்றிப் போட்டு எதையாவது பார்த்துக் கொண்டு வந்தோம். வழக்கமான சிற்றுண்டி. சில மணித்துளிகள் கண்ணயர்வு. வானூர்தி யின் நடுவில் ஒரு பலகையில் துபாய் - பம்பாய் வரைபடம். பயணவழி. வானூர்தி எந்த இடத்தில் பறக்கிறது என்பதை உறுதி செய்யும் அடையாளக் குறி. தூரம் பற்றிய அறிவிப்பு. எல்லாம் தெளிவாக இருந்தன.

துபாயில் ஒரு வி.சி.ஆர். அல்லது மகிழுந்து வானொலி வாங்கி வரலாம் என்று நினைத்தேன். வீட்டிலும் உறுதி யளித்திருந்தேன். அதைச் செய்ய முடியவில்லையே என்று வருந்தினேன். பெட்டிகள் சரியாக வந்திருக்குமா எனும் 'ஐயப்பாடு' மட்டும் அவ்வப்போது எழுந்து எழுந்து அடங் கியது. பொருள் வாங்கும் ஆசையை விட்டுவிட்டுப் பெட்டியில் கவனம் செலுத்தியிருக்கலாமோ! நாட்டுக்கு நாடு மாறும் நேர மாறுதலும் கடந்து விடியற்காலை சரியாக 3.00 மணிக்குப் பம்பாயில் தரையிறங்கினோம். நண்பர் பொற் கோவின் புதல்வர் அன்பழகன் அங்கு சுங்க அலுவலராக உள்ளார். அவர்தான் வானூர்தி நிலையத்துக்குள்ளேயே வரவேற்றார். மிகுந்த தெம்போடு வந்து கடவுச் சீட்டுகளில் முத்திரை வாங்கிக் கொண்டு பெட்டிகளை எடுக்கும் இடத்துக்கு வந்தோம். பெட்டிகள் வரத் தொடங்கின. வார்த் தடத்தில் கவனத்தோடு பார்த்துக் கொண்டு நின்றோம். சிறிது நேரத்தில் சேலம் செயலட்சுமி அவர்களது பெட்டி கள் வந்துவிட்டன. எங்களுக்கு ஒரு நம்பிக்கை. பாரிசில்

போட்ட அவர் பெட்டியே வந்து விட்டபோது எங்கள் பெட்டிகள் அதுவும் உரோமில் போடப்பட்டவை வராமலா போய்விடும் என்று நினைத்தோம். நம்பிக்கைக்கும் அவநம் பிக்கைக்கும் இடையே ஊசலாட்டம். வார்த்தடத்தில் அனை வரின் கண்களும் பதிந்து நின்றன. ஆனால் எங்கள் ஐவரது பெட்டிகளும் வரவில்லை. வரவே இல்லை. வார்த்தடம் நின்று ஓய்ந்து விட்டது. எங்களுக்கு எப்படியிருந்திருக்கும். துபாயில் வேகமாக வானூர்தி மாறினோம் எங்கள் பெட்டி களை மட்டும் DK 500 இல் ஏற்றத் தவறிவிட்டனர். அதன் விளைவு இது. கி.ஆ.பெ.வி. சினத்தின் உச்சிக்கே போய் விட்டார். எனக்கும் அடக்க முடியாத சினம் தான். யாரிடம் சினந்து கொள்வது? இரண்டு மணிநேரம் நாங்களும் சுங்க அலுவலரான தம்பி அன்பழகனும் எவ்வளவோ முயன்றோம். அடுத்து வருகிற வானூர்தியில் வந்து விடாதா என்று கூடப் பார்த்தோம். வரவில்லை. காலை 8.30 மணிவரை வரவில்லை. வேறு வழியின்றிப் புகார் பதிவு செய்து விட்டு அனைவரும் உள்நாட்டு வானூர்தி நிலையத்துக்குக் கிளம்பினோம். பம்பாயில் பொற்கோவும் வேறு சிலரும் வந்து மாலை துண் டெல்லாம் அணிவித்து வரவேற்றனர். உவகையை இழந்து விட்டு ஒப்புக்கு அவற்றைப் பெற்றோம். வீட்டுக்கு வெறுங் கையோடு போக வேண்டும் எனும் வருத்தம். பெட்டி ஒழுங் காக வந்து சேருமா என்ற கவலை ஒருபுறம். நம்நாட்டு வானூர்தி நிலையத்துக்குள் பெட்டி மாட்டினால் என்ன ஆகும் என்பது தெரிந்திருந்த காரணத்தால் ஏற்பட்ட கலக்கம் மறுபுறம்.

ஆர்வத்தோடு புறப்பட்ட நாங்கள் அரைகுறை மகிழ்ச்சி யோடு 25.8.94 காலை 9 மணிக்கு IC 972 வானூர்தியில் ஏறி அமர்ந்தோம். தம்பி அன்பழகனிடம் பொறுப்பை ஒப்படைத் தோம். பெட்டிகளைச் சென்னை வானூர்தி நிலையத்தில் எடுத்துக் கொள்வதாக எழுதிக் கொடுத்தோம். முன்னைய பயணத்தில் என் பெட்டி இலண்டனிலிருந்து பாரிசுக்கு வந்து சேரவில்லை. பாரிசு வானூர்தி நிலையத்தில் புகார் செய் தோம். அவர்கள் புகாரைக் கணிப்பொறியில் பதிவு செய்து

கொண்டு இலண்டனோடு தொடர்பு கொண்டு அரை மணி நேரத்தில் என் பெட்டி அங்கேயே இருப்பதாகவும் கட்டப் பட்டிருந்த அடையாளத்தாள் (tag) அறுந்து போய் விட்டதால் எந்த வானூர்திக்குரியது என்று தெரியாமல் போய் விட்ட தாகவும் அடுத்த வானூர்தியிலேயே பாரிசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துவிட்டனர். மின்னல் வேகத்தில் நம் பெட்டியின் இருப்பிடமறிந்து சொன்ன பாரிசு வான்திடல் நிர்வாகப் பெருமையை இப்போது நினைத்துக் கொண்டேன். அதுமட்டுமன்று, பாரிசில் நாம் தங்கியுள்ள விடுதியின் முகவரியை வாங்கிக் கொண்டார்கள். நான் அரசுச் சார்பில் சென்றதால் முதல் நிலை விடுதியில் (Five Star Hotel) தங்கியிருந்தேன். முகவரியைக் கொடுத்து விட்டுக் கிளம்பினோம். மாலையில் சுசீலா வீட்டுக்கும் நண்பர்கள் வீட்டுக்கும் சென்று விட்டு அறைக்குத் திரும்பினால் நம் பெட்டி நம் அறைக்குள் வைக்கப்பட்டு நம்மை வரவேற்றுக் கொண்டிருந்தது. பாரிசு வான்திடல் நிர்வாகமே ஒரு வண்டியில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து அறையில் வைத்து விட்டுப் போயிருக்கிறது! இதை இப்போது நினைத்தாலும் வியப்பு.

ஆனால் இன்று... பம்பாய் வான்திடல் நிர்வாக மெத் தனத்தை எண்ணி எரிச்சல். இந்த எரிச்சலோடும் ஊருக்குத் திரும்புகிறோம் என்று எரிச்சலையும் மீறி ஏற்பட்ட மகிழ்ச்சி யோடும் காலை 10.45 மணிக்குச் சென்னை மீனம்பாக்கம் வான்திடல் வந்து சேர்ந்தோம்.

மகன் மெய்மொழி உள்ளேயே வந்து வரவேற்றான். படிக்கட்டுகளில் இறங்கிப் பொது அறையை அடைந்தவுடன் மாபெரும் வரவேற்பு காத்திருந்தது. மாநில இளைஞர் அணிச் செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் அவர்களும் தென் சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி சைதை கிட்டு அவர் களும் மாபெரும் வரவேற்பை அளித்தார்கள். செங்கை சிவம், அன்னூர் அண்ணன் தங்கவேலு, பல்லவபுரம் கருணாநிதி, ஆதி. சங்கர், சாமி. நாகப்பன், பாண்டிவளவன், செல்வ. பொன்னி வளவன் என்று ஒரு பெரிய அன்பர்கள் கூட்டமே

திரண்டு நின்று வரவேற்றது. கி.ஆ.பெ.விக்கும் எனக்கும் அண்ணாமலையார், திருவாசகம் ஆண்டவர் ஆகியோர்க்கும் சேர்த்தே வரவேற்பளிக்கப்பட்டது. பெட்டிக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை என்பதை மட்டும் சிலரிடம் குறிப்பாகச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டோம். வெளிநாடு சென்று வந்தோம் எனும் முறையில் வீட்டிலும் அன்பான வரவேற்புத்தான். பெட்டியை ஆவலோடு எதிர்பார்க்கத் தானே செய்வார்கள். அந்த வகையில் வீட்டார்க்குப் பெரிய ஏமாற்றம்தான். பெட்டி இல்லாததால் அவர்கள் தந்ததே ஒரு 'வெட்டி' வரவேற்பாக ஆகிவிட்டது. இரண்டொரு நாளில் வந்துவிடும் எனும் நம்பிக்கையில் அனைவரும் பழைய நிலைகளுக்குத் திரும்பினோம். மகிழ்ச்சியோடு புறப்பட்டு விட்டு, வீட்டுக்கு வரும்போது அதே முழு மகிழ்ச்சியல்லாமல் ஒரு 'மூளி'த்தன்மை ஏற்பட்டு விட்டதே என்று எனக்கும் வருத்தம்தான்.

சரியாகப் பகல் 1.20க்குப் புறப்பட்டுத் தலைவர் இல்லம் சென்றேன். பகல் 1.40க்குத் தலைவர் ஆலிவர் இல்லம் வந்து இறங்கினார். வணக்கம் தெரிவித்து விட்டுச் சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றேன். அன்புடன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, அந்தப் பசி நேரத்திலும் 10 மணித்துளிகள் உட்கார வைத்துப் பயண விவரங்களைக் கேட்டு மகிழ்ந்தார். மீண்டும் மாலையில் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றேன். எங்கள் தலைவரின் அன்பையும் என் போல்வார் மீது வைத்திருக்கும் பாசத்தையும் எண்ணி நெகிழ்ந்தேன். அந்த நெகிழ்ச்சியுடன் வீடு வந்து சாப்பிட உட்கார்ந்தேன். நீண்ட நாட்களுக்குப் பின் சொந்த வீட்டுச் சாப்பாடு. நாவெல்லாம் ஒருவகையாக மாறியிருந்தது. அந்தக் கசப்பு, கரிப்பு எல்லாம் மாற்றிப் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும் எனும் நினைவோடு உணவை விழுங்கிக் கொண்டிருந்தேன்.

என் பயணம் முடிந்தது. ஆனால் கதை முடியவில்லையே!

தொலைபேசியில் பம்பாயில் உள்ள அன்பழகனுக்குத் தொடர்பு கொண்டோம். இன்னும் பெட்டிகள் வரவில்லை என்றார். நானும் தம்பி வள்ளுவனும் மாற்றி மாற்றிப் பம்பாய்க்குப் பேசிக் கொண்டிருந்தோம். அந்த வகையில் நண்பர் பொற்கோவையும் அன்பழகனையும் வெகுவாகத் தொல்லைப்படுத்திவிட்டோம். துபாயிலிருந்து பெட்டி பம்பாய் வந்ததும் உடனே சென்னைக்கு அனுப்பிவிட்டால் பெட்டியைப் பாதிப்பு ஏதும் இன்றி எடுத்துக் கொள்ளலாமே என்ற கவலைதான் இவ்வளவு நெருக்கடிக்குக் காரணம்.

பெட்டி துபாயிலிருந்து இரண்டு நாட்களுக்குப் பின் வந்ததாக அறிந்தோம். உடனே சென்னைக்கு அனுப்பு மாறு அன்பழகனிடம் வேண்டிக் கொண்டோம். பம்பாயில் சுங்க அலுவலரான அவரால் அதைச் செய்ய முடியும் என்றுதான் வற்புறுத்தினோம். அவரும் கடும் முயற்சி எடுத்துக் கொண்டார். அவரது முயற்சியில் எந்தக் குறையும் காண முடியாது. ஆனாலும் பம்பாயில் பெட்டிகளைச் சரக் கறைகளில் போட்டுவிட்டார்கள். கேட்டபோது 'Cooling Time" வேண்டும் என்று ஒன்றிரண்டு நாட்கள் வைத்து விட்டதாகச் சொன்னார்கள். இது 'Cooling Time" என்பதை விடப் பயணிகளை முட்டாளாக்கும் 'Fooling Time" என்றே கருதினேன். அவ்வளவு கடுப்பு எனக்கு. தம்பி அன்பழகனும் இன்றைய வானூர்தியில் எப்படியும் அனுப்பிவிடுவேன் என்பார். அதை நம்பி, திருவள்ளுவனும், ஆண்டவரும், மகன் பாரியும் மகிழுந்தையம் எடுத்துக் கொண்டு மீனம் பாக்கம் போவார்கள். வரவில்லை என்று திரும்பி வருவார்கள். என் பெட்டியை எடுக்க ஆண்டவருக்கு உரிமை வழங்கியிருந்தேன் (authorisation). எடுத்தவுடன் கொண்டு வரப் பாரி இருந்தான். ஆனால் இரண்டு மூன்று முறை இப்படி ஏமாந்தோம். சரியாக 6 நாள் கழித்துப் பெட்டிகள் மீனம்பாக்கம் வந்து சேர்ந்துவிட்டன. ஆண்டவரும், திரு வள்ளுவனும், பாரியும் போய்க் கேட்டபோது புதிய சிக்கல். எல்லாப் பெட்டிகளும் அண்ணாமலையார் பெயரில் இருப்ப தாலும் சுங்கத்துக்குரிய வெளிநாட்டு வருகை என்பதாலும்

அண்ணாமலை நேரில் வந்து வாங்க வேண்டும்; அல்லது அவரது உரிமை பெற்ற மடலுடன் ஒருவர் வர வேண்டும் என்று தெரிவித்துவிட்டனர். அவர்க்ள் சொல்வது சரிதான். இப்போது பெட்டி மீனம்பாக்கத்தில் மேலும் ஒருநாள் கிடந்தது. உடனே திருச்சியில் உள்ள அண்ணாமலையார்க் குத் தொலை பேசி அன்றிரவே புறப்படச் செய்தோம். அவரும் அங்கே திருச்சி கி.ஆ.பெ.வி.யிடம் நிறையக் 'கடி' வாங்கியிருப் பாரல்லவா? எனவே அவரும் உடனே புறப்பட்டு அடுத்த நாள் நேரடியாக மீனம்பாக்கம் நிலையத்துக்கு வந்துவிட் டார். நல்லபடியாக அனுப்பி வைத்த வள்ளு வனுக்கு இன்னும் கடமை முடியவில்லை. பெட்டிகளையும் நல்லபடியாகக் கொண்டு வந்து ஒப்படைத்துவிட்டால் நிறைவாக இருக்குமே என்று அவரும் போடாத தொலைபேசி இல்லை, அலையாத அலைச்சல் இல்லை. இவர்களுடன் ஆண்டவரும், பாரியும் இழுபட்டார்கள்.

கடைசியில் ஒருவழியாக ஐந்துபேருடைய பெட்டிகளை யும் கண்ணால் பார்த்துவிட்டார்கள். ஒருவழியாக வந்து சேர்ந்துவிட்டதே என்று பெருமூச்சு விட்டார்கள். ஒரு நொடிதான்! பெட்டிகள் உருப்படிக்கு ஐந்து என்றாலும் உருப்படியாய் வந்து சேரவில்லை. உடைக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் காட்சியளித்தன. இப்போது ஒரேயடியாகப் பெருமூச்சு விடவேண்டியதாயிற்று. இது பெருமூச்சு அன்று, இலக்கிய நடையில் சொல்லவேண்டுமானால் 'வெய்துயிர்ப்பு' எய்தினர். 'ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே!' என்றாளே கண்ணகி அந்தக் கொதிப்பு மூச்சு. ஆம்! பெட்டிகள் பாழ்பட்டிருந்தன. எப்படியும் உள்ளே யிருந்த பல பொருள்கள் போயிருக்கும் என்றே நம்பினர். எடுப்பதா வேண்டாமா என்ற நிலை. எனக்குத் தொலை பேசியில் தொடர்பு கொண்டனர். கேட்டவுடன் எனக்கும் சினம் கொப்பளித்தது. பழைய தமிழ்க்குடிமகனாக இருந் திருந்தால் நானே புறப்பட்டுப் போயிருப்பேன்; மீனம் பாக்கம் நிலையத்தில் அதிகாரிகட்கும் எனக்கும் இடையில் என்ன நடந்திருக்கும் என்பதை நீங்கள் ஊகித்து விடலாம்.

ஆனால் நான் பொறுமையாகிவிட்டேன். சிதைந்துள்ளது என்று எழுதிக் கொடுத்து அலுவலர்களின் கையொப்பத்துடன் பெற்றுக் கொண்டு வாருங்கள் என்று தெரிவித்தேன். அதன்படி பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். அறிவாலயத்திலிருந்து தலைவருடன் புறப்பட்டு அவரை வீட்டில் விட்டு விட்டு என் வீட்டுக்கு வந்து சேர்ந்து பெட்டியைப் பார்த்தேன்.

எல்லையற்ற சினம் வான் நிலைய அலுவலர்கள் மீது! மோதலைத் தொடர்வோமா என்று கூடக் கருதினேன். முதலில் பெட்டியில் வைக்கப்பட்டனவெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமே! அதற்குப் பிறகுதானே ஒரு முடிவுக்கு வரவேண்டும். திறந்து ஒவ்வொன்றாகப் பார்த்தேன். உரோமில் வாங்கி நான் ஆசையுடன் இட்டு வைத்த மூன்று பெரிய நிலக்கடலையையும் காணோம். கூட்டின் ஒரு பகுதி மட்டும் கிடந்தது. பெட்டியும் தோலால் ஆனது என்பதால் பம்பாயிலோ மீனம்பாக்கத்திலோ பெருச்சாளி புகுந்து விளையாடியிருந்தது. எலியைப் பிடிக்க எலிப்பொறியில் தேங்காய் அல்லது கருவாடு அல்லது வேர்க்கடலையை மாட்டி வைப்பார்கள். பெருச்சாளியை உள்ளே வரவழைக்க நானே நிலக்கடலையை வைத்த கதையாகிவிட்டது. வறுத்த கடலை என்னை அறுத்த கதைதான். பெருச்சாளி கடலையுடன் நிற்கவில்லை. சில துணிகளையும் பதம் பார்த்திருந்தது. பெர்லினில் அழகான பூவேலைப்பாடு அமைந்த இரு தலையணை உறைகள் வாங்கியிருந்தேன் அவை பெருச்சாளிக்கு இரையாகி இருந்தன. வேறு சில துணிகளும் வீணாகிவிட்டன. பெருச்சாளி அங்கேயே ஒன்றிரண்டு நாள் இருந்திருக்கும் போலிருக்கிறது. அந்த அளவுக்கு அவற்றின் திருவிளையாடல். பம்பாய், மீனம்பாக்கம் வானூர்திச் சரக்கறைகளில் பெருச்சாளிகள் வளர்க்கிறார்கள் போலும்.

பிறகு பார்த்தபோது வாங்கப்பட்டிருந்த தூவல்கள் (Pens) எழுதுகோல்கள் (Colour Pencils) ஆகியவற்றில் பலவும், சவர்க்காரம் முதலியனவும் எடுக்கப்பட்டிருந்தன. பெருச்சாளி

யால் கடிக்கப்பட்டு, கத்தியாலும் கீறப்பட்ட பிறகு கவிழ்த் தால் என்னென்ன விழ வாய்ப்புண்டோ அவையெல்லாம் பெட்டியிலிருந்து வெளியேறி விட்டன. இந்த வருத்தத்தோடு பெட்டியில் இருந்த மீதிப் பொருட்களை அள்ளி ஒரு மூலையில் எறிந்தேன்.

பம்பாய், மீனம்பாக்கம் வானூர்தி நிலையச் சரக்கறை களில் பெருச்சாளிகளை வளர்க்கிறார்கள் என்பதோடு நிற் காமல் அங்கெல்லாம் மனிதப் பெருச்சாளிகளே வளர்ந் தோங்கி வருகிறார்கள் என்பதை வெட்கத்தோடு சொல் லித்தானே ஆகவேண்டும்.

நீங்களே சொல்லுங்கள் – இலண்டனில் விடப்பட்ட பெட் டியைப் பாரிசில் அறையில் கொண்டு வந்து ஒப்படைத்த மேல்நாட்டு நாணயம் எங்கே? சொந்த நாட்டுக்காரரையே விழுங்கி ஏப்பமிடும் – திட்டமிட்டே திருடும் இந்தியாவின் தீய போக்கு எங்கே?

சுற்றுலாப் பயணிகட்கு என்ன பூரிப்பு! வெளிநாட்டி லிருந்து வருபவர்கள் இப்படி இந்தப் பெருச்சாளிகளிடம் மாட்டினால் எப்படியெல்லாம் பாராட்டுவார்களோ!

புரட்சிக்கவிஞர் நல்ல தமிழ்க்கனவு ஒன்று கண்டுவிட் டுத் திடீரென்று விழித்துத் தன் சுற்றுப்புறத்தைப் பார்ப்பார். சுற்றிலும் பார்த்துவிட்டுச் சொல்வார்.


'அந்தோ! நைந்த தமிழரோடு நானிருந்தேனே!' என்பார். நானும் அப்படித்தான் அலறினேன்.

ஆம்! விடுதலை அடைந்து 46 ஆண்டுகளாகியும் உருப் படியாக முன்னேறாமல் பின்னோக்கிப் போகும் இந்தியா வில் இந்தியக் குடிமகனாக, தமிழ்க் குடிமகனாக வாழ்கி றோமே என்று அலறினேன்.

தேவைப்படும் போதெல்லாம் வாய்ப்புள்ள இடங்களில் நான் புலம்பிக் கொண்டுதான் இருக்கிறேன்.

ஒரு மாதம் கழித்து ஒருநாள் (கைரேகை வல்லுநர்) நண்பர் தமிழ்மணியும் நானும் சந்தித்துக் கொண்டோம். அப்போது அவர் ஓர் உண்மையைச் சொன்னார். பெர்லினில் எங்களிடமிருந்து விடைபெற்றுப் பலநாடுகள் சென்றதாகவும், ஒரு மாதம் கழித்துத் தான் திரும்பியதாகவும் கூறினார். அந்த அளவுக்கு வெளிநாடுகளிலும் அவருக்கு வரவேற்பு. ஆனால் அவர் கூறிய அடுத்த செய்திதான் என்னைத் திகைப்புக்குள்ளாக்கியது. ஆம்! அவரது பெட்டியும் உடைக்கப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான மதிப்புள்ள மின்னியல் பொருட்கள் திருடப்பட்டதாகவும் இப்போது சுங்கத் துறையோடு போராடிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்.

தமிழ்க் குடிமகனின் இழப்பு இப்போது தமிழ்மணியின் இழப்பை விடச் சிறியதுதான். இப்படி நினைத்துத்தான் ஆறுதல் பெற முடியுமே தவிர இந்தியாவை நினைத்துப் பெருமைப்பட முடியவில்லையே, என்ன செய்ய?




இங்கிருந்து சென்றவர்களுடன்
கிருட்டிணமூர்த்தி ஆகியோர்




உரோமின் விலங்கு விளையாட்டரங்கம்



மேற்கு–கிழக்கு பெர்லினைப் பிரித்த சுவரில்
இடிக்கப்படாத பகுதி முன் நாங்கள்



டிஸ்னி உலகத்தில் கப்பலில் உலா - அருகில் செயற்கை மலை



பாரிசில் சுசீலா, கோவிந்தசாமி மற்றும் தோழர்களுடன்

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

GOLF நகைமாளிகை GOLF

உங்களுக்குத் தேவையான

எல்லாவிதமான நகைகளையும் குறுகிய காலத்தில் செய்து பெற்றுக் கொள்வதற்கும், ஆடவர், நங்கையர், சிறுவர்களுக்கான இறக்குமதி செய்யப்பட்ட உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள் அனைத்திற்கும்

பிரெஞ்சு அரசினால் 22 கரட் தங்கநகையென முத்திரை பதிப்பிக்கப்பட்டு வழங்கும் நகைமாளிகை

GOLF பல்பொருள் அங்காடி GOLF

மளிகைப்பொருட்கள்

பிரதி வெள்ளி தோறும் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறி, பழவகைகள், நண்டு, சுறா, இறால், மீன் வகைகள்
வார, மாத பத்திரிகைகள், சஞ்சிகைகள்
ஓடியோ கசெற்றுக்கள், கொம்பக்ற் டிஸ்குகள்
வீடியோ படக்கசெற்றுக்கள்
வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கும்

GOLF JEWELLERY
8, RUE DE PANAMA

GOLF ENTERPRISES
9, RUE DE SUEZ,

75018 PARIS.

TEL: 42 59 22 38, 42 51 18 74 FAX: 42 59 40 59






S P Q R
IMP CAESARI
NERVAE AVG




அடிகள் அரங்கம்

